

கல்கி
KALKI 22-6-1958
30

கல்கி
பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 17 | இதழ் 47

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

விளம்பி ஆனிமீ 8உ

பிரித்தாளும் முறையில் வாழ்க்கைத்தரம் உயராது!

குடியானவனை மறந்த குடியரசு என்ன சுகம் தரும்?

இது என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? குடியானவனை யார் மறந்தார்கள்? எல்லாச் சட்டமும் அவனுக்கு அனுகூலமாகவல்லவா செய்து வருகிறார்கள் என்று கேட்கலாம்.

உண்மையைக் கொஞ்சம் விரித்து விளக்கிச் சொல்லவே இப்படி ஆரம்பித்தோம்.

'குடியானவன்' என்பதில் விவசாயத்தை நம்பிப் பிழைக்கும் குடிகள் அனைவரும் அடங்குவார்கள். நிலத்தைப் பாதுகாத்து அதைக் கொண்டு பிழைக்கும் இனக் கூட்டம் மூன்று பெருங் கூறுகளாகும். ஒன்று, நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் — பெரிய நிலச் சுவான்தார்களும், சிறிய நிலச் சுவான்தார்களும். இவர்கள்தான் நிலத்துக்கு வேண்டிய நல்ல உரம் போட்டும், வரப்பு கட்டியும், மழையினாலும் காற்றினாலும் அஜாக்கிரதையினாலும் நிலம் சேதப்படாமல் காப்பாற்றி வருபவர்கள். இவற்றுக்கெல்லாம் அவ்வப்போது வேண்டிய முதல் போட்டு, சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரிசை செலுத்தி, தகப்பனுக்குப் பின் மகன் என்கிற தலைமுறை வழக்கப்படி நிலத்தின் பொறுப்பேற்று, அதன்வழி பிழைக்கும் கூட்டம்.

ரண்டாம் கூட்டம், முதலாளியால் நேரில் பார்க்க இயலாத நிலத்தைக் கால வரைக்கு உட்படுத்திப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு பாதுகாத்து வரும் குத்தகைதாரர்கள். இவர்கள் சொந்தக்காரர்களைப் போல் சாசுவத பொறுப்பாளிகள் அல்ல. குறிப்பிட்ட ஆண்டுகள் அனுபவ உரிமை பெற்றுக் கொண்டு அதற்குப் பின் நிலம் என்னவானாலும் தங்களுக்கு அக்கறையில்லை என்று இருப்பவர்கள். அந்தக் கால வரம்புக்குள் எவ்வளவு லாபம் எடுக்கலாமோ அதைத்தான் கவனித்து வருவார்கள்.


மூன்றாவது கூட்டம், நிலத்தை உழுதும் மற்றப் பயிர் வேலை செய்தும் சரீர உழைப்பைத் தந்து, நிலத்திலிருந்து நிலத்தின் பயனைத் தோற்றுவிக்கும் ஏழை மக்கட் கூட்டம்.

சாகுபடிக்கு வேண்டிய உழவு மாடு, முதலிய பொறுப்புகளைச் சரீர உழைப்பை மட்டும் தரும் ஏழை மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அவற்றை நிலத்தின் சொந்தக்காரர்கள் அல்லது குத்தகைதாரர்கள் ஏற்றுக் கொண்டு சமாளித்து வருகிறார்கள். இவர்களும் உழைப்பாளியும் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் நிலம் பயிர்தரும்.

இவ்வாறு மொத்தத்தில் மூன்று கூறாகப் பிரிக்கலாம், விவசாயத்துக்குச் சம்பந்தப்பட்ட குடிமக்களை. இந்த மூன்று கூறு மக்களும் நன்றாக வாழ்ந்தால்தான் விவசாயம் நன்றாக நடக்கும். இவர்கள் மூவரும் ஒற்றுமையாக வாழ்ந்தால் தான் மூவரும் சுகமாக இருக்க முடியும். இவர்களில் யார் கெட்டாலும் மற்ற இருகூறு மக்களுக்கும் நஷ்டம். இதை விவசாயிகள் அறிவார்கள்— சட்டசபை அங்கத்தினர்களும் மற்ற அரசியலார்களும் அறியாமல் இருக்கலாம்.

இப்பொழுது இவர்களுக்குள் போட்டியும் சச்சரவும் உண்டாக்குவதே சிலர் தொழிலாகவும் கொள்கையாகவும் கொண்டிருக்கிறார்கள். "குத்தகைதாரர்களே

"இந்த வண்டி உதவாது!"



"ஒரே காரியாலயத்தில் இந்தியையும் ஆங்கிலத்தையும் வைத்துக் கொள்வதால் குழப்பம்தான் ஏற்படும்" என்றார் ராஜாஜி.

நிலத்துக்குப் பொறுப்பாளிகள். சொந்தக்காரர்கள் ஒரு சோம்பேறிக் கூட்டம்" என்றும் "உழுகிறவனே சொந்தக்காரன்" என்றும் மந்திரங்களைப் பிரயோகம் செய்து மக்களின் சுகவாழ்வைச் சேதப்படுத்தி வருகிறார்கள்.

"அவர்கள் கெட்டவர்கள். உனக்கு நாங்கள் * நன்மை செய்கிறோம்" என்று போட்டியும் கலகமும் சர்க்காரே தூண்டுகிறது. மூன்று கூறு விவசாயி மக்களும் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து நிலத்தைப் பேணி வந்தால்தான் நாட்டின் விவசாயம் முன்னேற்றம் அடையும்.

விவசாயிகள் நாட்டுக்கு வேண்டிய முக்கிய உணவுப் பொருளை உண்டாக்கி வருகிறார்கள். ஆனால் அந்த உணவுப் பொருள் மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. வேறு பொருள்களும் வேண்டும். விவசாயிகளுக்கே வேறு பொருள்கள் வேண்டும். வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால் பல்வேறு பொருள்கள் வேண்டும். விவசாயிகளின் வருவாயில் ஒரு பங்கு இந்தப் பல பொருள்களை விலை கொடுத்து வாங்குவதற்கு விவசாயத்தில் சம்பாதித்ததைச் செலவு செய்ய வேண்டியதாகிறது. விவசாயிகளுக்குப் போதிய வருமானம் இல்லாமற் போனால் வாழ்க்கைக்கு வேண்டிய மற்றச் செலவுகளுக்குப் பணம் போதாமற் போகிறது. விவசாயிகளுடைய தினசரி வாழ்க்கை கஷ்டமாகிறது. மற்றப் பொருள்களின் விலை ஏறஏற விவசாயிகளின் வாழ்க்கை மிகவும் கஷ்டமாகிறது.

நெல் விலை ஒரே மாதிரியாக இருந்து மற்றப் பொருள்களின் விலை ஏறினால் விவசாயிகளின் நிலை பஞ்ச நிலையாகிறது. மூன்று கூறுகளாகச் சொல்லப்பட்ட விவசாயிகள் அவ்வளவு பேர்களும் தற்போது இந்தக் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

பாரதநாட்டின் மக்கட் சமூகத்தின் பிழைப்பு பெரும்பாலும் விவசாயத்தின் மூலம் நடைபெற்று வருகிறது. ஆலைகளிலும் வேறு தொழில்களிலும் வேலை செய்யும் மக்களின் தொகை விவசாயிகளின் தொகையை வைத்துப் பார்த்தால் மிகச் சொற்பம்.

ஆலைத்தொழில் உற்பத்திச் செலவில் முக்கியமான பாகம் தொழிலாளிகளுக்குத் தரும் கூலித் தொகை. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பண்டங்களுக்குத் தரும் விலையும் கூலிச் செலவும் உயர்ந்தால் ஆலை உற்பத்திப் பொருள்களின் விலை உயர்ந்து விடுகிறது. ஆலைத் தொழிலாளிகளுக்குத் தரும் கூலி உயர்ந்தால் ஆலையில் உற்பத்தியாகும்

பண்டங்களின் விலையும் உயரும். விவசாயிகள் விலை கொடுத்து வாங்கக்கூடிய வரம்புக்கு மேல் விலை ஏறி விட்டால் பண்டம் விற்பனையாகாமல் தங்கிப் போகும். அனைவரும் நஷ்டமடையும் நிலைமை ஏற்படும்.

ஆனபடியால் ஆலைக் கூலியை உயர்த்தும் போது நாட்டில் பெரும்பாலோராகிய விவசாயிகள் அதாவது நிலத்தை நம்பிப் பிழைக்கும் மக்கட் சமூகத்தின் பொருள் நிலையை உத்தேசித்து உயர்த்த வேண்டும். முதலாளிகளின் லாபத்தையே கருதிக் கூலியை உயர்த்திக் கொண்டு போகலாகாது. உற்பத்தியாகும் சரக்கு கடையிலும் சந்தையிலும் விற்பனையாகுவொழிய உற்பத்தி பயனற்றுப் போகும். விற்பனையாவதற்கு முக்கிய ஏது வாங்குபவனுடைய பொருளாதார நிலை. ஒரு சிலர் பணக்காரர்களா யிருப்பதும் அவர்கள் அதிக விலை கொடுக்கத் தயாராக இருப்பதும் போதாது. பெரும்பாலோராகிய விவசாயிகள் இந்த விலை கொடுத்து வாங்கும் நிலையில் இருக்கிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆலைகளில் கூலிச் செலவு ஏற்றினால் விலைகள் ஏறும் என்பதையும், அதனால் சரக்குகள் விற்பனையாகாமல் தங்கிப் போகும் என்பதையும் கவனத்தில் வைத்து ஆலை நிர்வாகத்தைச் சர்க்கார் கண்காணித்து வரவேண்டும்.

ஜனநாயகத்தில் மந்திரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும் 'ஓட்டு' 'ஓட்டு' என்று தேர்தல்களின் லாப நஷ்டத்தையே கவனித்து வருவது இயற்கை. ஆனால் 'ஓட்டு' யாரிடம் இருக்கிறது? பெரும்பாலோர் ஆலைத் தொழிலாளிகளா, விவசாயிகளா? விவசாயிகள்தான்.

ஆகவே, விவசாயிகளைப் பிரித்தாளும் முறையை விட்டு விட்டு அந்தச் சமூகத்தின் முக்கூறுகளையும் ஒன்று கூட்டி அவர்களிடையில் ஒற்றுமை உண்டாக்கி அவர்களின் ஆதரவைச் சம்பாதிப்பதே ஜனநாயக நீதி. ஆலைத் தொழிலாளர்களின் ஆதரவு ஒன்றையே கவனித்துக் கொண்டு அதிகாரம் செலுத்தி வந்தால் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயக் கூட்டம் க்ஷீணமடைந்து போகும். நாட்டில் வாழ்க்கைத்தரம் உயராது. ஆலைத் தொழில் பிரதேசங்களில் கூலி செய்து வாழும் சமூகம் மட்டும் ரொக்கச் செலவு செய்யும் சக்தி அடைந்து ஓரளவு நன்றாக வாழ்வார்கள். விவசாயத்தில் பிழைக்கும் பெரும்பாலோரான மக்கள் தாழ்ந்த நிலையிலேயே இருப்பார்கள்.

அரிசி விலை குறைந்திருப்பது நலமே. ஆனால் மற்றப் பொருள்கள், அதாவது விவசாயிக்கு வேண்டிய மற்றப்பொருள்களின் விலைவாசியும் அரிசி விலைக்கு இயைந்த அளவில் இருக்க வேண்டும்.

தானியங்களைப் பயிர் செய்து எடுப்பதில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பதை உணர்ந்து அந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கிடக்கும் மக்களின் நிலைமையைக் கவனித்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். நாட்டில் பல பண்டங்களை உண்டாக்கும் தொழிற்சாலைகளைத் தோற்றுவித்தால் மட்டும் போதாது. அப் பண்டங்களை விலை கொடுத்து வாங்கும் மக்களின் நிலைமையையும் உயர்த்த வேண்டும்.

சக்கரைச் செட்டியாரின் மறைவு

சென்ற வாரம் மற்றொரு பழுத்த கனி உதிர்ந்து விழுந்து விட்டது. திருவாளர் சக்கரைச் செட்டியார் தமது எண்பத்திரண்டாவது பிராயத்தில் இம் மண்ணுலக வாழ்வை நீத்தார். ஆனால் இவ்வுலகில் இருந்த வரை, மனிதப் பிறவி எடுத்ததற்கு ஏற்பச் சீரிய முறையில் வாழ்ந்து விட்டார். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே தீவிர தேசிய ஆர்வம் கொண்டு சுதந்திரப் போரில் ஈடுபட்டார். காங்கிரஸில் தீவிரக் கட்சியில் ஒருவராகச் சென்னையிலிருந்து சூரத் காங்கிரஸுக்குப் போயிருந்தவர்களில் ஒருவராவார். திலகருடைய சீடர். பின்னர் தொழிலாளர் தலைவராகி, தொழிலாளர்களின் நலன்களுக்காகப் போரிடும் முதல் "தொழிலாளர் தலைவரானார். இதனால் அவர் தொழிலாளரின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவரானார்.



அதனால் சென்னை நகரத் தொழிலாளர்கள் சமீபத்தில் அவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொன் முடிப்பு அளித்துத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள். ராஜாஜி அந்த விழாவில் கலந்து கொண்டு, செட்டியாருக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டுரை வழங்கியதைச் செட்டியார் அகமும் முகமும் மலர மகிழ்ந்தது இன்னும் நம் நினைவில் பசுமையாக இருக்கிறது.

இவையெல்லாவற்றையும்விட திரு சக்கரைச் செட்டியார், சிறந்த படிப்பாளியாகத் திகழ்ந்தார். சிறந்த பக்திமானாகவும் வாழ்ந்தார். அதனாலேயே அவர் மேல் சபைகளில் நிகழ்த்திய உரை பாமரர்களுக்கு மட்டுமின்றி அறிஞர்களுக்கும் அரிய விருந்தாகத் திகழ்ந்தது.

இத்தகைய அரிய பெரியவரை இழந்து நிற்கும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்ன சேதி?

விடுதலை

மேற்கண்ட தலைப்பை இந்த வாரத்தில் பார்த்தவுடனேயே நாம் திரு ஈ. வெ. ரா.வின் விடுதலையைத்தான், (அவருடைய பத்திரிகையையல்ல; அவர் சிறையிலிருந்து விடுபட்டதைக்) குறிக்கிறோம் என்று வாசகர்கள் ஊகித்திருப்பார்கள். திரு ஈ. வெ. ரா.வின் சிறைவாசத்தின் பெரும் பகுதியான நாட்கள் ஆஸ்பத்திரியில் கழிந்தன. சாதாரணமாகச் சுறுசுறுப்பாக வேலை செய்து வருபவர்கள், ஓய்வு எடுத்துக் கொண்டால் வேலையின்மையின் காரணமாகவே பல தொல்லைகளுக்கு உள்ளாவதைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். அதேபோல் ஒரு நோயுமில்லாதவர்கள், நீண்ட காலம் ஆஸ்பத்திரியிலிருந்தால் அதுவே புது நோய்களுக்கும் தொல்லைகளுக்கும் காரணமாகி விடும் என்பதையும் கேட்டிருக்கிறோம். அம்மாதிரி ஒன்றும் நோய் நொடி ஏற்படாமல், தேகதிடத்துடன் திரு ஈ. வெ. ரா. ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையானதற்கு மகிழ்கிறோம்! அவரும் புது அக்னித் திட்டம் வகுத்து விட்டார். இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

ஆதரவுக் கூட்டம்

ஸ்வீடன் தேசத்தில் ஸ்டாக்ஹோம் நகரில் அணுகுண்டு ஜலஜ குண்டுகளைத் தடுக்கவும், யுத்த சன்னத்தங்களைக் குறைக்கவும் ஒரு உலக மகாநாடு நடக்கப் போகிறது. அதில் உலகத்துப் பேரறிஞர்கள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள் கலந்து கொள்ளப் போகிறார்கள் என அறிகிறோம்.

உலக விஞ்ஞானிகள் பலமுறை எடுத்துச் சொல்லியும், எதிர்காலச் சந்ததிகளைப் பாதிக்கும் என்று எச்சரிக்கை செய்தும் இந்த விஷகுண்டு சோதனைகளை மேற்கத்திய வல்லரசுகள் நிறுத்த மறுக்கின்றன. நல்ல வேளையாக ருஷ்யா தற்சமயம் இந்தச் சோதனைகளை நிறுத்தி வைத்திருக்கிறது. இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்காவையும் பிரிட்டனையும் இச் சோதனைகளை நிறுத்தச் செய்ய வேண்டிய பொறுப்பு உலகப் பொதுமக்களைச் சேர்ந்தது. பொதுஜன அபிப்பிராயத்துக்கு மேற்பட்ட சக்தி உலகில் வேறு ஒன்றில்லை. இந்தப் பொதுஜன அபிப்பிராயம் திரட்டும் பணியை மேற்கொள்ளவே, ஸ்டாக்ஹோமில் மகாநாடு கூடுகிறது. இந்த மகாநாட்டுக்கு ஆதரவு தரும் வகையில் உலகில் ஆங்காங்கு மகாநாடு கூட்டுகிறார்கள். இந்த வாரம் சென்னையில் கோகலே மண்டபத்தில் 21, 22ம் தேதிகளில் கேரள முதன் மந்திரி திரு நம்பூத்ரிபாடு அவர்கள் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெறப் போகிறது.

"கம்யூனிஸ்ட் தலைவர் தலைமை வகிக்கும் கூட்டத்தில் ராஜாஜி பேசுவதாவது!" என்று சிலர் பேசிக்கொள்வது காதில் விழுகிறது.

அணுச் சேத விஷம்-கட்சிப் பிரச்னையல்ல. அது உலக மக்களைப் பாதிக்கும் விஷயம். ஆகவே ஜலஜகுண்டு சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று எந்தக் கட்சி வற்புறுத்திக் கூட்டம் நடத்தினாலும் மற்றக் கட்சிகள் ஆதரவு தர வேண்டும். இதில் கட்சி மனப்பான்மை காண்பிப்பது குற்றமாகும்.

அணு-ஜலஜ குண்டுகளைத் தடுக்கும் மகாநாட்டுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று பொதுமக்கள் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. உலகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் இந்த மகாநாட்டில் பொதுமக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு மகாநாட்டின் வெற்றிக்கு ஆதரவளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஒரு யோசனை

இலங்கை அடக்குமுறையைப் பற்றி இலங்கை சர்க்காரின் அறிக்கைகளால் மட்டும் உண்மையை உணர முடியாது. இரு சாராருக்கும் நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் சிங்களவர்கள் எவ்வளவு பேர் மாண்டார்கள், அடிபட்டார்கள்; தமிழர்கள் எவ்வளவு பேர் மாண்டார்கள், அடிபட்டார்கள், சொத்து இழந்தார்கள் என்பதை யெல்லாம் விசாரணை செய்வதற்குப் பட்சபாதமற்ற கமிட்டி ஏதும் இலங்கை சர்க்காரால் ஏற்படுத்தப்படவில்லை. நமக்கு வரும் செய்திகளிலிருந்து, இலங்கைத் தமிழ் மக்கள் மிகவும் கஷ்டப்படுவதாகத் தெரிய வருகிறது. உள் நாட்டு விஷயத்தில் இந்திய அரசாங்கம் பிரவேசிக்க முடியாமலிருந்தாலும், பாரபட்சமற்ற பரிசீலனையில் கலந்து கொள்ளவாவது செய்ய வேண்டும். இலங்கைத் தமிழர்கள், இலங்கைக் குடிமக்களேயன்றி இந்தியக் குடி மக்கள் அல்ல. ஆயினும் அடுத்த வீட்டில் தீயோ கலகமோ பிடித்துக் கொண்டால் நமக்கும் அபாயம் என்பதை உணர்ந்து இந்திய சர்க்கார் நடவடிக்கை எடுப்பது உசிதமாகும்.

அருள்வாக்கு

கலைகள் பலவிதம். ஜாலம் தந்திரம் முதலியவை வித்தை எனக் கூறப்படுகிறது. நடனம் முதலியவை கலை என வழங்கப்படுகிறது. கஜகர்ணம், கோகர்ணம் என்று கடினமான வித்தைகள் பற்றிச்சொல்லுகிறார்கள். கஜகர்ணம் என்பது ஒருவன் யானை போல் தனது காதுகளை அசைப்பது. இதைச் செய்வதெல்லாம் கஷ்டம். அதனால்தான் என்ன கஜகர்ணம் போட்டாலும் நடக்காது என்று ஒரு வசனம் கூட வழக்கில் இருக்கிறது.

ஒரு பசுவின் முதுகைத் தொட்டால் அது உடனே சிலிர்க்கிறது. உடனே அதன் முதுகில், குளத்தில் கல்லைப் போட்டால் ஒன்றன்பின் ஒன்றாக அலைச் சக்கரங்கள் தோன்றுவது போல், ஒன்றன்பின் ஒன்றாக அலைகள் மூலம் அந்தப் பசுவின் முதுகிலும் அதிர்ச்சி ஓடுகிறது. இது கோகர்ணம் என்று சொல்லப்படுகிறது. ஒரு பசு செய்யும் இதர காரியங்கள் போல் செய்து காட்டலாம். ஆனால் இந்தக் கோகர்ணம் சுலபமாகச் செய்து காட்டக் கூடியதல்ல. இதைக்கூட ஒருவர் செய்து காட்டுவார் என்று கதை சொல்வதுண்டு.

கலைகளில் எல்லாவற்றிலும் சிறந்தது ஒன்று உண்டு. அதுதான் அமரிக்கையாகவும் மௌனமாகவும் இருப்பது. இதைப் பழக்கம் பண்ண முயன்றால்தான் இது எவ்வளவு கஷ்டம் என்பது தெரியவரும். அதனால்தான் இதை பிரும்ம வித்தை என்கிறோம். ஒருவன் அசாத்தியமான காரியத்தைச் செய்தால் இதென்ன பிரும்ம வித்தையோ என்று கேட்கிறார்கள். இந்த பிரும்ம வித்தையைத்தான் அத்வைதமென ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் உலகுக்கு அருளியது. அத்வைதானுபவத்தால் தான் ஒருவன் பரதத்துவத்தை அறிய முடியும். சங்கர பகவத் பாதாள் ஜீவித்த சொற்ப காலத்தில், எல்லாக் கலைகளையும் பயின்றார். ஆசார்யாளுக்குச் செருப்பு தைக்க முடியுமாவென ஒரு சக்கிலியன் கேட்டதாகவும், உடனே ஆசார்யாள் அவனிடமிருந்து ஊசியை வாங்கி மூக்கின் ஒரு புறத்தில் தேய்த்தாரென்று கதையில் சொல்லப்படுகிறது. சாதாரணமாக, சக்கிலியன் செருப்பு தைக்குமுன் ஊசியை இவ்விதம் மூக்கில் தேய்த்துக் கொள்வதுண்டு. மூக்கில் இருக்கும் எண்ணெய்ப்பசை ஊசியில் பட்டால் அது மிருதுவாகிச் சுலபமாகத் தைக்கலாம். ஆசார்யாள் இந்தச் சிறு அம்சத்தைக் கூடக் கவனித்துச் சக்கிலியர்கள் போலவே ஆரம்பித்ததில் இந்தச் சக்கிலியன் வியந்து ஆசார்யாள் இவ் வேலையும் செய்ய முடியும் என்பதாகத் திருப்தி அடைந்தான் என்பது கதை.

— ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

புயல் ஓய்ந்தது!

கொழும்பு, ஜூன் மீ 14வ.

இலங்கையெங்கும் நடைபெற்று வந்த வகுப்புக் கலவரங்கள் ஒருவிதமாக ஓய்ந்து நாட்டில் மறுபடியும் அமைதி நிலவத் தலைப்பட்டிருக்கிறது. நாட்டின் இரு பெரும் சமூகங்களான தமிழர்களும் சிங்களவர்களும் பகைமை உணர்ச்சி பாராட்டினால் இரு தரப்பாருக்குமே எத்தகைய மாபெரும் நஷ்டம் ஏற்படுமென்பதற்கு இந்தக் கலவரம் ஒரு கடுமையான படிப்பினை.

மொழிப் பிரச்னை காரணமாகவே கலகம் ஆரம்பித்ததென்பது உண்மையானாலும் மகத்தான சேதங்கள் ஏற்படக் கூடிய அளவுக்குக் கலகத்தைத் தூண்டி விட்டவர்கள் இரு தரப்பிலுமுள்ள தீவிரவாதிகளென்றும் அதைக் காலிகளும் நூற்றுக்கணக்கான மாஜிக் குற்றவாளிகளும் நன்கு பயன்படுத்திக் கொண்டார்களென்றும் பொதுவாக நம்பப்படுகிறது. காரணம் எதுவாயிருப்பினும் சரி அராஜக நிலைமையை எந்த அரசாங்கமும் பொறுத்துக் கொண்டிருப்பதற்கில்லை. கொலை கொள்ளை, தீயிடுதல் முதலான அட்டூழியங்கள் முதல் நாள் போலீஸாரின் கண்ணெதிரிலேயே நடைபெற்றபடியினால் சிவில் அதிகாரிகளினால் நிலைமையைச் சமாளிக்க முடியாதென்பது தெளிவாகி விட்டது. அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி ராணுவ கடற்படை பாரா ஏற்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது. பார்லிமெண்டில் எதிர்க்கட்சித் தலைவரான டாக்டர் என். எம். பெரைரா இடித்துக் காட்டியதைப் போல் அரசாங்கத்தின் கண்டிப்பான நடவடிக்கைகள் இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன்னதாக எடுக்கப்பட்டிருந்தால் இன்றுள்ள நிலைமை ஏற்பட்டிருக்க மாட்டாது. உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் பெருமளவு தவிர்க்கப்பட்டிருக்கலாம். என்றாலும் மேலும் தாமதியாமல் ராணுவ, கடற்படையை அரசாங்கம் கடைசி நேரத்திலாவது அழைத்தது பாராட்டத்தக்கது.

நிலைமை இன்று அமைதியாகத் தென்பட்டாலும் மக்கள் மனத்தை விட்டு இன்னமும் பீதி நீங்கி விட்டதாகக் கூறிவிடுவதற்கில்லை. எந்த நிமிடம் திடீரென்று மறுபடியும் கலகம் ஆரம்பிக்குமோ என்ற பயம் எல்லாருடைய மனத்திலும் இருக்கத்தான் செய்கிறது. அவசர கால நிலைமையும் ஊரடங்குச் சட்டமும் ரத்து செய்யப்பட்டு, தற்சமயம் சிறையிடப்பட்டிருக்கும் மாஜிக் குற்றவாளிகளும் விடுதலையானால் என்ன நடக்குமோ என்று எண்ணிக் கலங்காதவர்கள் யாரும் இல்லை.

சமீபக் குழப்பங்களில் பட்டப்பகலிலே கொலை, கொள்ளை முதலான அக்கிரமங்களைச் செய்தவர்களைக் கண்டுபிடிப்பது பிரமாதமான காரியமில்லையென்றும் அந்தச் சமூகத் துரோகிகளைத் தண்டனைக்கு உட்படுத்துவதே வருங்கால அமைதிக்கு உத்தரவாதமாயிருக்கும் என்றும் 'டைம்ஸ் ஆப் ஸிலோன்' பத்திரிகை வற்புறுத்தியிருக்கிறது. நாட்டில் பரிபூரண அமைதி ஏற்படும் வரையில் அவசரகாலநிலைமை ரத்துச் செய்யப்பட மாட்டாது என்று அரசாங்கமும் அறிவித்திருக்கிறது.

இதற்கிடையில் தடைசெய்யப்பட்ட சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் தடைசெய்து வீட்டுக் காவலில் வைத்திருக்கிறார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் கொழும்பிலும் இருந்த சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் எல்லாருமே பாதுகாப்பில் வைக்கப்பட்டுவிட்டனர். சிங்களத் தீவிர வாதிகளின் பக்கத்தில் திரு கே. எம். பி. ராஜரத்னா என்பவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவைகளை நடத்துதல் முதலியன தடைசெய்யப்பட்டிருக்கின்றன. பத்திரிகை தணிக்கை முறையும் அமுலுக்கு வந்திருக்கிறது.


* *

கலகங்களையும் அவற்றைச் சமாளிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளையும் பற்றிப் பார்லிமெண்டில் இரண்டு தினங்கள் வரையில் ரகசியமாக விவாதம் நடைபெற்றது. அரசாங்க நடவடிக்கைகளை ஆமோதித்த எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரைரா இந்த நடவடிக்கைகளை இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன்னதாகவே எடுத்திருக்க வேண்டும் என்றார். இன்றைய நெருக்கடிக்கு அரசியல் ரீதியில் பரிகாரம் காண வேண்டிய அவசியத்தைச் சில அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள். உடனே ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டிப் பேசவேண்டுமென்று ஒரு முஸ்லிம் அங்கத்தினர் யோசனை சொன்னார். வகுப்புக் கலவரங்களுக்கு சமஷ்டிக் கட்சியும் திரு ராஜரத்னா தலைமையிலுள்ள சிங்கள தீவிரவாதிகளும் காலிகளும் மாஜிக் குற்றவாளிகளுமே மூலகாரணம் என்று பிரதம மந்திரி குற்றம் சாட்டினார்.

சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் பேசியபோது இன்றைய நிலைமைக்கு அரசாங்கமும் அதன் கொள்கையுமே மூலகாரணம் என்றும் சமஷ்டிக் கட்சியைத் தடை செய்ததினால் தமிழர்களை அடக்கிவிட முடியாதென்றும் கூறிவிட்டுத் தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் தாங்கிய கலவரம் நடப்பதாகக் கூறுவது வீண் பயப்பிராந்தி என்றார்கள். இந்தப் பேச்சு நடந்து முடிந்து வெளியே வந்தவுடன் சமஷ்டிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் கைது செய்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

விவாதத்துக்குப் பிரதம மந்திரி பதிலளித்த பொழுது வகுப்பு பேதமற்ற தேசிய சமுதாயத்தை உருவாக்க அரசாங்கம் இயன்ற வரையில் பாடுபடுமென்று உறுதி கூறுவதாகச் சொன்னார். சிங்கள ஸ்ரீ எழுத்து எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த சமஷ்டிக்கட்சித் தலைவர்கள் அதைப் பற்றி முன்னதாகவே தம்மிடம் தெரிவித்திருந்தால் ஒரு சுமுகமான முடிவு செய்திருக்கலாம் என்றும் வேண்டுமென்றே அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்து நெருக்கடியை உண்டுபண்ணி விட்டதாகவும் பிரதமர் குற்றம் சாட்டினார். -ரஜனி


வசீகரிக்கும் அரிய
சந்தர்ப்பங்கள் !
அத்தகைய விசேஷ சந்தர்ப்பங்க
ளுக்கு இதோ பட்டுப்போன்ற
பவுடர் அழியாமலும் கலையாமலும்
இருக்கும்; மயங்கச் செய்யும்
பிரகுக வாசனைத் திரவியங்களின்
அபூர்வமான கலவை உங்களை
எப்பொழுதும் ரம்மியமாகவும்
வசீகரமாயும் இருக்கச் செய்யும்!
லக்மி
டால்கம் பவுடர்
லக்மி பிரைவேட் லிட்.
ஒரு டாடா தயாரிப்பு
பாம்பே ஹவுஸ், ப்ருஸ தெரு, பம்பாய்-1.
LKM.48 TM.



35

பிறருடைய சுகத்தைக் கண்ட மாத்திரத்தில் சந்தோஷப் படுவதற்குப் பதிலாகத் துன்பப்படும் பிரகிருதிகளுக்குப் பகைவர்கள் வேண்டியதில்லை. அவர்களுக்கு அவர்களே விரோதிகள்.

அழுக்காறு உடையார்க்கு
அதுசாலும் ஒன்னார்

வழுக்கியும் கேடுஈன்
பது.

அது சாலும்—அதுவே போதும். ஒன்னார்—பகைவர். ஒன்னார் வழுக்கியும்—பகைவர் இல்லாமல் தப்பிய போதிலும். கேடு ஈன்பது—கேடு தருவதற்கு அதுவே போதிய காரணமாக அமையும். உலகத்தில் உனக்கு ஒரு சத்துருவும் இல்லையாயினும் உனக்குள் இருந்து உன்னைத் துன்பப் படுத்தும் பொறாமை உன்னைக் கெடுப்பதற்குப் போதும். உன் மனமே ஒரு பகைவனுடைய செயலைச் செய்கிறது. உன் சொத்தை அபகரிக்கத் திருடன் வேண்டியதில்லை. செல்வம் இருந்தும் உன்னை வறுமை நிலையில் தள்ளும். வறுமையால் ஒருவன் துன்பப் படுவதைப் போல் பொறாமை உன்னைத் துன்பப் படச் செய்கிறது. சந்தோஷத்துக்குக் காரணங்கள் இருந்தும் துக்கத்தில் உழல்வாய். உன் செல்வத்தை நீ அனுபவிக்க முடியாமல் செய்து விடுகிறது.

சுகமும் துக்கமும் ஒன்றாகப் பாவித்தலே யோகமுறை. இரண்டுக்குள்ளும் அதிக வேறுபாட்டை அடையலாகாது என்பது முனிவர்களின் உபதேசம். இந்த வேதாந்தக் கொள்கைக்கு ஒத்தவாறு தெய்வங்களில் வறுமையும் துக்கமும் தருபவள் ஒரு மூத்த சகோதரியாகவும், செல்வமும் சுகமும் தருபவள் ஒரு இளைய சகோதரியாகவும் இரு சகோதரி தெய்வங்களை அமைத்துக் கொண்டிருக்கிறோம். சுகம் தரும் தெய்வமும் துக்கம் தரும் தெய்வமும் கூடப் பிறந்த சகோதரிகள். மூதேவி துக்கத்துக்கு நாயகி. ஸ்ரீதேவி செல்வத்துக்கு நாயகி.

பொறாமைப் படுகிறவனைச் ஸ்ரீதேவி பொறுக்க மாட்டாள். தன் அக்காளிடம் ஒப்பித்து விடுவாள். அதன் மேல் அவன் செல்வமும் சந்தோஷமும் குறைந்து போய் சூன்யமாகும்.

அவ்வித்து அழுக்காறு
உடையானைச் செய்யவள்

தவ்வையைக் காட்டி
விடும்.

அவ்வித்துக் காட்டி விடும்—பொறுக்காமல் தன் தமக்கையிடம் ஒப்பித்து விடுவாள். செய்யவள்—திருமகள், ஸ்ரீதேவி. தவ்வை—தமக்கை, அக்காள், மூதேவி.

பொறாமைப்படும் மக்களை மூதேவி ஆட்கொண்டு விடும். செல்வம் இருந்தும் செல்வமில்லாமல் வறுமையிலிருப்பது போல் துக்கப்படுவார்கள். பிறகு செல்வமும் அழிந்து போகும். வறுமை வந்து சேரும்.

ஹிந்தி பகுமீ பால்

பரணி

அரசாங்க மொழியாக ஹிந்தி இருக்க வேண்டுமா அல்லது ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வரலாமா என்ற பிரச்னை பற்றி உதவி உள்நாட்டு மந்திரி ஒரு சமயம் லோகசபையில் பேசும் பொழுது, அரசாங்க அலுவல்கள் 1965-ம் வருஷத்துக்கு முன்னரே ஹிந்தியில் நடைபெறும் என்றும் அதற்கு வேண்டிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்றும் அறிவித்தார். இதைக்கேட்ட ஹிந்திவெறியர்கள் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர்.

சில வருஷங்களுக்கு முன், மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களில் எவ்வளவு பேர்களுக்கு ஹிந்தி படிக்கத் தெரியும், எழுதத் தெரியும், பேசத் தெரியும் என்ற தகவல் சேகரிக்கப்பட்டது. அந்தச் சமயம் வடமொழியின் லிபியையுடைய பாஷைக்காரர்கள் எல்லோரும் (மகாராஷ்டிரர் முதலியோர்) தங்களுக்கு ஹிந்தி பேச, படிக்க, எழுதத் தெரியும் என்று தெரிவித்தனர். அப்பொழுது இந்தியாவிலுள்ள எல்லா மொழியினரும் இவ்வாறு தகவல் கொடுத்ததினால், உதவி உள்நாட்டு மந்திரி 1965-ம் வருஷத்துக்கு முன்னதாகவே ஹிந்தி மொழியை அரசாங்க மொழியாக ஏற்றுக் கொள்ள முடியும் என்று அறிவித்தார்.

இந்த மாதிரி தவறான தகவல் கொடுத்த மகாராஷ்டிரர்கள் சிலரைச் சந்திக்க நேர்ந்த பொழுது, அவர்களுக்கு எவ்வளவு தூரம் ஹிந்தி மொழி தெரியும் என்றும் ஆங்கிலத்துக்குப் பதிலாக ஹிந்தியில் கடிதப் போக்குவரத்தெல்லாம் வைத்துக் கொள்ள முடியுமா என்றும் கேட்டேன். அதற்கு அவர்கள் அளித்த பதில் விநோதமாக இருந்தது.

''மராட்டியும் ஹிந்தியும் ஒரே லிபியில் இருப்பதால் எழுதப் படிக்கத் தெரியுமாம்!'' ''இங்கேவா, அங்கே போ'' போன்ற ஹிந்திச் சொற்கள் பேசத் தெரியுமாதலால், ஹிந்தி பேசத் தெரியும் என்று கொடுத்தார்களாம்! வேறு எந்த நாட்டிலாவது இந்த மாதிரி விந்தைகளைக் காண முடியுமா?

ஹிந்தியில் பயிற்சியளிப்பது பற்றி உதவி உள்நாட்டு மந்திரி அறிவித்ததைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது நல்லது. ஹிந்தி பயிற்சியளிக்க அரசாங்க உத்தியோகஸ்தர்களை நான்கு கூறுகப் பிரித்திருக்கிறார்கள்.

முதலாவது ஹிந்தியைத் தாய்பாஷையாக உடையவர்கள். இரண்டாவது ஹிந்தியோடு நெருங்கிய சம்பந்தமுள்ள மொழி பேசுபவர்கள். இந்தப் பிரிவில் பஞ்சாபியர்கள் போன்றவர்கள் சேருகிறார்கள். மூன்றாவது பிரிவில் மகாராஷ்டிரர்கள், குஜராத்தியர் போன்றவர்கள் இருக்கிறார்கள். தென்னாட்டவர்கள் கடைசிப் பிரிவில் இருக்கிறார்கள்.

இந்திப் பயிற்சியளிக்க உத்திரப் பிரதேசத்திலிருந்து ஏராளமான ''ஹிந்தி பண்டிதர்கள்'' சேர்க்கப்பட்டிருக்கின்றனராம். நவகாளியில் முஸ்லிம் லீக் கட்சியினர் வகுப்புக் கலவரம் நடத்துவதற்கு முன், ஏராளமான மகமதியர்களை மற்ற ராஜ்யங்களிலிருந்து வங்காளத்திலுள்ள நவகாளி, திப்பேரா பகுதியில் குடியேற்றியதைப் போல் ஹிந்திவெறியர்களான உத்திரப்பிரதேசப் பண்டிதர்கள் நாடெங்கும் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

இந்தப் பயிற்சிகள் தொடங்கிய சமயம் இந்தப் பண்டிதர்களுக்கு என்ன பாடம் கற்பிக்க வேண்டும், என்ன புத்தகங்கள் வாங்க வேண்டும், எவ்வளவு காலம் பயிற்சி அளிக்க வேண்டும், எந்தப் பரீட்சையில் தேற்ற வேண்டும் என்றெல்லாம் தெரியாது.

ஏராளமான பொருட் செலவும், கால விரயமும் ஆன பிறகு இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றனவாம்.

மற்றுமொரு நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிடுவது, உண்மையான நிலையை விளக்கும். மத்திய அரசாங்கக் காரியாலயங்களில், முக்கியமாக, பாதுகாப்பு இலாகாவில், ஆங்கிலத்தில் எழுதப்பட்டுத் தற்சமயம் தொங்கும் அலுவலகப் பெயர்களை ஹிந்தியில் மாற்றியமைக்கும்படி உத்தரவு வந்திருக்கிறதாம்—1965-ம் வருஷத்துக்கு எட்டு வருடம் முன்னரே—இதற்காகத் தலைமைக் காரியாலயத்திலிருந்து ஹிந்தியில் மொழிபெயர்த்துச் சொற்றொடர்கள் அனுப்பப்பட்டனவாம். ஹிந்தியில் எழுதியிருந்த வார்த்தைகள் சரியாகப் புரியாததால் ஒரு குறிப்பிட்ட காரியாலயத்திலுள்ள இரு உத்திரப் பிரதேசத்தைச் சார்ந்த உத்தியோகஸ்தர்களிடம், அதாவது ஹிந்தியைத் தாய்பாஷையாக உடையவர்களிடம் சந்தேகம் கேட்கப்பட்டதாம். அவ்விருவர்களுக்கும் அந்தச் சொற்றொடர் புரியாமலிருந்ததோடு, அவர்களே ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்யவும் ஆரம்பித்து விட்டார்களாம். ஒரு வார்த்தைக்கே இந்தப் பாடு என்றால், முழுவதும் ஹிந்தியில் அலுவல்கள் நடத்துவதென்றால் எவ்வளவு கடினமென்று தெரிந்து கொள்ளலாம்!

வட இந்தியாவில் பல பாகங்களில் வாழும் தமிழர்களில் சிலர் அந்தந்த அரசாங்க மொழிகளைப் பயின்றிருக்கிறார்கள் என்பது ஓரளவு உண்மைதான். ஆனால் அம்மாதிரி பயின்றவர்கள் ஆயிரத்தில் ஒருவர் இருக்கலாம். ஹிந்தி என்ன, எந்த மொழியையுமே இந்தச் சில நபர்கள் பயிலலாம்.

பொருள் சேர்க்கும் நோக்கத்தோடு சில தமிழர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொண்டு, மாலை நேரங்களில் பிறருக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள். இந்த மாதிரி தமிழர்களில் சிலர் வட இந்திய நகரங்களிலும் இருக்கின்றனர். அதனால் தமிழர்களுக்கு ஹிந்தி தெரியும் என்று சொல்வது சரியில்லை.

முதலில் ஹிந்திமொழி வளர்ச்சியடைய வேண்டும். பலர் அதைப் பயில வேண்டும். அதற்குப் பிறகுதான் ஆட்சிமொழியாக்கலாமா என்று பிரச்னையை எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால் நாட்டின் ஒற்றுமை சிதறிப் போகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



MARIANNE COOK
in Universal-International's
"INTERLUDE"

MAX FACTOR
HOLLYWOOD

Cleansing Cold Cream

A luxuriously soft, smooth cleansing cold cream especially developed for the proper removal of make-up and a soothingly thorough cleansing of the skin.



Rs. 5.25

Available at all Leading Cosmetic and General Stores

Sole Agents in India:
ORIENT COSMETIC PRIVATE LIMITED
MADRAS • BOMBAY • CALCUTTA

Alyws: CC 8

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ் ஜலதோஷத்தை நிறுத்துக

ஆஸ்த்மா, பிராங்கைட்டிஸ், ஜலதோஷத்தால் மூச்சுத் திணறல், இருமல், தும்மல் மூச்சடைப்பு உபாதைகளால் அவதிப்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இப்போது மெண்டாகோ (Mendaco) அருந்தி அற்புத நிவாரணம் அடைகிறார்கள். இந்த நவீன, விஞ்ஞான அமெரிக்க மருந்து இரத்தத்தின் வழியே சுவாசப் பைகள், சுவாசக் குழாய்கள், மூக்குக்குச் சென்று அங்கு கெட்டியாக அடர்ந்துள்ள சளியை இளக்கிக் கரைக்கிறது. பின்னர் நீங்கள் இருமல் தும்மலின்றிச் சுகமாகச் சுவாசித்துக் குழந்தைபோல் தூங்கலாம். கெமிஸ்டிடம் மெண்டாகோ (Mendaco) வாங்குக. திருப்தி இன்றேல் பணம்வாபஸ்.

முகப் பருக்கள் நீங்கி விடுகிறது -3 நாளில் அதன் மூலகாரணம் கொல்லப்படுகிறது

நிக்ஸோடர்ம் (Nixoderm) முதல் முதலில் உபயோகிக்கத் தொடங்கியதுமே முகப்பருக்கள் எல்லாம் மாயமாய் மறையத் தொடங்குகின்றன. இன்றிரவே நிக்ஸோடர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். விரைவில் உங்கள் சருமம் மிருதுவாகவும், வழவழப்பாகவும், மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், பிளவைகள், தேமல்கள், கரப்பான், படை, கட்டிகள் இவைகளுக்குக் காரணமான கிருமிகளையும், பூச்சிகளையும் கொல்லும் ஒரு புதிய முறை. இன்றே உங்கள் கெமிஸ்டிடமிருந்து நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை ஒழித்து உங்கள் சருமத்தை சுத்தமாகவும், மிருதுவாகவும், வழவழப்பாகவும் செய்ய உத்தரவாதம். அன்றேல் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் பணம் வாபஸ்.

Nixoderm
நிக்ஸோடர்ம்
சரும உபாதைகளுக்கு

வட்ட மேஜை

துணை புரிவாரா?

"இலங்கையில் அட்டூழியம்" என்ற தலையங்கம் காந்தி வழி வாழும் 'கல்கி'யின் நேர்மையை எடுத்துக் காட்டும். அதே நேரம் அது தமிழ் இனத்தின் விடுதலையையும், ராஜதந்திரக் கண்ணோட்டத்துடன் கூறியிருக்கிறது. இலங்கையின் பிரதமர் பண்டாரநாயகா 'கல்கி'யின் அறிவுரையை ஏற்று, தம் நாட்டில் அமைதியும், அன்பும் வளரத் துணை புரிவாரா?

உதகமண்டலம்
6—6—58 அழகப்பா சுப்பையா

சென்னை சர்க்கார் கடமை

இலங்கை சர்க்காரின் கெடுபிடி சட்டதிட்டங்கள் காரணமாகவும், மக்களின் துவேஷ உணர்ச்சி காரணமாகவும் பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் வலுக்கட்டாயமாகத் துரத்தப்பட்டு விட்டார்கள். இவர்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களை யாரிடம் போய் முறையிட முடியும்? ஆகவே இவர்கள் நிலைமையை அறிந்து இவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு டில்லி சர்க்காரையும் நமது சென்னை அரசாங்கத்தையும் சார்ந்ததாகும். ஏனெனில் இலங்கைவாழ் இந்தியர்களில் பெரும்பான்மையோர் தமிழர்கள்தான். டில்லி சர்க்காரிடம் நமது சென்னை அரசாங்க மந்திரிகள் விடாது முறையிட வேண்டும். பாகிஸ்தானிலிருந்து டில்லி வரும் அகதிகளுக்காகக் கோடிக்கணக்கான தொகை செலவு செய்யும் போது, இலங்கையிலிருந்து துரத்தப்படும் தென் இந்திய மக்களிடம் மட்டும் ஏன் டில்லி சர்க்கார் பராமுகமாய் இருக்கிறார்கள்?

அம்பலசேரி
6—6—58 மு. மா. முத்தையா

வள்ளுவர் வாசகம்

"வள்ளுவர் வாசக"ப் பகுதி படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் இருக்கிறது. துறவிகள் யார்? சம்சார வாழ்க்கையில் ஈடுபட்டபின் நாம் எங்ஙனம் துறவிகள் ஆக முடியும்? சம்சார வாழ்க்கையின்றி, சந்நியாசம் பூண்டு காவியுடுத்தித் துறவியாக வேண்டும் என்றெல்லாம் பலவிதமாக எங்களுக்குள் ஒரு சமயம் விவாதம் நடந்தது. இச் சந்தேகங்களுக்குச் சரியான விடையளித்துவிட்டது, "வள்ளுவர் வாசகம்."

திண்டிவனம்
8—6—58 ம. தாதன்

காலதாமதம் ஏன்?

ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியமோ, மிகக் குறைவு. இந்தக் குறைந்த ஊதியத்தையும், காலாகாலத்தில் கொடுக்காது, வறுமையையும், துன்பத்தையும் அதிகப்படுத்துகிறார்கள். இது விஷயத்தில் திருச்சி மாவட்ட மன்றத்தார் அக்கறை காட்டாமல் இருப்பது வருந்தத் தக்கது. பிரஸிடெண்ட் நிர்வாகத்தில், முதல் மாதத்திய ஊதியம் அடுத்த மாதம், 15, 20 தேதிகளில் கொடுத்தார்கள். இதன் பின் "விசேட அதிகாரிகள்" நிர்வாகத்துக்கு வந்தபின், 20உயிலிருந்து 25, 30 தேதிகள் ஆகியது. தற்சமயம், உதாரணமாக 1958 ஏப்ரல் மாதத்திய ஊதியம், மே மாதமும், கழிந்து, ஜூன் மாதம் 8 தேதி ஆகியும் வந்து சேரவில்லை.

வையம்பட்டி
8—6—58 எஸ். இருளப்பன்

கனிவுடைமையே பண்புடைமை

நமது நாட்டில் பொதுவாக பஸ் முதலிய வாகனங்களில் பிரயாணம் செய்யும்போது டிரைவர், கண்டக்டர் இவர்களின் சர்வாதிகாரங்களுக்கெல்லாம் பணிய வேண்டியிருக்கிறது. இவை போதாவென்று பஸ்களில் இடம் கிடைப்பதில்லை. அவை குறிப்பிட்ட நேரத்தில் வருவதும் இல்லை. ஆனால் டி. வி. எஸ். ஸ்தாபனம் மிகச் சிறந்த முறையில் பஸ் போக்குவரத்தை நடத்தி வருவது மிகவும் போற்றத் தக்கது. "கனிவுடைமையே பண்புடைமை" என்று வாயளவில் மட்டுமல்லாமல் செயலளவிலும் காட்டி, தமிழ் நாட்டில் அது ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கோவை
6—6—58 நா. குருசாமி

செயற்கைப் பட்டு நெசவுத் தொழில்

செயற்கைப் பட்டு கைத்தறி நெசவாளர்கள் விலை மிகவும் மலிவாகவும் துணி கவர்ச்சியாகவும் தயாரித்து வந்தார்கள். செயற்கைப் பட்டுக்கு இறக்குமதி வரி போட்டுத் தடைசெய்து விட்டதால், அந்தத் தொழிலை நம்பியுள்ள இந்தியா முழுதும் உள்ள சுமார் ஐந்து லக்ஷம் கைத்தறிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சேர்ந்த சுமார் 25 லக்ஷம் பேர்கள் அவதிப்படும்படி நேர்ந்துள்ளது. இந்தத் தடையால் உள் நாட்டுப் பட்டு சரியாகக் கிடைப்பதில்லை. ராத்தல் 1க்கு 1-12-0, 2-0-0 ரூபாய் அதிக விலை கொடுத்து வாங்கி, தயாரிக்க முடியாமல் உற்பத்தியாளர்கள் தயங்குகின்றனர். இந்த நிலைமை நீடித்தால் மேற்படி குடிசைத் தொழில் நசித்து விடும்.

பள்ளிபாளையம்
7—6—58 ஏ. நாச்சிமுத்து

மனம் மாறுதா?

கல்கி ஜூலை 8உ இதழில் "இலங்கையில் அட்டூழியம்" என்ற தலையங்கத்தைக் கண்டோம். எங்கு சென்றாலும் தமிழர்களுக்கு ஏற்படும் அவல நிலையை எண்ணி வருத்தப்பட்டோம். தலையங்கத்தில் உள்ள ஒவ்வொரு வரியும் உயர்ந்த உபதேசமாகத் திகழ்கிறது. இதைப் பார்த்தாவது இலங்கை வாழ் சிங்களவர்களுக்கு மனம் மாறுதா?

"மேர"
மத்தியப் பிரதேசம்
8—6—58

கோ. எ. ராசன்
மு. இருட்டினன்
கி. மு. சிவா

கனிவுடைமையே பண்புடைமை

பஸ் பிரயாணம் பல ரகம். ஜன்னலருகே உட்கார்ந்து பல காட்சிகளைக் கண்டு ஆனந்திக்கும் குழந்தை; வேலை தேடும் தாபத்துடன் செல்லும் யுவர், யுவதிகள்; கலியாண மோகத்தில் மூழ்கும் இளம் தம்பதிகள். இவர்கள் ஆனந்த வாழ்வில் குதூகலிப்போர்கள்.

மற்றொருபுறம் வயோதிகர்களும், பிணியால் வாடும் தங்கள் உறவினரைப் பார்க்கத் துடிப்போர்களும், சுக துக்கங்களில், பஸ் பிரயாணம் இவ்வாறு இழைந்திருக்கிறது.

“அப்பனே, திருச்சிக்கு எப்பதாம்பா போய்ச் சேருவோம்?” என்று கண்டக்டரை அடுத்து - அடுத்து கேட்டுக்கொண்டே வந்தாள் அந்தப் பாட்டி. “அப்பனே, என் பேரன் சீக்கா யிருக்கிறான். ஊருக்குப் போக இன்னும் எவ்வளவு நேரந்தானாகும்பா, சொல்ல மாட்டியா?” என்று மீண்டும் அவள் கேள்வி எழுந்தது. இந்த பஸ் இன்னும் வேகமாகப் போகாதா என்பது போன்று பாட்டி குரல் ஒலித்தது.

“பாட்டி, கவலைப்படாதிங்க; இன்னும் ஒரே மணி நேரத்துக்குள் திருச்சி சேர்வோம். நம்ம சின்னதுரையை உங்க வீட்டுக்கு வழிகாட்ட வேண்டி யிருக்கேன்” என்றார் கண்டக்டர். வினயமும் அன்பும் கலந்த இப்பதில் பாட்டியை மனங்குளிரச் செய்தது. இவ்வித உருக்க மான அனுபவங்களே எங்கள் வாழ்க்கை.

பஸ்கள் பல ஓட்டுகிறோம். 41,929 மைல்கள் பிரயாணிகளைக் கொண்டு செல்கிறோம். ஆயிரக்கணக்கான நபர்களுக்கு ஊழிய, ஊதிய வசதி யளிக்கிறோம், இவை பெருமைப்படக் கூடிய சாதனைகளே. ஆனால் நாங்கள் போற்றுவது ஒரு பிரயாணியின் சிறப்புரையே — “டி. வி. எஸ். பஸ் கட்டணம் வாங்குவதில் மட்டும் குறியில்லை. நம்மை, அண்டை வீட்டார்போல அன்புடனும், ஆதரவுடனும் நடத்துகிறார்கள்.”


வினயத்துடன், பிரயாணிகளின் சௌகரியத்தை வளர்ப்பதே எங்கள் சுபாவம்.

சதர்ன் ரோட்வேஸ்



பிரைவேட் லிமிடெட், மதுரை

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)



பிள்ளைக் கனியமுது

கவிஞர் ஒரு பாட்டை நன்றாக அமைத்து விட்டால் மட்டும் போதாது; அதைப் பாடுகிறவரும் நன்றாகப் பாடவேண்டும்; அவரது சாரீரமும் நன்றாயிருக்க வேண்டும். எல்லா அம்சங்களும் ஒன்று சேர்ந்தால்தான் அந்தப் பாட்டு பூரண வெற்றி பெறும்.

பி. எஸ். வி. பிக்சர்ஸாரின் முதல் தயாரிப்பான இந்தப் படத்தில் குற்றம், குறை கூற வேண்டும் என்பதற்காக எதையும் நான் மிகைப்படுத்திக் கூறவில்லை. ஆனால் ஒரு படத்துக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் இருந்தும் இந்தப் படம் ஏன் ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெறவில்லை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

இந்தப் படத்தில் என்னவெல்லாம் இருக்கின்றன என்று முதலில் பார்ப்போம்.

சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாகக் கொண்டு, பசுவின் தோல் போர்த்திக் கொண்டிருக்கும் புலியின் தன்மையைக் கொண்ட அயோக்கியன் சச்சிதானந்தம் பலர் குடியைக் கெடுக்கிறான்; அவன் மனைவி உத்தமி. அவன் வயலில் வேலை செய்யும் உழவன் மகள் முத்தம்மாவை படைய முயல்கிறான். உழைப்பாளி முருகன் முத்தம்மாவின் காதலன். அவர்கள் இருவரும் "பிள்ளைக் கனியமுது ஒன்னு பிறந்திடவேணும்" என்று கற்பனை பண்ணிப் பாடுகின்றனர்.

காந்தன்

படத்தில், "போதும் போதும்" என்று கதறும் அளவுக்குக் காதல் இருக்கிறது; முத்தம்மா — முருகன் காதல் போதாக்குறைக்கு, நாட்டியக்காரி மோகனா—முருகன் காதலும் சேர்ந்து கொள்ளுகிறது; காக்கா ராதா கிருஷ்ணனின் காதல் வேறு பங்கு கொ கிறது. காதலில் சந்தேகம், பொறாமை இடம் பெறுகின்றன. புதுக் காதல் வளர்கிறது. நாட்டியக்காரி மோகனாவுக்கும் முருகனுக்கும் இடையே. மோகனாவுக்குப் பிள்ளைக்கனி அமுது பிறக்கிறது. அவனுடன் பற்பல தொல்லைகளும் பிறக்கின்றன. ஒரு கொலையும் ஒரு தற்கொலையும் படத்தின் நீளத்தை வளர்க்கின்றன. காட்டிலும், மேட்டிலும், வீட்டிலும், வாசலிலும் நடன நிகழ்ச்சிகள் இருக்கின்றன. கட்டிப் புரளும் யுத்தங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றில் மேஜை, நாற்காலிகள் உடைகின்றன; பாத்திரங்களும் பண்டங்களும் நொறுங்குகின்றன. மாடிப் படிகள் முறிகின்றன. நிரபராதி சிறை செல்லுகிறான்; கதாநாயகன் முருகன் அர்த்தம் இல்லாமல் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறான்; மலை வழியில் உருளுகிறான்; வாய்க்காலில் விழுகிறான்; சேற்றுக்குட்டையில் புரள்கிறான். கண்ணை இழந்து கதறுகிறான். இந்தக் கதையை ஒழுங்காகச் சொல்லிக் கொண்டு போக முடியாது. இப்படித்தான் தினசரிப் பத்திரிகைகளின் தலைப்புகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு படிப்பது போல் கதையைச் சொல்ல முடியும்!

ஏனென்றால், புயலடித்து ஓய்ந்த பிறகு, அந்தப் பிரதேசம் எப்படிக் காட்சி யளிக்குமோ, அப்படி இருக்கின்றன, இப் படத்தின் நிகழ்ச்சிகள். ஒன்றோடொன்று ஒட்டாமல் என்ன என்னமோ நிகழ்கின்றன.


"முதலாளி" படத்தில் நடித்து முன்னணிக்கு வந்திருக்கும் எஸ். எஸ். ராஜேந்திரன் கதாநாயகனாக அதாவது முருகனாக நடிக்கிறார்.

நடனமாடுகிறார்; பொய்க்கால் குதிரையில் ஆடுகிறார்; படகோட்டுகிறார்; சண்டை போடுகிறார்; முதலில் முத்தம்மாவைக் காதலிக்கிறார்; ஜங்ஷனில் ரயில் வண்டி பிரிந்து வேறு ஊருக்குச் செல்வதுபோல், அவர் காதலும் வேறு பாதையில் பிரிந்து நாட்டியக்காரி மோகனாவை யடைகிறது.

இந்தப் படத்தில் ராஜேந்திரனின் நடிப்பு ஆரம்பத்தில் முத்தம்மாவுடன் பேசும்போதும் ஆடும்போதும் நன்றாயிருக்கிறது. மோகனாவுக்காகப் புலியுடன் சண்டையிடும்போது மிக மிக நன்றாய்ச் செய்திருக்கிறார். மோகனா முருகனை வலியக் காதலிக்கும் கட்டத்தில், முருகன் பயந்து நடுங்கி, வெட்கப்பட்டு வளைந்து கொள்ளும்போது ராஜேந்திரன் மிகவும் இயல்பாக நடித்திருக்கிறார். ஆனால் குழந்தை பாபுவைப் பிரிந்து கதறும் கட்டத்திலிருந்து அவர் நடிப்பு வெறும் கதறலாகி விட்டது. அந்தக் கதறல் கதறினால்தான் படத்தின் சோக கட்டம் பூர்த்தியாகும் என்று அந்த இலட்சிய நடிகர் நினைத்தாரானால் அது ரொம்பவும் வருந்தத்தக்கது. சுவையுள்ள பால் அளவுக்கு மீறிக் காய்ந்து விட்டால், அந்தச் சுவை தீய்ந்து போய்க் கெட்டு விடுவதைப் போல் அளவுக்கு மீறிய அலறலினால் அந்தச் சோக கட்டம் தீய்ந்து விடுகிறது. கண்ணையிழந்து கதறும்போதும் வேண்டும் என்றே அப்படிச் செய்வதாகத் தோன்றுகிறது. இந்தக் கட்டங்கள் படத்தின் டைரக்டருக்குச் சிரமத்தைத் தராமற் போனது அதிசயந்தான்!

கதாநாயகியாக நடிக்கும் ஈ.வி. சரோஜா உபநடிகையாக வந்து நடிப்பதற்குத்தான் லாயக்கு என்பதை இந்தப் படத்தில் ருசுப் படுத்திவிட்டார். "அவர் கண்ணீர் விட்டு விம்மியும், காதலித்துக் கதறியும், நடனமாடியும், சொகுசாய்ப் பாடியும் நம் மனத்தை வசப்படுத்த அவரால் முடியவில்லை. எம். என். ராஜம் நாட்டியக்காரி மோகனா





வாக வருகிறார். அவர் 'பல' படங்களில் நடித்துப் பழக்கமாகிவிட்ட பாகம்தான் அது. ஆகவே, அவர் நடிப்பைப் பற்றி விசேஷமாகச் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால், கண்ணன் விக்கிரகத்துக்கு எதிரில் அவர் பிடித்த அபிநயம் 'அவரைச் சரித்து விட்டது! மிருதங்கம் பயின்றவர் திடீரென்று தவுல் வாசிக்க ஆரம்பித்தது போல் ஆகி விட்டது. நடிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் நடனமும் தெரிந்திருக்க முடியுமா? அப்படித் தெரிந்திருக்க வேண்டியது அவசியமும் இல்லையே!

வழக்கம்போல் வீரப்பா இந்தப் படத்தில் வில்லனாக வருகிறார். ஆனால் வழக்கமான அட்டகாசச் சிரிப்பை விட்டு விட்டார். சண்டைகள், சாகசங்களெல்லாம் நன்றாகச் செய்திருக்கிறார். வழக்கமாக எல்லாப் படங்களிலும் அவர் ஏற்றிருக்கும் வில்லன் பாகங்கள், கோபுரத்திலிருந்து தள்ளப்பட்டோ, ஆழ்கடலில் அமிழ்த்தப்பட்டோ மறைவது வழக்கம். ஆனால் அவருடைய இந்தச் சொந்தப் படத்தில், அவர் திருந்தி நல்வழிப்பட்டு விடுகிறார். இதுதான் படத்திலேயே புரட்சிகரமான மாறுதல்!

சச்சிதானந்தத்தின் மனைவியாக நடிக்கும் சந்தியா சீர்கெட்ட கணவனைச் சீர்திருத்த முயன்று தோல்வி அடைகிறார். சம்பூர்ண ராமாயணத்தில் மண்டோதரியாக வந்த அவருக்கு அந்தப் பாகம் புதிதல்ல. நன்றாய் நடித்திருக்கிறார்.

''ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை'' என்னும் பாட்டும், ''பிள்ளைக் கனியமுது ஒண்ணு பிறந்திட வேணும்'' என்னும் பாட்டும் நன்றாயிருக்கின்றன. ச. அய்யாப் பிள்ளை எழுதியிருக்கும் வசனம் நன்றாக அமைந்திருக்கிறது.

இந்தப் படத்தை டைரக்ட் செய்தவர் திரு எம். ஏ. திருமுகம்.

படத்தின் மிகவும் நல்ல அம்சம் :— ''பிள்ளைக் கனியமுது'' என்னும் பெயர்.

காஸ்ட்ரால்

ஆராய்ச்சி

எப்பொழுதும் முன்னணியில் நிற்கிறது



★ ஸிலிண்டர் தேய்மானத்தைக் குறைப்பதில், 1935-ல் முதல் ஸ்தானம் பெற்றது.

★ இயந்திரங்களை சுத்தப்படுத்துவதற்கு ஒரு சிறந்த எண்ணெயாக 1935-ல் முதல் ஸ்தானம் அடைந்தது.

★ பெட்ரோல் சிக்கனம், மிக எளிதான இயக்கம், துரிதமான ஓட்டம் ஆகிய அனுகூலங்களைப் பெற ஒரு இலேசான எண்ணெயை அறிமுகப்படுத்தி 1938-ல் முதன்மை ஸ்தானம் பெற்றது.

★ எண்ணெய் கெட்டுப் போகாது பாதுகாக்கக்கூடிய நூதன வழிகளைக் கையாளுவதினால் 1949-ல் முதன்மை ஸ்தானம் அடைந்தது.

★ துரு பிடிக்காமலும், அமிலங்களால் இயந்திர பாகங்கள் தேய்வு ஏற்படாமலும், பாதுகாக்கக்கூடிய ஹைபாய்ட் ஆக்ஸில் எண்ணெயை அறிமுகப்படுத்தியதால் 1951-ல் முதன்மையடைந்தது.

இப்பொழுது

"ஸிங்க் டையால்கில்டிதியோபாஸ்பேட்" மிகச் சிறந்த முறையில் "காம்" மற்றும் "டாபெட்" உறுப்புகள் தேயாது பாதுகாக்கிறது என்று யு. எஸ். ஏ. கோ-ஆர்டினேடிங் ரிசர்ச் கவுன்ஸிலின் 1957ம் ஆண்டு அறிக்கை தெளிவாக கூறுகிறது. காஸ்ட்ராலில் இந்த அடிடிவ் 1949ம் ஆண்டிலிருந்தே சேர்க்கப்பட்டு இருக்கிறது.

★ ஈடு இணையற்றது! 1958ல் உலகிலேயே மிகச் சிறந்த நவீன மோட்டார் எண்ணெய்

காஸ்ட்ரால் என்ற பெயரை

குறித்தே எப்பொழுதும் கேளுங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக இயங்க சக்தியை யளித்து வருகிறது!

1-50

ஆறாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு

லால்குடி கிருஷ்ணமூர்த்தி

"எழுத்தாளர் பெருமக்களே!

"வருக!

"மாநில மகாநாட்டுத் தலைவர் அவர்களே!

"வருக!

"புத்துலகச் சிற்பிகளே!

"வருக! வருக!

"ஆறாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டை அணி செய்ய வந்துள்ள அழியாப் புகழ் வாய்ந்த அறிஞர்களே!

"வருக! வருக!! வருக!!!

"உங்கள் அனைவரையும் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகராகிய நாகர்கோவில் மக்கள் சார்பில் மனமார மகிழ்வுடன் வரவேற்கிறோம். எழுத்தாளர்களாகிய உங்களுக்கு ஒருசேர நல்வரவேற்பு வழங்கும் வாய்ப்பினைத் தமிழகத்தில் பெற்றுள்ள முதல் நகர் மன்றம் நாகர்கோவில் நகர் மன்றமே என்று எண்ணும்போது எங்கள் இதயம் இன்பக் கடலாகிறது......!"

நாகர்கோவில் நகர் மன்றத்தார் அளித்த இந்த வரவேற்புரையைக் கேட்டவுடன் எங்களுக்குத் தலைகால் புரியவில்லை. எழுத்தாளர்களுக்கா இத்தகைய வரவேற்பு? இத்தனை புகழ்ச்சி மொழிகள்!

"ஆட்சி பீடத்திலுள்ள அமைச்சர்களையும், பெரிய பெரிய அரசியல் தலைவர்களையும் மட்டுமே வரவேற்றுப் பெருமை சூடிக் கொள்ளும் நகர் மன்றம்! அமைச்சர்களையும், காவியக் கலைஞர்களையும் உருவாக்கும் எழுத்தாளர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்துத் தன்னுடைய நிலையை உயர்த்திக் கொண்டிருக்கிறதே என்று வியந்து கொண்டிருக்கும்பொழுது...!

"என்ன அண்ணாச்சி! இங்கேயே நிற்கிறீங்களே! ஊர்வலம் கிளம்பிவிட்டதே!" என்று பக்கத்தில் நின்று கொண்டிருந்த அன்பர் ஒருவர் என் தோளில் கையை வைத்து உலுக்கினார்.

ஊர்வலத்தை நோக்கி விரைந்தேன்.

பாண்டும், மேளமும் முழங்க, அலங்கரிக்கப்பட்ட யானை முன் செல்ல, மாநாட்டுப் பிரதிநிதிகளும், நகர்ப் பொதுமக்களும் சூழத் திறந்த காரில், மாநாட்டுத் தலைவர் ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா அவர்களும், அமைச்சர் ஹுமாயூன் கபீர் அவர்களும், திருவாளர்கள் எல். குண்டப்பா, எஸ். சங்கரராஜ் நாயுடு, ப. ஜீவானந்தம், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் டி. வி. ராமசுப்பய்யர் முதலியோர்களும் பவனி வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அங்கங்கே பலர் தலைவர்களுக்கு மாலை சூட்டி மகிழ்ந்தார்கள். 'இதுவரையில் இதைப் போன்ற ஒரு மாபெரும் ஊர்வலத்தை நாகர்கோவிலில் கண்டதேயில்லை' என்று பேசிக் கொண்டார்கள்!

"வழக்கம் போல் சென்னையிலேயே இந்த ஆறாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடும் நடந்திருந்தால் இத்தகையதொரு காட்சியைக் கண்டிருக்க முடியுமா?" என்று யாரோ கூறியதும் என் காதில் விழுந்தது.

ஊர்வலம், மாநாடு நடைபெற இருக்கும் சேதுலட்சுமிபாய் உயர்தரப் பாடசாலைக் கட்டடத்தை அடைந்தது. அந்தக் கட்டடத்தைப் பார்த்து, 'இது உயர்நிலைப் பள்ளியா? அல்லது மாபெரும் கல்லூரியா?' என்று வியக்காதவர்களே கிடையாது. வீதி மட்டத்திலிருந்து ஐம்பதடி உயரத்துக்குப் படிப் படியாக உயர்ந்து கம்பீரமாகக் காட்சியளித்தது அந்தப் பள்ளி.

அதற்குள், ஒலிபெருக்கியில் பித்துக்குளி முருகதாசின் பிரார்த்தனை கீதம் கணீரென்று ஒலித்து அனைவரையும் மெய்மறக்கச்செய்தது.

அதைத் தொடர்ந்து, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் திரு டி. வி. ராமசுப்பையர் தமது அழகிய வரவேற்புரையை நிகழ்த்தினார்.

"இன்று மாநாடு கூடும் இந்த மாவட்டத்தைப் பற்றிச் சில வார்த்தைகள்" என்று தொடங்கி, "தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதாகக் கூறப்படும் அதங்கோடு இங்கிருந்து பத்து மைல் தூரத்தில்தான் இருக்கிறது. இங்கு பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து சிறந்த தமிழறிஞர்கள் எத்தனையோ பேர்கள்! திருவாளர்கள்: கே. என். சிவராஜ பிள்ளை, சதாவதானம் ஷேக் தம்பிப்பாவலர், தசாவதானம் ஆறுமுகம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அனைவரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்களே.

"இதன் வளங்களைக் கூறவேண்டுமா? கடலில் விதம் விதமான மீன்கள், கழனிகளில் பல் வகை நெல்கள்.. மா, பலா, வாழை என்ற முக்கனிகளிலும் நூற்றுக்கணக்கான வகைகள், வண்ணங்கள்!

"வனச் செல்வங்களான தேக்கு, ஈட்டி, வேங்கை போன்ற உயர்ந்த மரங்கள். தேயிலை ரப்பர் போன்ற பணப் பயிர்கள், அணுசக்திக்குப் பயன்படும் அற்புத மணல். இன்னும் எத்தனையோ வளங்களையும், சிறப்புக்களையும் கொண்டது எங்கள் நாஞ்சில் நாடு....!" என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டார்.

தமது கருத்துச் செறிவு நிறைந்த துவக்க உரையில் இந்திய அமைச்சர் ஹுமாயூன் கபீர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"இந்திய மொழிகளில் எதற்குமில்லாத் தனிச் சிறப்பு தமிழுக்கே உண்டு! இலக்கிய வளம் நிறைந்தது தமிழ்! இனிமை மிக்கது தமிழ் மொழி!

"ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைப் பேரிலக்கிய வளம் நிறைந்த மொழி தமிழே! அது மட்டுமல்ல, சங்கிலிக் கோவை போல் தடைபடாத - விடுபடாத நீண்ட மரபு தமிழைப் போல் வேறெந்த மொழிக்குமே கிடையாது! ஆண்டுகள் பல் லாயிரம் ஆன பின்னும் இளமைப் பொலிவு குன்றாக் கன்னி மொழி இது!

''அரசியல் ஆதரவு காரணமாக எந்த மொழியும் வளருவதில்லை! வாழையடி வாழையாகப் பல எழுத்தாளர்கள் தோன்றி மொழிகளை வளம் குன்றாமல் செய்து வந்தார்கள் என்றுதான் சரித்திரம் கூறுகிறது.

''தாகூரின் அறிவுத் திறத்தால் வங்காளி மொழி சிறந்த மொழியாகிவிட்டது. எனவே, அம்மொழி மாகாண மொழியாவதில் எவ்விதச் சிக்கலும் இல்லை. பல ஐரோப்பிய நாடுகளில் வங்காளி மொழி கற்பிக்கப்படுகிறது என்றால், அதற்கு அரசியல் முறைகளோ, பொருளாதாரத் தத்துவங்களோ காரணமல்ல. வற்றாத ஊற்றுப் போன்ற அரும் பெருங் கருத்துக்களடங்கிய நூல்களைத் தாகூர் அம்மொழியில் எழுதி அதை வளப்படுத்தியிருப்பதே அதற்குக் காரணம்.

''தமிழ் எழுத்தாளர்களும் இதைக் கடைப்பிடித்துக் கலையழகும் கருத்தழகும் செறிந்த நூல்களை உருவாக்குவார்களானால், அவர்கள் பெரிய சாதனைகளைச் செய்தவர்களாவார்கள்!

''தொன்மை நிறைந்த மொழிகளெனக் கருதப்படும் சீன, சம்ஸ்கிருத மொழிகள் கடந்த காலத்தில் எத்தனையோ மாறுதல்களுக்கு ஆளாகி விட்டன. ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மொழி சிறிதும் மாறவில்லை. எழுத்தறிவில்லாதவர்கள் கூடத் தமிழ்க் காவியங்களைப் பிறர்படிக்கக் கேட்டுப் புரிந்து கொள்ளக் கூடிய பெருமை தமிழுக்கு உண்டு. இந்தக் காரணத்தினால்தான் உலகின் எந்த மொழியையும் விடத் தமிழ் மொழி சிறந்ததெனக் கருதப்படுகிறது'' என்று தமிழ் மொழி பற்றித் தமது கருத்துக்களைக் கூறினார். தொடர்ந்து, ''எழுத்தாளர்கள் அரசியலில் ஈடுபடாமல் தங்கள் உணர்ச்சிகளையும், சிந்தனைகளையும் மொழிவழியாய் வெளியிட வேண்டும்!'' என்று கூறித் தமது துவக்க உரையை முடித்தார் விஞ்ஞான ஆராய்ச்சி, கலாசார இலாகா அமைச்சர் பேராசிரியர் ஹுமாயூன் கபீர் அவர்கள்.

பிறகு பலத்த கரகோஷங்களுக்கிடையே தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும், ஆறாவது மாநாட்டுத் தலைவருமான அறிஞர் வெ. சாமிநாத சர்மா அவர்கள் தமது தலைமையுரையை அரங்கேற்றினார்.

தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றிய காலத்திலிருந்து அதற்கு முறையே தலைமை தாங்கித் திறம்பட நடத்தி வந்த அறிஞர்கள் நால்வருக்கும் முதலில் தம் அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு பேசலுற்றார் :—

''தமிழில் சிறுகதை இலக்கியம் வளர்ந்திருப்பதைப் போல் நாவல், நாடக இலக்கியங்கள் வளரவில்லை. கட்டுரைகளும், கடித இலக்கியங்களும் அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் நல்ல நூல்களும் எழுதப்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

''சமூகம், மனோதத்துவம், தாவரம், பிராணிவர்க்கங்கள், உடற்கூறு ஆகிய சாஸ்திரங்களைப் பற்றித் தமிழில் சரியான நூல்களை வரவில்லையென்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது!

''சுயமாகத் தொழில் செய்ய விரும்புவோர் இப்பொழுது ஆங்கிலத்தின் உதவியைத்தான் நாடவேண்டியிருக்கிறது. தொழில் நுட்பங்கள் கூறும் புத்தகங்கள் தமிழில் வேண்டாமா? எழுத்தாளர்களே! இதைப் பற்றிச் சற்றுச் சிந்தியுங்கள்!

''இந்தத் துறை நோக்கி நமது எழுதுகோலைச் செலுத்த வேண்டும்; ஆம்! சீக்கிரமாகவும், வேகமாகவும் செலுத்த வேண்டும்!'' என்று தலைவர் அவர்கள் தமதுநீண்ட தலைமை உரையில் குறிப்பிட்டார்.

அதன் பிறகு, அமைச்சர், ஹுமாயூன் கபீர் அவர்கள், கோவை சிவக் கவிமணி சி.கே. சுப்ரமணிய முதலியார் அவர்களுக்கும் அண்ணாமலை நகர் நியாய சிரோமணி பி. எஸ். இராமாநுஜாச்சாரியார் அவர்களுக்கும் வெள்ளிக் கேடயங்களை வழங்கிக் கௌரவித்தார்:

சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்களையும், இராமாநுஜாச்சாரியார் அவர்களையும், எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு கொடுமுடி ராஜகோபாலன் அறிமுகப்படுத்தி வைத்தார்.


தலையிலும், கழுத்திலும் உருத்திராட்ச மாலைகள்தவழ, சிவப்பழமாகக் காட்சியளித்த எண்பது வயதுத் தொண்டு கிழவர் சிவக்கவிமணி அவர்களை இன்றையத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்து வைத்தமைக்காக எழுத்தாளர் சங்கத்தைத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் வாயார வாழ்த்தும் என்பதற்கு ஐயமேயில்லை.

1878-ம் ஆண்டில் பிறந்து, 1899-ல் பி. ஏ. பட்டம் பெற்று, தமிழில் மாகாணத்திலேயே முதன்மையாகத் தேர்ந்து தங்கப் பதக்கம் பெற்ற சிவக்கவிமணி அவர்கள், 1903-ல் சட்டப் படிப்பு கற்று வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார்.

ஆனால், அவருக்குள்ள தெய்வ சிந்தனையும், சைவப் பற்றும், தமிழ் ஆர்வமும், அவரை வேறுவகையில் திருப்பிவிட்டன.

துவக்க உரை: பேராசிரியர் ஹுமாயூன்கபீர். அவரை ஊன்றிக் கவனிப்பவர் சிவக் கவிமணி அவர்கள்.





தலைவர் வெ. சாமிநாதசர்மா தலைமையுரை.

அதன் பயனாய், சேக்கிழார், மாணிக்கவாசகர் என்ற வரலாற்றுஆராய்ச்சி நூல்கள் தமிழுக்குக் கிடைத்தன.

1935-ல் பெரிய புராணத்துக்கு விரிவுரை எழுதினார். நூற்றுக் கணக்கில் சாற்றுக் கவிகள் இயற்றிப் புகழ் பெற்றார். அவர் இயற்றிய முழுச் செய்யுள் நூல் அவிநாசி—கருணாம்பிகைப் பிள்ளைத் தமிழ் ஆகும்!

'கருத்தில் தெளிவு, பேச்சில் வல்லமை, சைவத்தில் ஆழம், வயதில் முதிர்ச்சி இவைகள் ஒருங்கே சேர்ந்துள்ள சிவக் கவிமணி திரு சி. கே. சுப்பிரமணிய முதலியார் நீண்ட நாட்கள்வாழ்ந்து தமிழ்த் தொண்டுசெய்ய ஆண்டவன் அருள் புரிவானாக!' என்று வேண்டிக் கொண்டு அண்ணாமலைநகர் பி. எஸ். இராமாநுஜாச்சாரியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளை எடுத்துக் கூறினார் செயலாளர்.

தஞ்சை மாவட்டம் பராந்தகன் கரையில் 1915ம் ஆண்டு தோன்றிய இராமாநுஜாச்சாரியார் 1936ம் ஆண்டு சென்னை மாநிலத்திலேயே வடமொழியில் முதல்வராகத் தேறி, பிட்டி முனுசாமி செட்டி தங்கப் பதக்கமும், திருவையாறு அரசர் கல்லூரியின் வெள்ளிக் கோப்பையும் பெற்றார்.

1937 முதல் 1944வரை சிதம்பரம் பொன்னம்பலப் பிள்ளை சம்ஸ்கிருதப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1944 முதல் 1946வரை பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களுடன் கௌடில்ய அர்த்த சாஸ்திரத்தின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு உறுதுணையாக இருந்தார். 1946ம் ஆண்டில் உடல்நலக் குறைவால் பண்டிதமணியவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து விலகிய பின், அர்த்த சாஸ்திரத்தின் மொழிபெயர்ப்பில் எஞ்சிய பகுதிகளைத் தாமே மொழிபெயர்த்துப் பதிப்பித்தார்.

1952 லிருந்து கம்பராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். அண்மையில் தமிழ் வித்துவான் பரீட்சையிலும் தேர்வு பெற்றுத் தமிழ்மொழித் தொண்டுக்குத் தம்மைத் தயாராக்கிக் கொண்டு விட்டார்.

"நாற்பத்து இரண்டு ஆண்டுகளே நிரம்பியுள்ள பி. எஸ். இராமாநுஜாச்சாரியார் அவர்கள் இன்னும் பல காலம் வாழ்ந்து தமிழுக்கும், வடமொழிக்கும் தொண்டாற்றிச் சிறக்க வேண்டுமென்பதே நமது அவாவும், பிரார்த்தனையுமாகும்!" என்று கொடுமுடி இராஜகோபாலன் அவர்கள் தமது அறிமுகக் கோவையை முடித்ததும், சிலம்புச் செல்வரின் பிரதம சீடர் அறிஞர் ந. சஞ்சீவி அவர்கள், கேடயங்கள் பெற்ற இரு பெரியார்களுக்கும் வாழ்த்துரை வழங்கினார்.

கேடயம் பெற்ற இரு பெரியார்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்குத் தங்கள் நன்றிகளையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

பிறகு மகாநாட்டின் வெற்றியைக் கோரும் வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பட்டன.

தொடர்ந்து, காலஞ் சென்ற மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களின் நினைவு நிதிக்காக 101 ரூபாய் கொண்ட பணப் பையைத் தலைவர் வெ. சாமிநாதசர்மா அவர்கள், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், அமைச்சர் ஹுமாயூன் கபீர் அவர்களிடம் கொடுத்ததும் கரகோஷம் வானைப் பிளந்தது.

அதன்பிறகு, நாஞ்சில் நாடு பெற்ற தவச் செல்வர் சதாவதானி ஜனாப் செய்குத் தம்பிப் பாவலர் அவர்களின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்து, தமக்கே உரிய தமிழ் உரை நிகழ்த்தினார் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள்.

செய்குத்தம்பி பாவலரின் நினைவாட்சித் திறன் இணையற்றது. இமயம் போன்றது. அவர் படிக்காத தமிழ் நூல்களும், அவர் மனத்தில் வதியாத தமிழ்ப் பாக்களும் கிடையாது.


ஒரே சமயத்தில் நூறு பேர்கள், நூறு விதமாகக் கேட்கும் கேள்விகளை மனத்தில் அடுக்கி வைத்து விட்டு, அவரவர்களுக்குத் தகுந்த பதிலை அணி அணியாகத் தரும் அவரது ஆற்றலைக் கண்டு வையமே வியக்கும். அதனால்தான் கவிமணியவர்களும் :—

" ஒரும் அவதானம் ஒருநூறுஞ் செய்திந்தப்
பாரில் புகழ்வளர்த்த பண்டிதனை-சீருடைய
செந்தமிழ்ச் செல்வனை, செய்குத்தம்பிப்—
பாவலனை
எந்தநாள் காண்போம் இனி!"

என்று, பாவலரின் மறைவு கேட்டு வருந்திப் பாடினார்கள்.

இத்தகைய தமிழ் மகனின் உருவப்படத்தில் ஒன்றை இங்கு மட்டும் திறந்து வைத்தால் போதுமா? தமிழகமெங்கும், தமிழர் உள்ளங்களிலெல்லாம் திறக்கப்பட வேண்டிய திரு உருவமல்லவா!" என்று திரு ப. ஜீவானந்தம் அவர்கள் தமது உரையை முடித்தார்.

இரவு உணவுக்குப் பிறகு, நாஞ்சில் நாட்டு நாட்டியக் கலைஞர், கண்ணப்பர் டி. எம். தேவதாஸ் அவர்களின் குழுவினரால் ஒரு நாட்டிய இசைவிருந்து நடைபெற்றது.



மாநிலமாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர்
டி. வி. ராமசுப்பையர் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

தமிழ் இலக்கியங்களைக் கன்னடத்தில் மொழி பெயர்த்த அறிஞருமான திரு எல். குண்டப்பா அவர்களுக்கும், இந்தி எழுத்தாளரும், தமிழ் இலக்கியங்களை இந்தி மொழியில் மொழிபெயர்த்தவருமான அறிஞர் திரு எஸ். சங்கர ராஜநாயுடு அவர்களுக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கம் தங்கப் பதக்கங்களை வழங்கி அவர்களைப் பாராட்டியது.

கன்னியாகுமரி மாவட்ட நீதிபதி எஸ். கணேசன் எம். ஏ. பி. எல். அவர்கள் சங்கத்தின் சார்பில் பதக்கங்களை இரு அறிஞர்களுக்கும் வழங்கினர்.

செல்வியர் சோபனாதேவி, சொரூப ராணி ஆகியவர்களின் நாட்டியமும், அபிநயங்களும் சுசித்திரமாக இருந்தன.

கண்ணப்பர், ஏலங்குழலி என்ற இரு இசை நாடகங்களிலும் டி. எம். தேவதாஸின் நடிப்பும், உணர்ச்சி மிக்க பாவங்களும் எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றன.

இரண்டாம் நாள் செல்வி சீதாவின் இறை வணக்கத்துடன் மகாநாடு ஆரம்பமாயிற்று.

திரு கு. அழகிரிசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற, "தமிழில் நாவல்கள்!" என்ற பொருள் பற்றிய விவாத அரங்கில் திருவாளர்கள் : க. நா. சுப்பிரமணியம், கன்னிக் கண்ணன், லால்குடிகிருஷ்ணமூர்த்தி, மாறன், வேலாயுதம், ரா. கி. ரங்கராஜன், தி. க. சிவசங்கரன், ஆர்வி., சுந்தர ராமஸ்வாமி, எம். எஸ். கமலா, ஜெயராமன், டி. எஸ். நாராயணன், த. சஞ்சீவி, வானமாமலை, சிதம்பர ரகுநாதன், சி. சு. செல்லப்பா ஆகிய பதினாறு எழுத்தாளர்கள் கலந்து கொண்டு விவாதத்தைக் காரசாரமாக்கினார்கள். திரு கு. அழகிரிசாமி தமது அரங்குத் தலைமையைத் திறம்பட வகித்து வெற்றி கண்டார்கள்.

பகல் உணவுக்குப் பிறகு, வழக்கம்போல் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. அவைகளில், காலஞ்சென்ற எழுத்தாளர்கள் கி. ரா. கோபாலன், மௌலானா அபுல்கலாம் ஆசாத், நாஞ்சில் இலக்குமி அம்மாள் ஆகியவர்களுக்கு அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றியதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

இத்துடன் பிற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது. மாலையில் : கன்னட மொழி எழுத்தாளரும், திருவாளர் குண்டப்பா அவர்களும் சங்கரராஜ் நாயுடு அவர்களும் நன்றி தெரிவித்த பின், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் திரு உருவப்படத்தைச் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞான கிராமணியார் திறந்து வைத்து அரிய இலக்கியச் சொற்பொழிவாற்றினார்கள்.

ம. பொ. சி. யின் அன்றையப் பேச்சு கருத்துச் செறிவோடும், இலக்கிய நயத்தோடும் வெகு அற்புதமாக அமைந்திருந்தது. நாகர்கோவில் நகரமே திரண்டு வந்து ம. பொ. சி. யின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தது.

மறுநாட்காலை (2-6-58) ஆறுவது மாநில மாநாட்டு வரவேற்புக் குழுவினர் வெளியூர்ப் பிரதிநிதிகளுக்கு ஒரு ரசமான பழ விருந்து வைத்து உபசரித்து வழியனுப்பினார்கள்.


நாகர்கோவிலில் நடந்த தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆறுவது மாநில மாநாடு வெற்றிகரமாக இனிது நடந்தேறியது.

மாநாட்டின் வெற்றிக்காக இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்த கன்னியாகுமரி—எழுத்தாளர் சங்கத் தொண்டர்களையும் முக்கியமாக, செயலாளர் நாஞ்சில் திரு பி. எஸ். மணி, துணைச் செயலாளர்கள் திரு எஸ். கே. பாண்டியன், திரு சுந்தர ராமசாமி, தலைவர் தாணுலிங்க நாடார் எம். பி. ஆகியவர்களின் கனிவு ததும்பும் திருமுகங்கள் இன்னும் நினைவில் இருக்கின்றன !

நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம்செயும் குமரி,

கன்னியாகுமரி மாவட்டத்தையும், தமிழகத்தையும் காத்து எல்லா நல்வளங்களும் பெருகச் செய்வாளாக. வாழ்க தமிழ் !

எல்லோருக்கும் தெரியும் —





ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்

ப்ரூக் பாண்ட் தேயிலையையே

அருந்துகிறார்கள் !

ப்ரூக் பாண்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்


நாள் முழுவதும்
கவர்ச்சிகரமாக
தோற்றமளிக்க
"GOKUL"
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
TOILET POWDER
ஸாண்டல்வுட்
டாய்லட் பவுடர்
சுத்தமான தனி சந்தனத்தை
மென்மையாக்கப்பட்டது...
ஸாண்டால்
சந்தனத்துடன் கூடிய
டால்கம் பவுடர்....
டி. எஸ். ஆர் & கோ
கும்பகோணம்
A.K. GOPAL & CO.

பாவை விளக்கு

அத்தியாயம் 15

இன்பத்துக்கோர் எல்லை காணில்....

அகிலன்



இரவு சரியாக ஒரு மணி. சுவர்க் கடிகாரத்தின் முள்ளைத் திரும்பிப் பார்த்தாள் உமா. அது வரையில் வெண்பஞ்சுப் பொதியைப் போல் உல்லாசமாகக் காற்றில் மிதந்த அவள் மனம், திரண்ட கருமேகமாக மாறியது. குழந்தை கல்யாணியின் நினைவு வந்தவுடன் அவள் நெஞ்சு கனத்தது; உடல் கனத்தது; அவள் சோர்வுற்றாள்.

"எனக்காக ஒரு உதவியைச் செய்வீர்களா?"

"என்ன?"

"நான் தூங்கப் போகிறேன். நீங்கள் விழித்துக் கொண்டிருக்க வேண்டும்."

"இது என்ன வேடிக்கை?"

"வேடிக்கை ஒன்றுமில்லை. இந்த விளக்கை யார் பார்த்துக் கொள்வது? இதற்கு எண்ணெய் வார்த்துத் திரியைத் தூண்டிவிட வேண்டாமா? இந்த இரவெல்லாம் அது எரிய வேண்டும்."

"சரி, உன் உத்தரவு" என்றான் தணிகாசலம்.

"பயப்படாதீர்கள்; சீக்கிரம் நான் விழித்துக் கொண்டு விடுவேன். பிறகு நீங்கள் நிம்மதியாய்த் தூங்கலாம்."

காலங் காலமாய்த் தூங்காத தூக்கமெல்லாம் ஒன்று சேர்ந்து உமாவின் கண்களைச் சுழற்றியது. கொட்டாவி மேல் கொட்டாவி விட்டுக் கொண்டே, பாதி உறக்கமும் பாதி விழிப்புமாக, அவனிடம் பேசிப் பார்த்தாள். பேச்சில் தெளிவில்லை. சொற்கள் தடுமாறின. பிறகு அயர்ந்து தூங்கத் தொடங்கினாள்.

தணிகாசலத்துக்கும் ஏதாவது வேலை வேண்டுமல்லவா? எதிரில் நின்ற விளக்கையும் அருகில் இருந்த உமாவையும் அவன் மாறி மாறிப் பார்த்தான். உமாவின் முகத்தில் அளவற்ற பேரமைதி நிலவியது. ஆடாமல் அசையாமல் புரளாமல் அவள் வெகு நேரம் உறங்கினாள். உறக்கத்தைத் தழுவிக்கொண்ட இமைகள் நான்கும் அருள்பெற்ற சிற்பச் செல்வத்தின் விழிகளுக் கொப்பாக விளங்கின. 'விழித்த கண்களில்தான் புன்னகையைக் காண முடியுமா? விரிந்த இதழ்களில்தான் சிரிப்பைக் காண முடியுமா? இதோ, என்னைப் பாருங்கள்!' என்று அவள் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தாள். போதி மரத்தடியில் வீற்றிருந்த

புத்தர் பெருமானின் கருணை பொங்கும் திருமுகம் அப்போது அவன் நினைவில் வந்தது. 'பெண்மை கலந்த அன்பு முகம்தானே அதுவும்!'

இரவின் தனிமையில் உமாவின் அருகில் உறக்கத்துடன் போராடிக் கொண்டிருந்தவனுக்கு விசித்திரம் விசித்திரமான கற்பனைகள் தோன்றின. அடிக்கடி அவளைப் பார்த்துத் தனக்குள் மெதுவாகச் சிரித்துக் கொண்டான். அந்தச் சிரிப்பில் ஆழ்ந்ததொரு வருத்தம் தோய்ந்திருந்தது. அதன் காரணம் அவனுக்குத் தெரியவுமில்லை; அதை அவன் ஆராய்ச்சி செய்ய முயலவும் இல்லை.


வருடக் கணக்கில் நடந்த மனப் போராட்டங்களையும், சற்று முன்பு முன்னிரவில் நடந்த நிகழ்ச்சிகளையும் அவன் மனம் அசை போடத் தொடங்கியது. 'இதில் யாருக்கு வெற்றி? யாருக்குத் தோல்வி?—இரண்டு பேருக்குமே தோல்வியாக இருக்கட்டும். ஆனால் அந்தத் தோல்வியால்தான் அவளுக்கு என்னைக் கொடுக்கவும் முடிந்தது; அவளை என்னால் எடுத்துக் கொள்ளவும் முடிந்தது.'

மெல்லத் திரும்பி அவள் நெற்றியில் புரண்ட கேசத்தை ஒதுக்கி விட்டான் தணிகாசலம். படுக்கையில் நசுங்கிய மலர்கள் தங்களது கடைசி வாசனையை ஒரே மூச்சாய்ப் பரப்பிக் கொண்டிருந்தன. வலுவிழந்த நசுங்கித் தவிக்கும் மலர்களிடம் இத்தனை மணமா? உமாவிடம் இத்தனை குதூகலமா?

நெற்றியில் அவன் கரம் பட்டவுடன், அந்தச் சிறிய ஸ்பரிசத்தைத் தாங்காமல், அவள் சிணுங்கிக் கொண்டு தன் கீழ் உதட்டை நெளித்தாள். 'தொட்டாற் சுருங்கி! வாழ்க்கையின் பெருஞ் சுமையை நீ எப்படித்தான் தாங்கப் போகிறாயோ?' என்று தனக்குள் பேசிக் கொண்டான் தணிகாசலம். அதற்குமேல் அவளைக் கடிந்து கொள்வதற்கு அவனுக்குப் பிடிக்கவில்லை. சற்று நேரத்துக்கு முன்புதான் அவள் அவனை மலர்களும், மரங்களும், கனிகளும், அருவிகளும், பறவைகளும் நிறைந்த இன்ப உலகத்துக்கு அழைத்துச் சென்றாள்.—'பாவம், உமா!' என்று அவன் பெருமூச்சு விட்டான்.

விளக்கொளி ஒரு துடிப்புத் துடித்தது. ஓடிப்போய் அதைத் தூண்டிவிட்டான். அந்த ஒளியையே உற்றுப் பார்த்தவனின் கண்கள் அங்கிருந்தவாறே உமாவின் முகத்துக்கு வந்தன. கண்கள்தான் ஏமாற்றுகின்றனவா? அல்லது அந்தப் பாவை விளக்கின் அதிசய ஒளி வேடிக்கை காட்டுகின்றதா?

திரியிலிருந்து சுடர் மட்டிலும் காற்றில் மிதந்து வந்து அவள் புருவங்களுக்கு மத்தியில் நின்று எரிந்தது. அவளுடைய குங்குமப் பொட்டுகளுக்கு மேலே இந்தத் தங்கச் சுடர் பதிந்து பிரகாசித்தது. குங்குமப் பொட்டு ஏன் நெருப்புப் பொட்டாக மாறுகிறது? மனிதப் பெண் ஏன் தெய்வப் பிறவி போல் அச்சத்தை எழுப்புகிறாள்? கண்களைக் கசக்கிக் கொண்டான் தணிகாசலம். 'வீண் மனப் பிரமை' என்று சொல்லித் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.





பாவை விளக்கின் சுடரைப் பாவையின் நெற்றியில் கண்டவுடன் அவன் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. அதை மறந்து விட்டுக் கவிதைத் தோணியில் மிதப்பதற்காக அவள் எழுதிய கவிதைப் பிரதியைக் கையில் எடுத்தான். விளக்கு அருகில் ஒன்றி உட்கார்ந்து பக்கங்களைப் புரட்டினான்.

ஏதோ ஒரு பக்கத்தில் அவள் புதிதாகச் சிறு குறிப்பு ஒன்று எழுதியிருந்தாள். கண்ணபுரத்தில் அவள் அவனிடம் நேரில் தெரி

வித்த கருத்துத்தான் அது. "சந்தனமென்று நீங்கள் நினைத்த சிறு துரும்பு தன் ஆத்மாவையும் மரணத்தையும் இந்த வரிகளில் வடித்து விட்டது. இனிமேல் இருப்பது மணமற்ற மரத்துண்டுதான். எரிந்து சாம்பலாக வேண்டிய வெறுங் கட்டை! என்னுடைய தோல்விக்கு மட்டும் நீங்கள் காரணமென்று நினைக்காதீர்கள். அதை நினைத்து வருந்தாதீர்கள். தோல்வியில்லாமல் வெற்றி ஏது? என் லட்சிய சித்தியான இந்தக் காதல் கவிதைகளின் தலைவர் நீங்கள்தாமே?"

தணிகாசலம் அந்தத் 'தாஜ்மஹால்' கவிதைகளைப் படிப்பதை நிறுத்தி விட்டு எதிரில் கூர்ந்து பார்த்தான்:—



அன்புபொங்கும் உமாவின் முகத்தில் விளக்கொளி படர்ந்திருந்தது. அவனுடைய கவிதைகளைப் போல.

உமாவின் முதுகுப் புறத்தை இருண்ட நிழல் மூடிக் கொண்டிருந்தது. அவன் வாழ்க்கையைப் போல.

'விளக்கு ஒளியை மட்டும் தருவதாக நினைப்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்?' என்று தனக்குள் எண்ணிச் சிரித்துக் கொண்டான் தணிகாசலம். 'நிழலில்லாமலே ஒளி யில்லை; ஒளியில்லாமல் நிழலில்லை. இணைபிரியாக் காதலர்களா ஒளியும் நிழலும்? ஒளியைக் கொடுப்பதும் ஒளிதான்; நிழலைக் கொடுப்பதும் ஒளிதான்!'

'ஆண்டாள் மாத்திரமென்ன?' என்ற ஒரு கேள்வியும் தணிகாசலத்திடம் எழுந்தது. 'உள்ளத்தின் ஒளியால் புள்ளைப் பாடித் திரிந்த அவளே, உடல் வாதனைகள் அனைத்தையும் தன் உள்ளத்தால் அநுபவித்த பிறகே பாடியிருக்கிறாள். ஆனால் பாடிக் கொண்டே ஆண்டாள் வெகு உயரத்துக்குப் போய் விட்டாள். சாதாரணப் பெண்களால் எட்டிப் பிடிக்க முடியாத உயரம் அது. —உமாவுக்குத் தன் பொன்னுடலைச் சுமந்து கொண்டு அத்தனை உயரத்தில் பறந்து போகும் வலிமை இல்லையா? உடலின் சுமை அவளை என்னிடம் இழுத்துவந்து விட்டதா?—அடைக்கலம் புகுந்துவிட்டாள்; தஞ்சம் தஞ்சமென்று கெஞ்சி விட்டாள்; சரணாகதியாக விழுந்து விட்டாள்.'

நெற்றியை நோக்கிச் சென்ற சுடரை நினைத்தவுடன், அவனுக்கு உமாவிடம் காதல் உணர்ச்சி மறைந்து, பக்தியும் பயமுமே மிஞ்சின. கவிதை ஆவேசத்தால் ஏற்பட்ட தொல்லைகளை அவள் அவனுறவால் தீர்த்துக் கொண்டவுடன் திரும்பவும் தன் பழைய நிலைக்கே உயரப் பார்க்கிறாளா? மத்தியில் தோன்றி அவள் மனத்தை மறைத்து மூடிய மாய இருளைக் கிழிப்பதற்காக அந்த ஒளி அவளிடம் திரும்பவும் சென்றது போலும்!

கடிகாரத்தின் துடிப்புக்கு ஏற்ப விளக்கொளியும் ஆடித் துடிப்பது போல் அவனுக்குத் தோன்றியது. விளக்கு நிறைய வழிய-வழிய எண்ணெயை நிரப்பினான். திரியை நன்றாகத் தூண்டி விட்டான். திரும்பவும் கட்டிலுக்கே வந்து, சுவரில் சாய்ந்து கொண்டு, உமாவைக் கவனித்தான். தூக்கமான தூக்கம் அவளுக்கு! ஒரு நாள் தூக்கமா? இரண்டு நாள் தூக்கமா? பல இரவுகள் அவனிடம் கண்ணாமூச்சி விளையாடி அவனை ஏமாற்றிய தூக்கம். ஆசையின் நிறைவு தந்த ஆனந்தத் தூக்கம்.

தூக்கம் ஒரு தொத்து வியாதி. பக்கத்தில் இருப்பவர்களை அது சும்மாவிடாது. தணிகாசலமும் கொட்டாவி விடத் தொடங்கினான். கண்களைக் கசக்கிக் கொண்டு தூக்கத்தை விரட்டப் பார்த்தான். தூக்கம் வந்து விட்டால் விளக்கைத் தூண்டி விடுவது யார்? உமாவோ பகல் பன்னிரண்டு மணி வரையில் எழுந்திருக்க மாட்டாள் போல் தெரிந்தது.

அவள் தூக்கத்தைக் கலைக்கவும் அவனுக்கு மனமில்லை. அவனையும் தூக்கம் விடுவதாகத் தெரியவில்லை. நித்திரைப் பெண்மணி அவன் கண்களுக்கு முன்னே வந்து சதிராட்டம் போட்டு அவனைத் தன் வலைக்குள் விழச் செய்தாள். உட்கார்ந்து கொண்டே உறங்கியவன் மெல்ல உமாவின் மேல் தூங்கி விழுந்

தான். அவள்மீது சாய்ந்தே விட்டான்.
அப்போது மணி மூன்றரை....


"கல்யாணி!" என்று கூவியவாறே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள் உமா. தணிகாசலம் நிம்மதியாக உறங்கினான். அவள் எழுந்ததோ, தனக்குள் பேசிக்கொண்டதோ, அந்த அறைக்குள் நடமாடியதோ அவனுக்குத் தெரியாது.

"கல்யாணி! கல்யாணி! கல்யாணி!"

கல்யாணியைப் பற்றிக் கனவுகள் கண்டு கொண்டிருந்த வேளை அது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து விளக்கைப் பார்த்தாள் உமா. தூண்டாமணி விளக்காய், அணையாச் சுடராய், அது மின்னிக் கொண்டிருந்தது. அதையே வெறித்து நோக்கிய அவள் தனக்குள் சிரித்தாள்; சிணுங்கினாள்; அழுதாள்.

விளக்கை விட்டு எதிர்ச் சுவருக்கு உயர்ந்தன அவள் கண்கள். அங்கே குழந்தை கல்யாணி படத்தில் தன் தளர் நடையோடு நின்று கொண்டிருந்தாள். உமா எழுந்து ஓடினாள். அந்த மங்கலான வெளிச்சத்திலும் படத்திலிருந்த கல்யாணி உயிரும் சதையுமாய்த் தோன்றினாள்.

"வாடா, ராஜாத்தி! வா!" என்று பாதிக் கெஞ்சலாகவும் பாதிக் கொஞ்சலாகவும் குழந்தையை நோக்கித் தன் கரங்களை நீட்டினாள். படத்திலிருந்த குழந்தை அவளிடம் குறும்புச் சிரிப்பு சிரித்தது.



திரு அகிலன்

"வரமாட்டாயா? நீ என் குழந்தையில்லை? என் வயிற்றில் பிறக்கப் போகும் குழந்தை! வா!"

குழந்தையின் உடல் கண்ணாடிச் சட்டத்துக்கு வெளியே குவிந்தது. தாவிக் கொண்டு வந்தாள் குழந்தை.

"வாடா, கண்ணே! இனிமேல் என்னிடம் நீ 'டு' விடமாட்டாயே?"

என்ன அதிசயம்! படத்திலிருந்த குழந்தை பழுத்த மாங்கனிபோல் உமாவின் கரங்களில் நழுவி விழுந்தாள். உமாவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. மாங்கனியா, அவள் தாமரை மொட்டா? மொழு மொழு வென்றிருந்த அவளைத் தன் மார்புறத் தழுவி முத்தமிடப் போனாள் உமா. இதழ்களோடு இதழ்கள் குவியப் போகும் நேரம். — தன் மாம்பழக் கன்னங்களை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு, அவள் கரங்களிலிருந்து கீழே குதித்தாள் கல்யாணி. என்ன ஏமாற்றம்!

குழந்தையை விடுவாளா, உமா?

இல்லை, குழந்தைதான் அவள் கரங்களுக்கு அகப்படுவாளா!

ஒளிந்து விளையாடினாள் கல்யாணி. ஒடிப்பிடிக்கப் பார்த்தாள் உமா. இவர்களுக்குள் இப்படிக் கண்ணாமூச்சி விளையாட்டு நடந்து கொண்டிருக்கும் சமயத்தில் கும்பகர்ணனுடன் போட்டி போட்டுக்கொண்டு பேய்த் தூக்கம் தூங்கினான் தணிகாசலம்.

ஆயர்பாடியில் கண்ணன் ஆய்ச்சியரை ஆட்டி வைத்தானாமே? அப்படியெல்லாம் கல்யாணி உமாவை ஆட்டி வைத்தாள். மூலைக்கு மூலை போய் ஒளிந்து கொள்வதும், உமாவை வரச் சொல்லிக் கை காட்டுவதும் பக்கத்தில் வந்தவுடன் அவளுக்குப் பின்னால் போய் மறைந்து கொள்வதுமாக அவள் உமாவை அலைக்கழித்தாள்.

உமாவின் கண்கள் குழந்தையின் தளர்நடையில் மயங்கின; காதுகள் கல்யாணியின் சதங்கை ஒலியில் கிறங்கின; உமாவின் மூக்கில் தாமரையின் மணம் மணத்தது!

"கோபமா, கல்யாணி! இன்னுமா என் மேல் கோபம்?" என்றாள்.

'ஊஹூம்!' என்று தலையாட்டினாள் குழந்தை.

"என்னோடே 'டு' வா?"

"இல்லை; சேர்த்தி!"

"என்னோடே காயா?"

"இல்லை; பழம்?"-தன் விரல்களைச் சொடுக்கிப் பழம் என்றாள் கல்யாணி.

"நான் இப்போது உனக்கு அக்கா இல்லை தெரியுமோ? சித்தி! உன் சித்தி! உன் அருமைச் சித்தியடா கண்ணே! உன் அருமைச் சித்தி! எங்கே, என்னை அம்மா என்றுகூப்பிடு! எங்கே, கூப்பிடு!"

'அ...ம்...மா!...' வெளி வாசற்கதவோரத்தில் நின்று, தன் பல் தெரிய, நாக்கு தெரிய, வாய் மணக்க அவளைக் கூப்பிட்டாள் கல்யாணி.

பிறகு கதவோடு கதவாய் அவள் உருவம் மங்கி மறைந்தது.

'அம்மா!' என்ற சொல்லைக் கேட்டவுடன் கள் வெறி கொண்டு விட்டாள் உமா. குழந்தை வெளியில் ஓடிவிட்டதாக நினைத்துக் கொண்டு மெல்லக் கதவைத் திறந்தாள். அவள் மனம் பதறியது. "படிகளில் இறங்காதே, கல்யாணி! படிகளுக்குப் போகாதே!"

குழந்தை கீழ்ப்படியில் ஒரு காலும், மேல் படியில் ஒரு காலுமாக ஊன்றி, வலது கரத்தால் அவளை வரச் சொல்லி


நா.பார்த்தசாரதி
எழுதும்
புதிய சரித்திரத்
தொடர் கதை
பாண்டிமாதேவி
இதழ்
கல்கி


வினு
இதழில் ஆரம்பமாகிறது

அழைப்பது போல் தோன்றியது. கரத்தையும் அசைத்து, 'வா! வா!' என்று தலையையும் ஆட்டினாள் கல்யாணி. உமாவையும் பயம் பிடித்துக் கொண்டு ஆட்டியது. எந்த இடத்துக்குப் போகக் கூடாதோ அந்த இடத்துக்குப் போய் விட்டாளே, குழந்தை!

அறைக்குள் அவசரமாக எட்டிப் பார்த்தாள் உமா. விளக்கும் எரிந்து கொண்டிருந்தது; தணிகாசலமும் தூங்கி வழிந்தான். "இருங்கள்! அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருகிறேன்" என்று அவனிடம் சொல்லி விட்டு, குழந்தையின் மாய உருவைப் பின்பற்றினாள். தணிகாசலம் அப்போது இந்த உலகை மறந்து ஆழ்ந்த உறக்கத்தில் ஒன்றியிருந்தான்.

மாய மானைக் கண்டு சீதை மயங்கினாளாம். மாயக் குழந்தையைக் கண்டு உமா மயங்கினாள். இந்த உலகத்தை விட்டு மறைந்து போன கல்யாணி, ஏனோ உமாவின் கண்களிலிருந்து மறையவில்லை. முன் போலவே மாடிப் படிகள் ஒவ்வொன்றிலும் உட்கார்ந்து உட்கார்ந்து இறங்கினாள் குழந்தை. வேகமாய்ப் போய்க் குழந்தையைத் தூக்கப் போனாலோ, அவள் பதறிக் கொண்டு விழுந்து விடுவாள்! அதனால் உமாவும் அவள் மேல் வைத்த கண் வாங்காமல் நடந்தாள்.

இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு வெகு சுவாரஸ்யமாக நடைபெற்றது. இரண்டு பேருமே பிடிவாதக்காரக் குழந்தைகள். உமாவும் அவளை விட வில்லை; அவளும் உமாவைத் தொட வில்லை. உமாவின் கரங்கள் இரண்டும் நீண்ட வண்ணமாகவே இருந்தன. அதற்குப் பதிலாகத் தன்னுடைய ஒற்றைக் கரத்தை மட்டிலும் நீட்டி ஆட்டினாள் குழந்தை கல்யாணி.

சுளிப்பும், கோபமும், ஆத்திரமும் உமாவுடன் அன்போடு போட்டி போட்டன. உமாவின் உடம்பிலோ வலுவில்லை. மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கியது அவளுக்கு. நெஞ்சுக்குள்ளே மேளம் கொட்டுவது போல் பரபரப்பு ஏற்பட்டது. எப்படியாவது, ஒரே தாவாகத்தாவி, அவளை எட்டிப் பிடிப்பதென்று முடிவு கட்டிக் கொண்டாள்.

கல்யாணிக்குச் செருப்பு கழன்ற அதே படி; அதே இடம்; அதே நிலை...

உருண்டோடினாள் குழந்தை; மருண்டோடித் தாவினாள் உமா. ஆற்றுப் பாலத்தில் ரயில் ஓடுவது போல் 'கட கட, கடமுட' வென்ற பேரிரைச்சல் எழுந்தது. 'மடார்!' என்ற சத்தத்தோடும் வீடே அதிரும் பயங்கரக் கூக்குரலோடும் அது முடிந்தது.

திருமண வீட்டின் மாடிப் படியோரமாகத் திருமணப் பெண்ணின் பச்சை ரத்தம் வழிந்தோடிச் செம்மண் கோலம் தீட்டத் தொடங்கியது. நெளிநெளியான கோலம்; நீண்ட நெடுங் கோடுகள்; வட்டம் வட்டமான சிவப்புச் சித்திரங்கள்!.... உணர்விழந்த நிலையிலும் உமா தான் புகுந்த வீட்டுக்கு அழகு செய்து கொண்டிருந்தாள்.

அத்தியாயம் 16

அமர ஒளி பரவியதே!

“நல்ல தூக்கம் தூங்கினீர்கள்!” என்று தணிகாசலத்தை உலுக்கி எழுப்பி விட்டு, வாய் விளங்காமல், கை விளங்காமல், அலறிப் புடைத்துக் கொண்டு கீழே இறங்கி ஓடினாள் கௌரி. அவளுக்கு முன்னரே மாடிப் படிகள் அதிர்ந்தன. வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் ஒன்றாகக் கதறினார்கள்.

தாஜ்மஹாலுக்கு உள்ளே அவன் நின்று கொண்டிருப்பது போலவும், அவன் தலையில் அது பொடிப் பொடியாய் நொறுங்கி விழுவது போலவும் அப்போது கனவு கண்டு கொண்டிருந்தான் தணிகாசலம். கௌரியே அவனை எழுப்பியிருக்கா விட்டாலும் அவனாக உளறி யடித்துக்கொண்டு விழித்திருப்பான். படுக்கையில் எழுந்து உட்கார்ந்து சுற்று முற்றும் மிரண்டு நோக்கினான். பக்கத்தில் உமாவைக் காணவில்லை. தாஜ்மஹால் கனவு பயங்கரமாக அவன் கண் முன்னே வந்து நின்றது.


பாவை விளக்கைக் கண்டவுடன் அவனுக்குப் பகீரென்று பற்றிக் கொண்டு வந்தது. திரி மாத்திரம் எரிந்து தன் ஊதா நிறத்தை உமிழ்கிறதே! தாவிச் சென்று அதைத் தூண்டி விட்டான். எண்ணெய் வார்த்தான். பக்கத்தில் கிடந்த கவிதைப் பிரதியின் மேலட்டை அவன் கண்களை உறுத்தியது. அந்த ஒரு பக்கத்தை மாத்திரம் கிழித்துச் சுக்கு நூறாக்கிக் காற்றில் பறக்க விட்டான். சட்டைப் பையில் பேனா இருந்தது. 'அமர ஒளி' என்ற தலைப்பை எழுதி விட்டு ஒரு கணம் விளக்கையே பார்த்தான். முகமெங்கும் வேர்த்துக் கொட்டியது.

"இன்னும் நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று அடிக் குரலால் கத்திக் கொண்டே, அவன் கரத்தைப் பற்றி வெளியில் இழுத்தாள் கௌரி. படிகளில் கூடியிருந்த கூட்டம் அவர்களுக்கு வழி விட்டு விலகியது. அங்கே, முன் பொருநாள், குழந்தை கல்யாணி எந்த நிலையில் கிடந்தாளோ, அதே நிலையில் கிடந்தாள் உமா.

அந்தக் கோலத்தைத் தணிகாசலம் தன் கண்களால் கண்டிருக்கவே வேண்டியதில்லை. முன்பே ஆக்ராவில் தாஜ்மஹாலை முதன் முதலாக அவன் பார்த்தபோது, அவனை வெலவெலக்கச் செய்த கொடூரமான காட்சி அது. ஆம், தாஜ்மஹாலில் தணிகாசலம் இந்த உமாவைத் தான், இதே கோலத்தில் கண்டு துணுக்குற்றான்.—அவன் மற்றவர்களிடமிருந்து மறைக்க விரும்பிய! செய்தியும், அவனாகவே மறக்க விரும்பிய காட்சியும் இதுதான்.

மறக்க முடிந்ததா? அல்லது அதை மறுக்கத்தான் முடிந்ததா?

எந்த உமாவைக் கதைத் தலைவியாக வைத்து, அந்தக் கதைக்கு ஒரு இன்ப முடிவு காண வேண்டுமென்ற நோக்கத்துடன் தாஜ்மஹாலுக்குள் நுழைந்தானோ, அந்த நோக்கம் ஆரம்பத்திலேயே ஆயிரம் சுக்கலாய் நொறுங்கியது. முதற் பார்வையில் உமாவின் உருவந்தான் தாஜ்மஹாலில் வானளாவ எழும்பி நின்றது. ஆனால் அது அவனைக் கண்டு புன்முறுவல் பூக்கவில்லை. அந்த உமாவின் தலையில் தாஜ்மஹாலின் இடது பக்கத்துக் கோபுரம் அடியற்ற மரம்போல் நிலைபெயர்ந்து விழுந்து உடைந்தது. அவள் உச்சியிலிருந்து யமுனை நதி செந்நீராய்ப் பொங்கிப் பெருகியது.



அவன் அன்று கண்ட முதற் காட்சி அது; இன்று அவன் காணும் கடைசிக் காட்சியும் அதுவே!

மின் விளக்குகள் கீழே தரையில் தெளித்த செங்குருதிக் கோலத்தை மிகைப்படுத்திக் காட்டின. கல்யாணி அம்மாளின் மடியில் படுத்திருந்த உமாவின் முகத்தைத் தனது நடுங்கும் கரத்தால் திருப்பிப் பார்த்தான் தணிகாசலம். பளீர், பளீரென்று பாவை விளக்கின் சிறு சுடர்கள் அவள் முகமெங்கும் மின் வெட்டின. கண்கள், நெற்றி, உதடுகள், புருவங்கள் முகம் எங்குமே சிவப்பொளி.

தரையில் மண்டியிட்டு அவளைத் தன் இரு கரங்களாலும் வாரித் தூக்கினான். சுற்றியிருந்தவர்கள் அனைவரும் கத்தினார்கள்; கதறினார்கள்: அழுது புலம்பினார்கள். தணிகாசலத்தின் விழிகளில் மட்டும் ஒரு சொட்டுக் கண்ணீர் கசியவில்லை. கண்ணீரென்ற ஒன்று அவனிடம் இருந்தாலல்லவோ, அது கசிந்து கீழே சிதறும்? அவன் உள்ளத்துக்குள் அது உறைந்து விட்டது. நெஞ்சக் குளத்தில் இப்போது தண்ணீர் இல்லை. அது வெப்பத்தால் வறண்டு விட்டது.

அவன் சில நாட்களுக்கு முன்பு பித்த மயக்கத்தில் அற்புதக் கனவுகள் கண்டானே, அவை பொய்க் கனவுகளல்ல. இன்பக் கனவுகள் கண்டானே, அவை நனவாகவே மலர்ந்து விட்டன!—தன் ஆருயிர்த் தோழியை, அற்புதக் காதலியை, கற்பனைக் களஞ்சியத்தை, கவி சிந்தும் பூங்கொடியை அவன் உல்லாசமாகச் சுமந்து கொண்டே ஒவ்


உங்கள் விருப்பத்திற்கேற்ற அழகு
உங்கள் சருமத்தை இளமையுடனும், உள்ளத் துடிப்புடனும், புதுமையோடு பொலிவுடனும் வையுங்கள். இயற்கை எழிலின் மோஹனத் தோற்றத்துடன் எப்பொழுதும் விளங்குங்கள்.
"'ஹாஸலீன்' ஸ்னோ" உங்கள் சருமத்தை குளுமையாயும், வெண்மையாயும் வைப்பதோடு அதற்கு தனி அழகும் ஊட்டுகிறது. மற்றும் அது திருட இயலாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
"'ஹாஸலீன்' ஸ்னோ"
HAZELINE SNOW
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

வொரு படியாக முன்னேறுகிறான். அவன் புது மணப் பெண்; அந்தப் படிகள் தாஜ்மஹால் கோபுரத்தின் படிகள்; லட்சிய வெற்றியின் ஏணியில் அவன் படிப்படியாக முன்னேறுகிறான். —இலக்கியச் சிகரத்தை எட்டிப் பிடித்து வந்த சின்னஞ் சிறு பூங்குயிலைச் சுமந்து கொண்டு, தானும் அதை எட்டிப் பிடிப்பதற்காக, அவன் மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறான்.

வழியெல்லாம் மலர் தூவ வேண்டாமா? மணம் சிதற வேண்டாமா? சாமரம் வீச வேண்டாமா?—சாவையா அவன் சுமந்து கொண்டு செல்கிறான்? இல்லை: வாழ்வை! வாழ்வைப் பிழிந்து கொடுத்த இலக்கியப் பெருஞ் செல்வத்தை! சிரஞ்சீவித் தன்மை என்ற சீரழியாச் சிறப்பத்தை!

இதுவரையில் அவனுக்கு வழி காட்டிய உமா, இப்போது மாத்திரம் இளைத்து விட்டாளா என்ன?

அவளே அவனுக்கு வழி நெடுகிலும் மலர் தூவினாள்: மணம் சிதறினாள்; சாமரம் வீசினாள். தலையிலிருந்து சொட்டுச் சொட்டாகத் தன் உயிர்த் துளிகளை உதிர்த்து, அவனுக்கு வழி நெடுகிலும் ரோஜா இதழ்களைப் பரப்பினாள். ஒவ்வொரு சொட்டு ரத்தமும் ஒரு ரோஜா இதழ்! இவ்வளவு சிவப்பான ரோஜா இதழை உலகத்தின் எந்தத் தோட்டத்திலும் காண முடியுமா? எத்தனையோ மன்னர்கள், எத்தனை எத்தனையோ பூங்காக்களை ஏற்படுத்தினார்களே, இப்படி ஒரு ரோஜாப் பதிகத்தை அவர்களால் வளர்க்க முடிந்ததா? கோவில்களுக்கான நந்தவனங்களை வேண்டுமானாலும் சுற்றிப் பாருங்கள்.—ஒரே ஒரு இதழ் யாராவது கொண்டு வருவீர்களா?

தணிகாசலம் பாக்கியசாலி; கொடுத்து வைத்தவன்: உலகத்தின் கண்கள் பொறாமையால் கொப்பளிக்கும் அளவுக்கு அவன் அதிர்ஷ்டம் செய்தவன். அவனுடைய மகள் அவனுக்குத் தாமரையின் மணத்தைத் தந்தாள்; மனைவியோ ரோஜாவின் வாசனையை உதிர்க்கிறாள்.

ஆஹா! என்ன இன்பம்! எத்தனை இன்பம்!—பேரின்பம் என்பதுவும் இது தானோ? விண்ணின்பம் மண்ணிலென்றால் அது இதுதானோ?

ஒவ்வொரு படியிலும் யுகப் பொழுது நின்று கொண்டே இருக்கலாம் போலிருந்தது தணிகாசலத்துக்கு. உமாவின் கருங்கூந்தல் கட்டுத் தளர்ந்து அவனுக்குச் சாமரம் வீசியது. வெண் சாமரம் என்றால் என்ன? கருஞ்சாமரம் என்றால் என்ன? காதலி தன் நீண்ட கருங் கூந்தலால் களைப்பாற வீசும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்?

மனிதர்கள் அவனைச் சூழ்ந்து நின்று கொண்டு, அவளைப் பிய்த்துப் பிடுங்குவது அவனுக்குப் பிடிக்கவில்லை. 'உமாவுக்குச் சாவே கிடையாது! அவள் சாகவே மாட்டாள்! அவளை ஏன் தொல்லைப்படுத்துகிறீர்கள்?'

தணிகாசலம் தன்னுடைய அறைக்குள் நுழைந்தான். அங்கே எரிந்து கொண்டிருந்த அந்தப் பாவை விளக்கைக் கண்டவுடன் அவனுக்குச் சிரிப்பு வந்தது. கையிலிருந்த உமாவைக் கீழே விடுவதற்கும் அவனுக்கு மனமில்லை. சிரித்துக் கொண்டே நின்றான்.



கௌரியும் தேவகியும் அவனிடமிருந்து உமாவைப் பிடுங்கித் தரையில் கிடத்தினார்கள். பேராசிரியரும் சுப்பையாவும் டாக்டரைத் தேடிக் கொண்டு ஓடினார்கள். சந்திரலேகாவும் கல்யாணி அம்மாளும் முதற் சிகிச்சை என்ற பெயரில் தங்களுக்குத் தெரிந்த வைத்தியமெல்லாம் செய்தார்கள். அவர்களுக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை. உமாவைப் பார்த்தார்கள். உமாவுக்கு அருகில் நிற்கும் தணிகாசலத்தைப் பார்த்தார்கள். அந்த அறையில் சுடர் விட்டு எரியும் பாவை விளக்கைப் பார்த்தார்கள். அடுத்த கணம் உமா, தணிகா

சலம், பாவை விளக்கு, அறை, உலகம் எல்லாம் ஆடத் தொடங்கின. மெது வாகச் சுழலத் தொடங்கின! சந்திர லேகா இன்னது செய்வதென்று தெரியா மல் திகைத்தாள். கல்யாணி அம்மாள் நிதானம் தவறாமல் உமாவுக்கு வேண் டிய சிகிச்சைகள் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். கௌரிக்கு வாய் விட்டுக் கதற வேண்டும் போலிருந்தது. அவளுடைய ஒவ்வொரு அங்கமும் ஆத் திரத்தால், எதிர்பாராமல் ஏற்பட்ட அதிர்ச்சியில், துக்கத்தால் எப்படியோ துடிதுடித்துக் கொண்டிருந்தது. அவள் விழிகளில் கண்ணீர் அருவியாகக் கொட் டிக் கொண்டிருந்தது! தணிகாசலம் அதைப் பார்க்கக் கூடாதே என்பதற் காகத் தன் புடவைத்தலைப்பால் கண்ணீ ரைத் துடைத்து விட்டுக்கொண்டாள். "நான் அவளுக்கு வேண்டிய முதற் சிகிச்சைகளைச் செய்கிறேன். யாராவது டாக்டரை அழைத்து வாருங்கள்"



என்று துயரம் நிறைந்த குரலில் கூறினாள் சந்திரலேகா." முதற் சிகிச்சை யாவது, கடைசிச் சிகிச்சையாவது!" என்று குமுறினான் தணிகாசலம்.

தணிகாசலத்தின் குமுறலைக் கேட்ட வுடன் உமாவின் கண்கள் சற்றே திறந் தன. மெல்ல முனகினாள்; எதையோ பேச முயன்றாள்; பச்சைத் தண்ணீர் முகத்தில் பட்டவுடன் அவள் பேச்சு தெளிவாகக் கேட்டது.

"குழந்தை என்னைக் கூப்பிடறு!... நம்ப குழந்தை கூப்பிடறு!"

"முட்டாள்! மூளை பிசகி விட்டது" என்று கத்தினான் தணிகாசலம்.

"கோபம் வருகிற நேரத்தைப் பாருங் கள்!" என்று கௌரி குறுக்கே விழுந் தாள். முகத்தோடு முகம் வைத்துத் தன்னை அழ விட்டால் போதும் போல் இருந்தது கௌரிக்கு.

உமா கௌரியைக் கண்கொட்டாமல் பார்த்தாள். "கௌரி! என்னை மன் னித்து விடு, கௌரி!" உமாவின் குரல் தழுதழுத்தது. "என் ஆசையெல்லாம் நிறைவேறி விட்டது. நீதானே அவரை எனக்கு மனப்பூர்வமாய்க் கொடுத்தாய்? நீதானே கொடுத்தாய்? இந்தா!"— தணிகாசலத்தின் கரத்தையும் கௌரி யின் கரத்தையும் ஒன்று சேர்த்தாள் உமா. அவள் முகத்தில் பெருமிதம் கனிந்தது. பிறகு பையன் பரமசிவத்தை அருகில் அழைத்து, அவன் தலைமயிரைத் தன் மலர்க் கரங்களால் கோதிக் கொண்டே,"ராஜா! நானும் கல்யாணி யுமே உனக்குத் தங்கையாய் வந்து பிறக்கப் போகிறோமடா!" என்றாள்.

டாக்டரைத் தேடிப் போனவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. மூன்றும் சாமத்தில் வந்து கதவைத் தட்டுகிறவர் களுக்குக் கதவைத் திறந்துவிட வேண்டு மென்பது என்ன கட்டாயமா?

தேவகியும் ஏதோ தனக்குத் தெரிந்த சிகிச்சைகளைச் செய்தாள். உமாவுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. "வேண்டாம், அக்கா!...கல்யாணி என்னை அழைத்தா லும் அழைக்கா விட்டாலும் நானே அவளிடம் போயிருப்பேன்! காலையில் என்னை வந்து பார்த்தீர்களானால், சந்தோஷம் தாங்காமல் படுக்கையில் செத்து விழுந்திருப்பேன். எல்லையில் லாத இன்பம் எனக்கு! இருதயத்தின் ஒவ்வொரு அணுவிலும் ஆனந்தம் பொங்குகிறது.— இதற்குப் பிறகும் நான் ஏன் வாழ்வதற்குப் பேராசைப் பட வேண்டும்!"

தேவகி பட்டணத்துக்கே வரப்போவ தால், அவளிடம் சொல்லித் தணிகா சலத்துக்கு உதவிகள் செய்யும்படி கேட் டுக் கொண்டாள். தன் சித்தி சந்திர லேகாவிடம் தன் 'குழந்தை அப்பா' வைக் கவனித்துக் கொள்ளச் சொன் னாள். கல்யாணி அம்மாளின் பாதங் களைப் பற்றித் தன்னுடைய கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

பாவைவிளக்கு படபடவென அசைந்தது. வெண்பட்டில் சந்தனத்தைக் கலந்து, அந்த அறையெங்கும் அது தூவிக் கொண்டிருந்தது.

டாக்டரைத் தேடிப் போனவர்கள் இன்னும் வரவில்லை. அவர்களைத் தேடிக் கொண்டு கல்யாணி அம்மாள் பைய னுடன் வெளியே சென்றாள். அவளைப் பின்பற்றி ஒவ்வொருவராக வாசலில் போய்க் கூடினார்கள். வடக்கிலும், தெற் கிலும் பார்த்தார்கள். கிழக்கிலும்,

மேற்கிலும் பார்த்தார்கள். பார்த்த கண்கள் பூத்துப் போய் விட்டன.

டாக்டரும் வரவில்லை ;. ஆண்களும் திரும்பி வரக் காணோம் ; பெண்களும் அந்த இடத்தை விட்டு அசையவில்லை.

தணிகாசலம் தன்னுடைய மடியில் உமாவின் தலையை எடுத்து வைத்துக் கொண்டான். விளக்குப் பாவையைத் தவிர வேறு யாரும் அந்த அறையில் இல்லை. அந்தப் பாவையின் மேல் அவனுக்கு ஒரு கணம் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. என்ன அழகாக, என்ன அமைதியாக, என்ன நிதானமாக அவள் தன் ஒளி விழியால் சிரிக்கிறாள்! ஒன்றுமே தெரியாதா, அவளுக்கு ?

உமா தன் நுரை ஈரலில் தேங்கி நின்ற சுவாசத்தை யெல்லாம் ஒரே மூச்சில் வெளியில் கொண்டு வந்து தள்ளினாள். மார்பகம் சிற்றத்துடன் ஒரு முறை பொங்கி வடிந்தது. சட்டென்று அவன் கழுத்தைத் தன்னுடைய கரங்களால் தாவி வளைத்துக் கொண்டாள்.

உமாவின் தலை உயர்ந்து வளைய முயற்சி செய்தது ; அவளால் முடியவில்லை. தணிகாசலம் அவள் தோள்களைத் தாங்கிக் கொண்டு முகத்துக்கு எதிரே வெறியுடன் குனிந்தான். உமாவின் கடைசிப் பேச்சு அவன் செவிகளில் ரகசியமாக ஒலித்தது.

"உன் உயிர்...என் உயிர்...இந்த வெறுங் காற்றுடன் கலக்கக் கூடாது" என்று தடுமாறினாள் உமா. "அது உங்கள் உயிர்க் காற்றுடன் ஒன்ற வேண்டும். என்ன ? புரிகிறதா ?"

ரோஜா இதழ்கள் இரண்டு தங்கள் மணத்தையும் நிறத்தையும் அவனுடைய இருதயத்தில் குடிபுகச் செய்தன. உயிரின் கடைசித் துளி அவன் உடலில் ஒட்டிக் கொண்டிருந்த வரையில் உமா அவன் கழுத்தை விடவில்லை. கரங்கள் சிறிது சிறிதாக அவன் கழுத்தை விட்டு நழுவிய போது, உமாவும் சிறிது சிறிதாக இந்த உலகத்தை விட்டு நழுவிக் கொண்டிருந்தாள்.

ஓடிப்போய்ப் பாவைவிளக்கை எடுத்து வந்து உமாவின் தலை மாட்டில் வைத்தான் தணிகாசலம். அதன் ஒளி நாக்கு முன்போலவே காற்றில் சுழன்று வந்து உமாவின் நெற்றியில் சுடர் பதித்துத் திரும்பியது. சன்னலுக்குப் பின்னால் கீழ்வானம் வெளுக்கத் தொடங்கியது. உமா தன்னுடைய வலது கரத்து ஆள் காட்டி விரலால் அந்தச் செங்கதிர் ஒளி பரப்பும் செவ் வானத்தை அவனுக்குச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தாள்.

கூட்டமாக உள்ளே நுழைந்தவர்களைத் தணிகாசலம் தன் சைகையால் அமைதியுறச் செய்தான். "கௌரி ! இந்த விளக்கைத் தூண்டி விடு !"

அவன் கரங்கள் இரண்டும் நடுங்கிய வண்ணமே உமாவுக்கும், அவனுடைய பரிசான ஒளிச் செல்வத்துக்கும் வணக்கம் செலுத்தின. கூப்பிய கரங்களுக்கு மத்தியில் உமா கொடுத்த அன்புப் பரிசான பேனாவும் இருந்தது.

தாஜ்மஹாலில் அவன் படித்த வரிகளைச் சொல்லி அவன் அலறினான் : "எங்கும் நிறைந்த ஆண்டவனே ! எல்லாம் ஆன ஒருவனே ! எங்களால் எந்தச்



சுமையைத் தாங்க முடியாதோ, அந்தச் சுமையை எங்களுக்குத் தராதே ! நாங்கள் வலுவிழந்த மனிதர்கள் !"

* * *

துன்பம், துன்பம், துன்பம் !
துன்பத்திற்கோர் எல்லை காணில்,
இன்பம் ! இன்பம் ! இன்பம் !

இருளே, இருளே, இருளே !
இருளே போயின், இருளே போயின்,
அருளே யாம்நல் ஒளியே !

கவிஞரின் குரலை இப்படி மாற்றி இசைப்பதற்காகத் தயவு செய்து என்னை நீங்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். துன்பமில்லாமல் இன்பமேது ? துயரமில்லாமல் களிப்பு ஏது ? இருள் இல்லாமல் ஒளிதான் ஏது ? உருவமில்லாப் பூங்குயிலான உமா

தணிகாசலத்தின் உள்ளமான சோலையிலிருந்து கொண்டு எந்த நேரமும் கவிதை இசைத்துக் கொண்டே இருக்கிறான். அவன் அதைக் கேட்டுக் கிறுகிறுத்த வண்ணமே தன் துன்பமெல்லாம் மறந்து எழுதிக் கொண்டே இருக்கிறான். அவன் எழுதிக் கொண்டிருக்கும் வரையில் அவன் எழுத்து எவ்வளவு காலம் இந்த உலகில் நிலைத்து நிற்குமோ, அது வரையில் உமா கட்டாயம் வாழ்ந்து கொண்டுதான் இருப்பாள்.

உமாவுக்காக யாரும் ஒரு துளிக் கண்ணீர் கூடச் சிந்த வேண்டாம். அவள் தன்னுடைய வாக்கை நிறைவேற்றி விட்டாள். கௌரியின் இடுப்பிலிருந்து கொண்டு தணிகாசலத்தின் கரங்களுக்குத் தாவும் பெண் குழந்தையின் பெயர் என்ன தெரியுமா? —உமா!

நன்றி

இத்தனை மாதங்களாக லட்சக் கணக்கான வாசகர்களின் ரசிக உணர்வோடு தொடர்பு கொள்ளும் பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தது. முதல் முதலாகக் 'கல்கி'யில் நான் எழுதியுள்ள தொடர்நாவல் இந்தப் 'பாவை விளக்கு.' என்னுடைய கதா பாத்திரங்களிடத்திலிருந்தும், அந்தக் கதா பாத்திரங்களிடம் தங்கள் அன்பைச் சொரிந்து வந்த என் வாசகர்களிடத்திலிருந்தும் இப்போதைக்கு விடைபெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தச் சமயத்தில் எனக்கும் உங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுத்த 'கல்கி' பத்திரிகையும், அதன் ஆசிரியரும் அதிபருமான திரு சதாசிவம் அவர்களும் என் நினைவுக்கு வருதல் இயற்கை.

வாசகர்களின் கடிதங்களிலிருந்து எவ்வளவு தூரம் அவர்கள் கதையுடன் ஒன்றிப் போயிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. கதா பாத்திரங்களைத் தங்கள் உற்றார் உறவினர்களாகக் கருதி, அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு கொண்ட எத்தனையோ வாசகர்கள், தங்கள் ரசிகத் தன்மையின் பிரதிபலிப்புக்களை எனக்கு எழுதி அனுப்பியிருந்தார்கள். தமிழ் நாட்டு இலக்கிய ரசிகர்களிடம் ஏற்பட்டுள்ள இத்தகைய விழிப்பு வளரும் தமிழில் அவர்களுக்குள்ள உற்சாகத்தைச் சொல்லுகிறது.

இந்த இதழுடன் 'பாவை விளக்கு' முடிகிறது. 'இதை இவ்வளவு சீக்கிரம் முடித்து விட்டீர்களே?' என்று அன்புரிமையுடன் கேட்க விரும்பும் வாசகர்கள் பலரை நான் அறிவேன். 'உங்கள் உயிர் உள்ளவரையில் நீங்கள் இந்தக் கதையை எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்!' என்றும் சிலர் கடிதங்களில் கட்டளை இட்டிருக்கிறார்கள். உமாவின் உயிர் போனபின்பும் 'பாவை விளக்கை'த் தொடரச் சொல்கிறீர்களா? தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பத்து மாத காலமாக வாசகர்கள் பலரது பாராட்டுக்கு எப்படி நான் ஆளாகியிருக்கிறேனோ, அதேபோல் பழிப்புக்கும் ஆளாகியிருக்கிறேன். வழக்கம்போல் அவர்களுடைய கடிதங்களுக்குத் தனித்தனியே பதில் எழுதி என் நன்றியைச் சொல்லவில்லை. அவர்கள் கதையில் எழுப்பிய ஐயங்களுக்கு விடை தரவில்லை. இலக்கிய விழாக்களிலும் கூட்டங்களிலும், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவில்லை. இவ்வளவுக்கும் காரணம் நான் என்னுடைய முழு மூச்சையும் இந்தக் கதைக்குச் செலவிட்டிருப்பதுதான். என்னிடம் கோபங்கொண்டுள்ள அன்பர்கள் என் பொறுப்பை உணர்ந்து என்னை மன்னித்தருள்வார்களாக. வாசகர்கள் அனைவருக்கும் என் உளம் நிறைந்த நன்றியை இப்போது தெரிவித்துக் கொள்ளுகிறேன். கடிதங்கள் எழுதியவர்கள், எழுதாதவர்கள் அனைவருக்கும் என் நன்றி.


'கல்கி'யின் ஆசிரியரும் அதிபருமான திரு சதாசிவம் அவர்களுடைய அன்பு நான் கதை எழுதி வந்த காலத்தில் எனக்குப் பெருந்துணை செய்தது. அவ்வப்போது கடிதங்களில் என்னைப் பாராட்டியும், எனக்கு உற்சாகமளித்தும், ஊக்குவித்தும் என்னை மகிழ்வித்தார்கள். அவர்களுக்கு என் நன்றி உரியது.

வாசக நேயர்கள் அனைவருக்கும் மீண்டும் என் அன்பும் நன்றியும். கல்கி நேயர்களை விரைவில் மற்றொரு தொடர்கதையின் மூலமாகச் சந்திக்கிறேன்.

அகிலன்




முற்றிலும் புது மாதிரி
டெக் டூத் பிரஷ்
இந்த 3 விசேஷ அம்சங்களைக் கவனியுங்கள்
1 மிருதுவான 'நீட்டன்' முடிகள் ஈறுகளை புண்ணாக்காமல் பற்களை சுத்தம் செய்யும்!
2 தேர்ந்தெடுக்க 2 வித தலைப்பாகம் 'ஓவல்' மற்றும் ஷார்ட் 'ஓவல்' வடிவங்களில் கிடைக்கும்.
3 கைக்கடக்கமான பிடி விஞ்ஞான முறைப்படி பிரத்தியேக வடிவம் கொண்டது.
Tek
Johnson-Johnson
OF INDIA PRIVATE LTD
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்


உங்கள் ஆடையைக் கொண்டே நீங்கள் மதிப்பிடப்படுகிறீர்கள்
ஆண்டுகள் பலவாகினும்
அழகு குன்றாத
ஆடைகளை அணியுங்கள்!
ஹனவா
லஸ்டலின்
கெ ஏஸி. எஸ் 5208 ஏஸி 3000 - குறிப்பிட்டுக் கேளுங்கள்.
'ப்ளெயின்' ரகம் எல் 4914 என்றும், 'செக' ரகம் எல 976 என்றும் கேளுங்கள். 'டாபி' ரகமும் கிடைக்கிறது.
ட்ரில்
இந்த நம்பர்களைச் 'சொல்லுங்கள்: பி 17 (ராணுவத்தினர் அணிவது இது) பி 37, பி 11, பி 94, பி 39, பி 83.
எடுப்பான தோற்றம், உகப்பான உடைகளுக்கு பின்னி நூலிலேயே ஏற்றது. இந்த பிரசித்த டிரேட் மார்க்குகள் உள்ள துணிகளையே வாங்குங்கள்.
பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்
மானேஜிங் ஏஜெண்டுகள்,
பின்னி & கோ (மதராஸ்) லிமிடெட், சென்னை
BY 301a

செல்வமும் சுதந்திரமும்



க. சந்தானம்

11. இடைக்கால வேதனைகள்

எந்தச் சகாப்தமாயினும் ஒரு சமூகத்தில் பூர்ண ஆதிக்கம் பெற்று விட்டால், மக்கள் ஓர் நிலையான வாழ்வு பெற்று அமைதி அடைகின்றனர். அதில் பல அநியாயங்கள் இருந்த போதிலும், அவை வழக்கமாகி விடுமாதலால் சகிப்பதற்கு எளிதாகின்றன. ஒரு சகாப்தம் முடிந்து மறு சகாப்தம் தோன்றும் இடைக்காலத்தில் ஜனங்கள் பல புதிய வேதனைக்கு ஆளாகின்றனர். எதிலும் நிச்சயமில்லை. நாளைக்கு என்ன நேரிடுமோ என்ற அச்சம். பலவித குழப்பங்கள்.

விவசாய சகாப்தத்திலிருந்து இயந்திர சகாப்தத்தில் நன்கு புகுவதற்கு ஐரோப்பிய, அமெரிக்கா நாடுகளுக்குச் சுமார் 150 வருஷங்களாயின. இன்றும் விவசாய சகாப்தம் முடிவடைந்தபாடில்லை. பாரதத்திலோ இயந்திர சகாப்தம் ஐம்பது வருஷங்களுக்கு முன்னரே தொடங்கியது. இடைக்கால வேதனைகள் தீவிரமாகி வருகின்றன. அடுத்த நூறு வருஷங்களுக்கு அவை பெருகிப் பின்னரே ஒரு நிலைபெற்ற வாழ்க்கை தோன்றக் கூடும்.

இடைக்கால வேதனையில் முக்கியமானது ஜனங்கள் பெருமிதமாகக் கிராமத்திலிருந்து நகரங்களுக்குக் குடியேறுவது. நாட்டின் ஜனத்தொகை ஆண்டுதோறும் நூற்றுக்கு 1½ விதம் அதிகரிக்கிறது. நகரங்களின் பெருக்கோ 100க்கு 4 விதம் அதிகரிக்கலாம். இப்படி நகரங்களுக்குக் குடியேறுவோருக்குப் போதிய வீடுகளோ, சுகாதார வசதிகளோ செய்வதற்கு நகரசபைகளுக்குச் சக்தியில்லை. ஆதலால் இருக்கும் வீடுகளில் அண்டிக் குடியிருந்து கஷ்டப்படுகின்றனர்.

இந்தக் குடியேற்றத்தின் காரணமாக, கிராமத்து மக்கள் தாமும் நகரத்துக்குக் குடியேற முடியாமலிருப்பது ஒரு பெரும் துரதிர்ஷ்டமாகக் கருதுகின்றனர். மேடைகளில் மந்திரிகளும், மற்றவர்களும் படித்தவர்கள், கிராமங்களில் வசித்துப் பொது சேவை செய்வதின் அவசியத்தையும் பெருமையையும் பற்றிப் பிரசங்கம் செய்வது வழக்கம். ஆனால், அதை எவரும் பின்பற்றுவார்களென்று பிரசங்கிகள் கூட நம்புவதில்லை.

இரண்டாவதாக விவசாயம், கைத்தொழில் வேலைகளின் ஊதியத்துக்கும் மில், சர்க்கார் சேவகங்களின் ஊதியத்துக்கும் வித்தியாசங்கள் பெருகி வருகின்றன. ஆதலால் சர்க்கார் சேவகத்துக்கும், ஆலைகளில் கூலி வேலைக்கும் கடுமையான போட்டி ஏற்படுகிறது. மற்ற நாடுகளின் முன்னேற்றத்தின் பலனாக, இங்கும் தொழில் சங்கங்கள் ஏற்பட்டு, இயந்திர சகாப்தத்தின் ஆரம்பத்தில் மேற்கு நாடுகளில் தொழிலாளர்பால் செய்யப்பட்ட அக்கிரமங்கள் தடுக்கப்பட்டுவிட்டன. ஆண், பெண் குழந்தைகளைக் கசக்கி, தினம் 12—14 மணி நேரம் வேலை வாங்கி, மிகவும் குறைந்த கூலி கொடுத்து முதலைப் பெருக்கி ஐரோப்பிய முதலாளிகள் இயந்திர சகாப்தத்தின் போக்கைத் துரிதப்படுத்தினர். இங்கு அதை மந்தமாகச் சரி செய்வதனால் இயந்திர வேலைகளில் ஈடுபட்டிருப்போருக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் சௌகரியமே. ஆனால் லட்சக்கணக்கில் நகரங்களுக்கு வேலை தேடி வரும் ஆசாமிகளுக்குப் பெரும் நஷ்டம். டில்லியில் மத்திய காரியாலயத்தில் வேலையின்றி அவ்வப்போது ஒன்றிரண்டு கடிதம் எடுத்துக் கொடுக்கும் சேவகனுக்கு மாதம் ரூபாய் எண்பதுக்குக் குறையாமல் கிடைக்கிறது. கிராமங்களில் தபால்காரனுக்கும் அவ்விதமே ஊதியம் கிடைக்கிறது. கிராமத்திலிருந்து கஷ்டப்பட்டு விவசாயம் செய்யும் அவர்களுடைய பந்துக்களுக்கு மாதம் முப்பது ரூபாய் கிடைப்பது துர்லபம்;

வருமானத்தில் அதிக வித்தியாசம் இருந்தாலும் விவசாய சகாப்தத்தில் சுகத்தில் அதிக ஏற்றத் தாழ்வில்லை. பணக்காரன் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்தான். ஏழை காலால் நடந்து போனான். இருவரும் ஒரே வேகத்தில், ஒரே காலத்தில் ஓர் ஊரிலிருந்து அடுத்த ஊருக்குச் சென்றனர். அரசர்கள் கூடத் தம் யானை, பல்லக்கு முதலியவற்றில் சென்றபொழுது அவர்களுக்கு ஆடம்பரம் இருந்ததே ஒழிய, சுகமில்லை. யானையில் போவதைவிடக் காலால் நடப்பது எவ்வளவோ சுகம். பல்லக்கில் போவதை இன்று நினைத்தால் சிரிப்பு வருகிறது.

ஆனால் இக்காலத்தில் விமானத்திலும், சொந்த மோட்டாரிலும், ரயிலில் சீதோஷ்ண சுகமுள்ள கூண்டுகளிலும் தனவந்தர்கள் பிரயாணம் செய்கின்றனர். ரயிலில் மூன்றாவது வகுப்பிலும், பஸ்களிலும் நகரத்தார்களும் ஓரளவு கிராமவாசிகளும் போகின்றனர். அவைகளில்கூட வேண்டும்பொழுது செல்லுவதற்கு முடியாத மக்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றனர். ரயில்வே ஸ்டேஷன்களிலிருந்தும், பஸ் செல்லும் ரோடுகளிலிருந்தும் விலகியிருக்கக் கூடிய கிராமங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன.

வீடு, உணவு, உடை, கல்வி, அலங்காரச் சாமான்கள், வினோத வசதிகள் எல்லாவற்றிலும் இவ்விதமே வித்தியாசங்கள் வளர்ந்து, அவைகளை அனுபவிக்கும் கூட்டங்களின் சௌகரியங்களும், அதைவிட அவைகளை

அனுபவிக்க முடியாதவர்களின் மன வருத்தமும், பொறாமையும் ஓயாமல் பெருகி, வளர்ந்து வருகின்றன.

வர்ணாசிரம தர்மங்களும், சாதிக் கட்டுப்பாடுகளும் கிராமங்களில் ஓரளவு அமுலில் இருக்கின்றன. சிறிய பட்டணங்களில் தளர்ந்து வருகின்றன. பெரிய நகரங்களில் ஏறக்குறைய மறைந்து விட்டன. பாட்டனார் பன்னிரண்டு நாமம் போட்டுக்கொண்டு தினந்தோறும் வேதம் ஓதி, திவ்யப்பிரபந்தம் பாடி, ராமாயணம் வாசித்துக் காலம் கழிப்பதும், மகன் முகத்தில் மட்டும் நாமம் போட்டு வைதிகத்துக்கும், லௌகிகத்துக்கும் நடுவில் சாதுர்யமாக வாழ்க்கை நடத்துவதும், பேரன் ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து விட்டு நவநாகரிகத்தில் மூழ்கிப் பழைய சம்பிரதாயங்கள் அனைத்தையும் துறந்து மதுபானம், சுருட்டு, மாமிச உணவு முதலிய பழக்கங்களை ஏற்பதும் இப்பொழுது சகஜமாக இருக்கின்றன. காலேஜில் படிக்கும் பெண் சாதி வித்தியாசம் பார்க்காமல் இஷ்டப்பட்டவனை மணம் புரிவதில் ஆச்சரியமில்லை. அதனால் தங்கள் குலமும், மதமும் போய் விட்டதென்று அவள் வீட்டுப் பெரியோர்கள் துயருறுவதும் தடுக்கமுடியாது.

விவசாயத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை வர்ணிக்க முடியாது. பட்டணங்களில் பெரிய வீடுகளும், சர்க்கார் பத்திரங்களும் பெற்று லக்ஷாதிபதிகளாக இருப்பவர்கள், நிலச்சுவான்தார்களின் அக்கிரமங்களையும் குடியானவனின் உரிமைகளையும் பற்றி வாதாடித் தங்களைப் பொதுநலவாதிகளென்று பறைசாற்றுகின்றனர். குடியானவர்களுக்கு நிலத்தைப் பங்கு போட்டுவிட வேண்டுமென்றும், ஆனால் புதிய விஞ்ஞான முறையில் விவசாயம் நடைபெற வேண்டுமென்றும் அரசியல் தலைவர்களும், பொருளாதார நிபுணர்களும் திட்டம் போடுகின்றனர். அரசாங்கத்தின் செலவுகள் ஓயாமல் வளர்ந்து வருகின்றன. அதைத் தாங்கும் சக்தியோ இயந்திர சகாப்தத்தைச் சேர்ந்த வகுப்புகளுக்கே அதிகரித்து வருகின்றன. அவர்களிடமிருந்து போதிய வரி வசூல் செய்ய முடியாததால் நாணயத்தைப் பெருக்கிக் காரியத்தைச் சாதிக்க முயலுகின்றனர். அதனால், விலைவாசிகள் உயர்ந்து பணத்தின் மதிப்பு குறைந்து வருகிறது.

நகரங்களில் மின்சாரம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகி விட்டது. விளக்கு, விசிறி, ரேடியோ, மற்றும் பலவிதங்களில் மின்சாரத்தை உபயோகித்து வந்தவர்கள் மின்சாரமில்லாத கிராமத்தில் போய்ச் சில நாட்கள் தங்குவதற்குக் கூடத் தயங்குகின்றனர். மின்சாரம் கிடைத்த கிராமங்கள் அதில்லாத கிராமங்களைக் காட்டிலும் சுகமாக இருக்கின்றன.

உழவு, தண்ணீர் இறைத்தல், வண்டி இழுத்தல் மூன்றுக்கும் உபயோகமான மாடுகள் இப்பொழுது உழவுக்கு மட்டுமே பிரயோசனப் படுகின்றன. மோட்டார் பஸ்களும், லாரிகளும் மாட்டு வண்டிகளை மறையும்படி செய்து வருகின்றன. மின்சார பம்புகளைக் கொண்டு தண்ணீர் இறைக்கின்றனர். உழவுக்கு மட்டும் நல்ல மாடுகளை வைத்துத் தீனி போட முடியாது. ஆதலால், மாடுகளின் தரம் குன்றி வருகிறது. கிராமங்களில்கூடப் பால் கிடைப்பது துர்லபமாகி வருகிறது. ஆங்காங்கு உழவுக்கு டிராக்டர்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால் சிறுபண்ணைகளில் அவைகளை வைத்துப் பராமரிக்க முடியாது. நல்ல மாடுமில்லாமல், டிராக்டருமில்லாமல் விவசாயப் பொருள்களின் விலைகள் உயர்ந்திருப்பதால் சிலகாலம் சமாளிக்கலாம். ஆயினும், விவசாயத்தைப் பெரிய பண்ணைகள் மூலம் செய்வதை வெகு காலம் தடுக்க முடியாது. அதனால் தொழிலை இழக்கும் கோடிக்கணக்கான குடியானவர்களுக்குப் புதிய தொழில்கள் உண்டாகும் வரையில் பலவிதமான கஷ்டங்களும், குழப்பங்களும் தவிர்க்க முடியா.

பத்திரிகை படிப்போரின் மனம் இயந்திர சகாப்தத்தில் மூழ்கியிருக்கும். ஆனால் அவர்கள் வாழ்க்கையோ திரிசங்கு நிலையில் இருக்கும். சிந்தனைக்கும் சொல்லுக்கும் நடுவில் பெரிய பிளவு இருப்பதால், சமூகத்தில் ஒருவரை யொருவர் எளிதில் நம்பமாட்டார்கள். முக்கியமாக அரசியல் தலைவர்களின் திட்டங்களையும், உறுதிமொழிகளையும் பொது மக்கள் மனப்பூர்வமாக நம்பி ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கவே முடியாது.

இந்த வேதனைகளெல்லாம் சகாப்த மாறுதலால் ஏற்படும் தொல்லைகள் என்று மக்கள்

நன்குணர்ந்தால் அவற்றைக் கூடியவரையில் குறைப்பதற்கும், சகிப்பதற்கும் சக்தி தோன்றும். காந்தியடிகள் போதித்த அஹிம்சையும், சகிப்புத்தன்மையும் நாட்டில் நிலவுமாயின் இடைக்காலத் துன்பங்களை யெல்லாம் தைரியத்துடன் தாண்டக் கூடும். இயந்திர சகாப்தத்தையே பாரதத்தில் நுழையாதபடி தடுக்கவேண்டுமென்று காந்தியடிகள் விரும்பினார். ஆனால் காலச்சக்கரம் சுழலுவதை நிறுத்துவதற்கு அவருக்கும் ஆற்றல் இல்லை. தனி மனிதர்கள் அவருடைய உபதேசத்தை ஏற்றுத் துறவிகளாக வசிக்கலாம். அப்படிப் பலர் வசிப்பதனால் பாரதத்தின் ஆத்மீக சக்தி வளரும். ஆனால், பாரதத்தின் 36 கோடி மக்களும் உலகத்தின் 200 கோடி ஜனங்களைப் போன்றவர்களே. உலக நாகரிகத்திலிருந்து தனித்து நிற்க முடியாது. காந்தீயத்தின் உதவியால் இயந்திர சகாப்தத்தின் ஆபாசங்களையும், தீமைகளையும் ஓரளவு குறைக்கலாம். இடைக்கால வேதனைகளை யெல்லாம் மந்தப்படுத்தலாம். இதுவே நாட்டின் தலைவர்களின் கடமை.

முடிவு

சொல் சிரஞ்சீவி. அதன் பொருளோ ஓயாமல் மாறிக் கொண்டு வருவது. ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அதற்கு ராமன் என்று பெயர் வைக்கிறார்கள். குழந்தைப் பருவத்திலும், பால்யத்திலும், யௌவனத்திலும், முதிய வயதிலும் அதே பெயருடன் பலவித மாறுதல்களைப் புருஷன் அடைகிறான். தனி ஆசாமியைப் பற்றிய சொல் இவ்வாறு ஆயுட்காலம் வரையில் ஓயாமல் மாறும் பொருளைக் குறிப்பிடுகிறது. பொதுப்படையான சொற்களோ நூறு, ஆயிரம் வருஷங்கள் இம்மாதிரி வேலை செய்கின்றன. செல்வம், சுதந்திரம் என்ற சொற்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவை.

எவ்வாறு எல்லா மாறுதல்களுக்குள்ளும் ராமன் என்ற பெயருக்கும் அதன் பொருளுக்கும் ஓர் விதத் தொடர்பு இருக்கிறதோ, செல்வம் சுதந்திரங்களுக்கும் அவற்றால் குறிப்பிடப்படும் பொருள்களுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. செல்வத்தின் சொரூபம் ஓயாமல் மாறி வந்தபோதிலும், செல்வமுள்ளவனுக்கும் அதில்லாதவனுக்கும் ஏறக்குறைய ஒரே வித வித்தியாசமிருந்து வருகிறது. சுதந்திர மனிதனுக்கும் அதற்கு மாறுபட்டவனுக்கும் உள்ள வேறுபாடும் அப்படியே.

இயந்திர சகாப்தம் சமூகத்தின் யௌவன தசையா அல்லது வயோதிக நிலையா வென்பதைப் பற்றிப் பற்பலவாறு நினைக்கலாம். ஸ்பெங்களர் என்ற ஒரு ஜெர்மன் சமூக தத்துவ ஞானி 'மேல்நாடுகளின் முடிவு காலம்' என்ற தலைப்பின் கீழ் ஓர் பெரிய புத்தகம் எழுதியிருக்கிறார். அப் புத்தகத்தில் சஞ்சார சகாப்தம் சமூகத்தின் பால்யமென்றும், விவசாயமும் கிராம வாழ்க்கையும் யௌவனமென்றும், நகரங்களில் குழுமி உல்லாச வாழ்க்கை முடிவு காலமென்றும் கூறியிருக்கிறார். இப்படியே நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து மறைந்து வந்திருக்கின்றன வென்றும் பல உதாரணங்களைக் கொண்டு நிரூபிக்க முயன்றிருக்கிறார். அவருடைய முடிவுகளை மற்றச் சமூக தத்துவ ஞானிகள் ஒப்புக் கொள்ளவில்லை.

பழைய நாகரிகங்கள் உலகில் ஓர் பாகத்திலேயே ஓங்கி வளர்ந்தன. போக்குவரத்துச் சாதனங்களில்லாமையால் ஒரு பாகத்திலோங்கும் நாகரிகம் வெகு தூரம் பரவ முடியவில்லை. தற்காலத்திலோ பூமி முழுதும் ஓர் சிறிய தீவு போலாகி விட்டது. ஓரிடத்தில் தோன்றும் விஞ்ஞான வளர்ச்சியும், அதனடியாக நிர்மாணிக்கப்படும் இயந்திரங்களும், கருவிகளும் சில வருஷங்களில் உலகெங்கும் வியாபித்து விடுகின்றன. அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் ஐம்பது வருஷங்களுக்கு முன் தற்சமயம் பிரிட்டனுக்கும் பாரதத்துக்கு முள்ள வித்தியாசம் இருந்தது. ஆனால் இப்பொழுது விஞ்ஞான ஆராய்ச்சியில் ருஷியா அமெரிக்காவை முந்திவிட்டதென்று கூறலாம். அம்மாதிரியே ஐம்பது, நூறு வருஷங்களில் பாரதம் மேல்நாடுகளுக்குச் சமமாகவோ, மேலாகவோ முன்னேறக் கூடும்.


இயந்திர சகாப்தம் அடுத்த நூறு வருஷங்களுக்குள் உலகெங்கும் வியாபித்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதன் சொரூபம் எல்லா நாடுகளிலும் ஒரேமாதிரி இராது. விஞ்ஞான ஆராய்ச்சியிலும், இயந்திர சக்தியிலும் சமமான அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்குமிடையே மகத்தான வித்தியாசம் இருக்கிறது. இந்த வித்தியாசம் இனி குறைந்து விடும், பெருகாது என்று கூறுவதற்கில்லை.

ஆகலால் இயந்திர சகாப்தத்தில் பக்குவமான பிறகும் பாரதத்தின் நாகரிகத்தில் விசேஷ அம்சங்கள் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அந்த அம்சங்கள் என்னவாக இருக்குமென்பது ஓரளவு நமது தற்போதைய லட்சியங்களைப் பொறுத்திருக்கிறது. இயந்திர சகாப்தம் நமது நாட்டில் தோன்றும்பொழுது ராமகிருஷ்ணர், ரமண மகரிஷி, அரவிந்த கோஷ், மகாத்மா காந்தி போன்ற மகான்களும் தோன்றியது குறிப்பிடத்தக்கது. செல்வப்பெருக்கு எவ்வளவு அவசியமாயினும், செல்வத்துக்குப் பாரதம் என்றும் அடிமைப் படாது என்பதற்கு இது அறிகுறியாகக்கூடும். அப்படியானால், பாரதத்தின் வருங்காலத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை.

அவ்வாறே, மனித சுதந்திரம் சட்டங்களாலும், சமூக ஏற்பாடுகளாலும் கட்டுப் படுத்தப்பட்ட போதிலும், முடிவில் அது ஆத்ம சுதந்திரத்தைப் பற்றி நிற்கிறது. அந்த ஆத்ம சுதந்திரத்தையே தமது தனி சம்பத்தாகப் பாவிக்கும் மகாத்மாக்கள் பாரதத்தில் இடைவிடாது தோன்றி, தமது தைரியத்தாலும், தியாகத்தாலும், மன அமைதியாலும் பாரத மக்கள் சிற்றின்பத்தில் சிக்கித் தங்கள் சுதந்திரத்தை முற்றிலும் இழந்து விடாமல் பாதுகாப்பார்கள் என்றும் எதிர் பார்க்கலாம்.

(முற்றும்)



செல்லம் அழுதது ஏன்?

பிற்பகல் வேளை; பித்தான்கள் உடைந்து காலரிலும் கைகளிலும் இழிந்திருந்த என் கணவரின் சட்டைகளை நான் தைத்துக்கொண்டிருந்தேன். அந்த சமயம் பக்கத்து வீட்டுப் பப்பியுடன் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை செல்லம் திடீரென வீரிட்டு அழுதாள்; அந்த அதிர்ச்சியில் தையல் ஊசியே என் கையில் ஏறிவிட்டது. கோபத்துடன் திண்ணைக்கு ஓடிவந்தேன். அதே சமயம், பப்பியின் தாயார் கண்ணம்மாவும் அங்கு ஓடிவந்து செல்லத்தை வாரியெடுத்து சமாதானம் செய்ய முயன்றாள்: "ஆரு அடிச்சாம்மா என் செல்லக் குழந்தையை?"

"மாமி, ப...ப...பப்பி என் பொம்மையோட கவுனை அழுக்காக்கிட்டா, மாமி!" என்று விசித்து விசித்துக் கூறினாள் செல்லம்.

"அவ்வளவுதானே. பப்பியை நாம்ப நல்லா அடிச்சுட்டு, உன் பொம்மைக்கு புதுசா ஒரு கவுன் வாங்கிப் போட்டுடலாம். வா!" என்று தேற்றிவிட்டு, இரு குழந்தைகளையும் தன்னோடு அழைத்துச் சென்றாள் கண்ணம்மா. கண்ணம்மாவிடம் காணப்படும் தங்கமான குணங்களில் ஒன்று, தன் குழந்தைகளைப் போலவே பிறர் குழந்தைகளையும் அரவணைத்துக்கொள்ளும் தன்மை. தன் தந்தை பணக்காரர் என்ற கர்வம் எள்ளளவும் அவளிடம் கிடையாது.-இவ்வாறு எண்ணமிட்ட வண்ணம் அப்படியே கண்ணயர்ந்து விட்டேன். அப்புறம் செல்லம் வந்து என்னை எழுப்பினாள். கண்விழித்துப் பார்த்ததும், செல்லத்தின் கையிலிருந்த பொம்மைக்குப் புதுக்கவுன் போட்டிருந்தது தென்பட்டது—முன்பிருந்ததைப் போலவே இருந்தது இந்தக் கவுனும். இந்த ஏற்பாடு எனக்குப் பிடிக்கவில்லை. இதை ஆட்சேபிக்க கண்ணம்மாவின் வீட்டுக்கே சென்றேன்.

கண்ணம்மாவோ "புதிதாகக் கவுன் ஏதும் வாங்கவில்லையே. சில துணிகளை நான் துவைக்க வேண்டியிருந்தது. கையோடு கையாக அந்தக் கவுனையும் அலசினேன்" என்றாள். அழகாயிருக்கிறதே பேச்சு! வீட்டில் துணிகளைத் துவைத்துக் கொள்ளும் வழக்கம் எங்களுக்கே கிடையாது; சலவை செய்ய வெளியே அனுப்புகிறோம். அப்படியிருக்க, மோதிரக் கையினால் துணி துவைப்பதாகக் கூறினால், நம்புகிறவள் நானா? "அதெப்படியம்மா துவைத்தீர்கள், அடித்துத் துவைக்கும் சத்தங்கூடக் கேட்காமல்?" என்றேன்.

S. 258A-50 TM

என் பேச்சில் நம்பிக்கை இல்லாவிட்டால் இதோ இந்தத் துணிகளைப் பாருங்கள். இப்போது தான் இஸ்திரிபோட்டு முடித்தேன். ஆனால் அடித்துத் துவைக்கும் சத்தம் கேட்காத காரணம்........"



ஆனால் என் கவனமோ அவன் பேச்சில் லயிக்கவில்லை. வெகு பளிச்சென்று சுத்தமாக விளங்கிய அந்தத் துணிகள் மீது என் பார்வையைப் பறிகொடுத்துவிட்டேன். எனினும், அதே சமயம் என் மனதை உறுத்திய விஷயம் வேறொன்று : தன் செய்கையைப்பற்றி நாலுபேர் என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்த்தானா இவன்? இதையே நான் இவனிடம் கேட்டதும், அவன் சிரித்து விட்டு "நல்ல கேள்வி கேட்டாய். என் வேலையை செய்வதற்கு நான் ஏன் கூச்சப் படவேண்டும். தாம் தூம் விவகாரமே எனக்குப் பிடிப்பதில்லை. என் கையாலேயே நான் துணிகளைத் துவைத்துக்கொள்வதில் எவ்வளவோ சிக்கனமிருக்கிறது. அன்றாடம் உடுத்திக்கொள்ள சுத்தமான துணிகள் கிடைப்பதோடு அவை நீடித்து நிற்கவும் செய்கின்றன" என்றான்.


"நீடித்து உழைக்கிறதாவது; அதென்னமாக ? எங்கள் வீட்டுத்துணிகள் விறுவிறுவென்று கிழிந்துவிடுவதும் வாங்கின சுருக்கோடு விட்டுப்போய் விடுவதும் சர்வ சாதாரணமாகிவிட்டன: வருஷத்துக்குப் பலதடவை புதுத்துணிகள் வாங்கி மாளவில்லை!"



" அடித்துத் துவைப்பதால்தான் அவை கிழிந்துவிடுகின்றன. ஆனால் நாங்களோ அடித்துத் துவைக்காமல் ஸன்லைட் சோப்பினால் சலவை செய்கிறோம்"

பரிசுத்தமுள்ள சிறந்த சோப்பான ஸன்லைட் ஏராளமான நுரை கொழிக்கிறது என்றும், கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலுமுள்ள எல்லா அழுக்குகளையும் நொடிப்பொழுதில் அகற்றிவிடும் நுரை அதனுடையதுதான் என்றும் விளக்கிக்கூறினான் கண்ணம்மா.

இப்போதெல்லாம் நாலுபேர் நினைப்பதைப்பற்றி நானும் அக்கறைப்படுவதில்லை. துணிகளை வீட்டிலேயே ஸன்லைட் சோப்பினால் சலவை செய்துவிடுகிறேன். அது சிக்கனமான சோப் என்றும், சிறிதும் பெரிதுமாக சுமார் நாற்பதைம்பது உருப்படிகளை சுத்தமாகவும் பளிச்சென்றும் வெளுப்பதற்கு ஒரே ஒரு வில்லை ஸன்லைட்டே போதுமானது என்றும் கண்டு கொண்டேன். இப்போதெல்லாம் அன்றாடம் உடுத்துவதற்குத் தூய்மையான துணிகள் எங்களெல்லோருக்கும் கிடைத்துவருகின்றன: கிழிசல்கள் தைக்கப்பட்ட ஆடைகளை அணிந்து கொள்ளும் நிலைமையும் காலர்களையும், கைகளையும் கோட்டுக்குள் மறைத்துக்கொள்ளும் அவசியமும் இனி என் கணவருக்குக் கிடையாது. சிக்கனம் என்றால் எல்லா விதத்திலும் சிக்கனம். ஒரு குடும்பப் பெண் மணிக்கு இதைவிட வேறென்ன வேண்டும் ?



S 2 588-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

ஏப்ரல் மாதப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை



விடுதலைப் பத்திரம்

வேதா

கழுத்துப் பட்டையை இரு கைகளாலும் பற்றி இப்படியும் அப்படியுமாக இழுத்துக் கொண்டிருந்த நந்தகுமாரின் பார்வை, எதிரேயிருந்த பெரிய கண்ணாடியில் பதிந்திருந்தாலும், சிந்தனை சிட்டுக்குருவியைப் போல் எங்கெங்கோ அலைந்து கொண்டுதான் இருந்தது. பின்புறம் ஓர் உருவைப் பிரதிபலித்துக் காட்டியது கண்ணாடி.

முதுகுக்கு மேலே தெரிந்த பெண்ணுருவையே, கண்ணாடியில் உற்று நோக்கினார் நந்தகுமார். அவளும் பார்த்தாள். சட்டென்று தம் பார்வையை வாங்கிக் கொண்டவர் டையைச் சுருக்கி விடுவதில் முனைந்து விட்டார். கையிலே ஏந்தி வந்த வெற்றிலைத் தட்டை எதிர் நாற்காலியில் வைத்த அனுசூயா, கிழித்த வெற்றிலையின் நடுவே கொஞ்சம் பாக்குத்தூளை வைத்துச் சுருட்டி நந்தகுமாரிடம் நீட்டினாள். உணர்ச்சியேயின்றி அதை வாங்கி அவசரமாக வாயில் அடைத்துக் கொண்டு மீண்டும் அலங்காரத்தில் ஒன்றி விட்ட கணவரைக் கண் கலங்கப் பார்த்தவளின் நெஞ்சு ஏனோ விம்மியது. எப்படியிருந்தவர் எப்படி மாறி விட்டார்! காலம் செய்யும் கோலமா இது? கட்டின மனைவி கூடக் கசந்து போய் விடுவாளா! பாழாய்ப் போன திரைப்பட உலகம் செய்த பழியா? ஓர் அபலையின் வாழ்வை மிதித்து ஆடுவதிலே என்ன ஆனந்தம் காண்கிறாள் அந்த நாட்டியக்காரி!

கணவரின் காம்பீர்ய உரு அனுசூயாவின் நெஞ்சைக் கிளர்ந்தது. என்ன வாட்டசாட்டமான உடலமைப்பு? நெற்றியைச் சுருக்கிக் கொண்டு பார்ப்பதே போதுமே, பிறரை வசப்படுத்த. அதனால் தான் அவரை மெல்ல, மெல்ல இழந்து கொண்டு வருகிறேனோ? கடைசியில் முற்றுமே அவரை இழந்து நாக்கதியாக நிற்பேனோ?.

சிந்தனை நீண்டு கொண்டேயிருந்தது, பிற்பகல் நிழலைப் போல. அவள் சிந்தனை முடியும்வரையில் அவர் காத்திருக்கவில்லை. எழுந்து விட்டார். திடுக்கிட்டு நினைவு பெற்ற அனுசூயா தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''...வந்து...'' என்று நீட்டினாள் மெதுவாக.

வாசற்படியருகே சென்று விட்ட நந்தகுமார் திரும்பினார்.

'என்ன?' என்று வினவியது அவர் பார்வை.

''நேரமாகுமா வருவதற்கு?''

''என்ன கேள்வி இது?''

அவர் பார்வையில் பொங்கிய வெறுப்பையும், சினத்தையும் தாள மாட்டாதவளாய்த் தலையைத் தாழ்த்திக் கொண்ட அனுசூயா அடைபட்ட குரலில் சொன்னாள்.

''நேற்று மாதிரி நேரமாகுமோ என்பதற்காகக் கேட்டேன். நீங்கள் சீக்கிரம் வந்து விட்டால் தேவலே...''

''ஏனாம்!''

''எனக்கு என்னமோ உடம்பே சரியில்லே.''

''என்றுதான் உன் உடம்பு சீராக இருந்தது? உள்ளே நுழைந்தால் மருந்து நெடிதான் என்றால் எப்படி வீட்டுக்கு வரப்பிடிக்கும்? வந்து தொலைக்க வேண்டுமே என்றாகி விடுகிறது. நான் உடல் தேய உழைத்தால் தானே, நீ உட்கார்ந்து மருந்து குடிக்கலாம். பணம் மட்டும் குவிந்து விட வேண்டும். ஆனால் நான் வீட்டை விட்டு வெளிச் செல்லவே கூடாது. அழகாக இருக்கிறது! உன் கொள்கை. படம் வெளிவரும் தேதியைக்கூட விளம்பரப்படுத்தியாகி விட்டது. மசமச என்றிருந்தால் ஆவது எப்படி? இனிமேல் தான் எனக்கு நிறைய வேலை இருக்கிறது. என்னால் நேரத்துக்கு வர முடியாது. கழுத்தை யறுக்காதே...''

''ஏன் இத்தனை வெறுப்பு என் மேல்? நான் என்ன தீங்கு இழைத்து விட்டேன், உங்களுக்கு?'' துக்கம் தாங்காமல் நெஞ்சை அடைக்கக் கேட்டாள் அனுசூயா. அவர் வெறுப்பு அதிகரித்ததே அன்றி அவளிடம் துளி இரக்கம் கூட ஏற்படவில்லை.

''போதுமே புலம்பல். லதா கூடப் பிச்சை வாங்க வேண்டும் உன்னிடம்.''

சூட்டுக் கோலை இதயத்தில் இழுத்தமாதிரி 'சுர்ர்' என்று வலித்தது அனுசூயாவுக்கு.

''எப்போதும் இதே பேச்சுத்தானா?''

''உயிரும், உணர்வும் உள்ளவரையில் உண்மையை உரைக்கத்தானே வேண்டியிருக்கிறது?'' என்றார்.



''நான் பாபி. இல்லையானால் இப்படி யெல்லாம் கேட்க நேருமோ?''

இதயத்தின் அடிவாரத்திலிருந்து வெடித்து வந்த விம்மல், அவர் நெஞ்சைத் தொடவே யில்லை. அலட்சியப் புன்னகையே அவர் உதட்டில் உருவாகி மலர்ந்தது.

''உன்னை யார் கேட்கச் சொல்கிறார்கள்? என்னை விடுவித்து விடு என்று நானே சொல்கிறேன் நான். உனக்கும் நிம்மதி. எனக்கும் நிம்மதி'' என்று கூறினார்.

''இப்படிக் கூற உங்களுக்கு எப்படி மனம் வருகிறது? தாலி கட்டிய மனைவியைக் கைவிடுவது நியாயமா?''

''எனக்குத்தானே விடுதலை கேட்கிறேன். இதில் கஷ்டமென்ன வந்தது? இப்படிப் பட்ட இல்வாழ்க்கையை விடத் துறவறமே மேல்.''

''ஏன் என்னைப் பிடிக்கவில்லை உங்களுக்கு?''

''இதற்குஎன்னால் விடையளிக்கமுடியாது.''

''நான் செய்த குற்றம்தான் என்ன?''

''நீ நிரபராதி. நான்தான் குற்றவாளி.''

''ஐயோ! ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்?''

''ஆமாம், பூ அனுசூயா! எனக்கு இந்த வாழ்க்கை அலுத்து விட்டது.''

திரும்பி வந்து தாழ்ந்த குரலில், ''என்னால் லதாவை மறக்க முடியவில்லை. உனக்குத் துரோகம் புரியவும் மனம் வரவில்லை. இது தான் விஷயம். இதற்கு மேலும் என்னால் விவரிக்க இயலாது. என் மன உளைச்சலை உன்னால்தான் தீர்க்க முடியும். முடிவான பதிலைச் சொல்'' என்றார் இறுதியாக.

'எத்தனை நெஞ்சழுத்தம்? மனைவியிடமே மற்றொருத்தியைப் பற்றிக் கொஞ்சமும் கூச்சமோ அச்சமோ இன்றிப் பேசுகிறாரே! மனைவியின் சம்மதம் கேட்டு நிற்க எத்தனை துணிச்சல்?' நினைவுகளின் மோதலில் அழுகைதான் பீரிட்டது. விம்மி, விம்மி அழலானாள்.

''அழுவதால் ஆகப்போவது எதுவுமில்லை. என் நல்வாழ்வில் உனக்கு அக்கறை இருக்குமானால் எனக்காக நீ எதையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அதுதான் உத்தம மனைவிக்கு உரிய லட்சணம். என் இன்பம், ஆனந்தம்,



மகிழ்ச்சி யாவும் உன்னுடைய கையில்தான் இருக்கின்றன.''

''இதுதான் உங்கள் முடிவா?'' என்று வினவினாள் அனுசூயா, நீர்வழிந்த விழிகளை மெதுவாக நிமிர்த்தி.

''ஆமாம்!''

அவளை நேருக்கு நேர் பாராமலே பதில் அளித்து விட்டு விரைந்து வெளியேறி விட்டார் அவர். கரைபுரண்டோடிய கண்ணீரை நிறுத்த வகை தெரியாமல் வாயிலிலேயே வெறித்துப் பார்த்தபடி நின்றாள் அனுசூயா.

''ஏண்டியம்மா என்ன சொன்னான் அவன்? ஏன் இப்படிக் கண்ணீர் வடிக்கிறாய்?''

மகனின் கார் காம்பவுண்டைத் தாண்டிச் சென்ற பிறகு, மருமகளைத் தேடி வந்த மாமியார் கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் மருமகளைக் கண்டு திடுக்கிட்டுப் போய்விடவில்லை. துயருற்றாள். மகனின் விபரீதப் போக்கு அவள் அறியாததல்லவே? இதன் முடிவு எப்படி இருக்குமோ என்றுதான் அஞ்சினாள். மகனின் மீது உள்ள சினம் மருமகளின் மீது பாசமாகப் பரிணமித்து விட்டிருந்தது. மாமியும் மருமகளும் ஒன்று. மகன் தனி. என்ன முயன்றும் மகனை வழிப்படுத்த முடியவில்லை பெற்றவளால்.

''அழாதேயடியம்மா. எல்லாம் போதாத காலம். படம் எடுக்கிறேன் என்றபோதே இது நல்லதுக்கு இல்லை என்றுதான் எண்ணினேன். அப்படியேதான் ஆச்சு. ஆடிப்பாடி வேண்டிய பணம் சேர்த்தானே, அத்துடன் நின்றிருக்கக் கூடாதோ? அவன் மோகத்தில் தலைகால் தெரியாமல் குதிக்கிறான். நல்லதுக்கா இது? விநாச காலத்துக்குத்தான். என்னவாம் இப்போ?''

''இல்லை. கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாராம்! அதற்கு என் சம்மதம் வேண்டுமாம்.''

''அப்படி என்றால்.....''

''என்னை விடுதலைப் பத்திரம் எழுதித்தரச் சொல்கிறார்.''

''ஊஹூம்! இது வேறு இப்போ! அது எதற்கு?''

''இல்லை என்றால் விவாகம் சட்டவிரோதமாகி விடுமாம்.''

''ஓ அப்படியா! இங்கே பார் அனுசூயா. உயிர்போனாலும் நீ இதற்குச் சம்மதிக்காதே, தெரியுமா!''

''நான் என்னம்மா செய்வேன்? ரொம்பவும் நிர்ப்பந்திக்கிறாரே?''

''என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். நீ எழுதித் தராதே, என்ன?''

அனுசூயாவுக்கு ஒன்றும் புரியவில்லை. துக்கத்தில் நீர் படர்ந்த விழிகளை நிமிர்த்தி மாமியாரைப் பார்த்தாள். அவள் பார்வை வெகு தூரத்தில் நிலைத்திருப்பது கண்டு வாய் மூடிக் கண்ணீர் உகுத்தாள் பேதை. அன்று பூராவும் அழுதே கழித்தாள் அனுசூயா. காலையில் போன நந்தகுமார் இருட்டியும் கூட வீடு திரும்பவில்லை.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் மாலை திடுமெனத் திரும்பி வந்த நந்தகுமாரைக் கண்டு ஆனந்தமும், ஆறுதலுமாக மூச்சு விட்டாள் அனுசூயா. தன் கையாலேயே காப்பியைத் தயாரித்து எடுத்துக் கொண்டு கணவரின் அறைக்குள் நுழைந்தவள், பெரிய டிரங்குப் பெட்டியில் துணிமணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்த நந்தகுமாரைக் கண்டு திடுக்கிட்டு விட்டாள். துடிதுடித்த நெஞ்சுடன் காப்பியைக் கணவர் அருகே வைத்து விட்டு, ''என்ன இதெல்லாம்?'' என்று வினவினாள் திகிலுடன்.

''என்னவானால் உனக்கென்ன?''

''இல்லை. உம்......வந்து. ஏன் இத்தனை நாளாகிவிட்டது நீங்கள் வருவதற்கு?''

''என்ன வைத்திருக்கிறது, இங்கே பறந்து ஓடி வருவதற்கு?''

''ஏனிப்படி வந்ததும் கோபிக்கிறீர்கள்?''

''அதற்குத்தான் வராமலே இருந்துவிடுகிறேன் நான்.''

''திரும்பத் திரும்ப இதுவேதானா? அப்படி என்ன வெறுப்பு?''

அழுகை பீறிட்டது அனுசூயாவுக்கு.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. வேண்டிய பணம் உனக்கு வைத்துவிட்டேன். துணைக்கு அம்மா இருக்கிறாள். என்னைப் போகவிடு, அனுசூயா. உன்னைப் போகச் சொல்லவில்லையே. நான்தானே போகிறேன் என்கிறேன். என்னைத் தடுக்காதே. வாழ்வு என்னை அழைக்கிறது. இரு கரங்களையும் நீட்டி - நீ குறுக்கே நிற்காதே.''

அனுசூயாவால் இச் சொற்களைக் கேட்கப் பொறுக்கவில்லை. ரோசமிருக்காதா? எத்தனை நாட்களுக்குத்தான் கணவரின் நிந்தனையையும், உதாசீனத்தையும் சகிப்பாள்! எல்லாம் இன்று எல்லையை மீறி விட்டன.

''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்!'' என்று கேட்டே விட்டாள் கடைசியில்.

''ஒன்றுமே வேண்டாம். ஒரே ஒரு கையெழுத்துப் போடு, போதும்.''

நீர் பொங்கும் விழிகளைக் கொண்டு கணவரை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு சொன்னாள்: ''சரி அப்படியே செய்கிறேன். இனிமேலாவது காப்பியைக் குடியுங்கள்.''

பிரமிப்பில் சிலையாக நின்றுவிட்டார் நந்தகுமார் சில நிமிஷங்கள் வரை. திடீரென்று அவர் சினம் தணிந்து விட்டது, பொங்கிய பாலை இறக்கியதும் தணிவது போல். அகத்தில் ஊறிய உவகை முகத்தில் பிரதிபலிக்கக் காப்பியை எடுத்து மடமட வென்று ஒரே மூச்சில் குடித்தார். கடிதக் கட்டிலிருந்து பரபரவென்று ஒரு தாளைக் கிழித்தார். பேனாவையும், தாளையும் மனைவியினிடம் நீட்டினார்.

''உம், நான் சொல்கிறேன் எழுது!''

கலங்கிய விழிகளுடன் கணவரையே பார்த்துக் கொண்டிருந்த அனுசூயா அவர் அவசரத்தையும், உற்சாகத்தையும் கண்டு உள்ளம் நைந்து துடித்தாள்.

'என்னை உதறுவதில் இத்தனை ஆவலா? லதா! நீ பாக்கியசாலியடி' என்று அவள் இதயம் ஓலமிட்டது. கணவரையும், நீட்டிய தாளையும், பேனாவையும் மாறி, மாறிப் பார்த்தாள். ஏனோ மெய் நடுங்கியது. 'ஏன் ஆத்திரப்பட்டுச் சொல்லிவிட்டோம்? எழுதிக் கொடுத்துவிட்டால் பின் வாழ்வு ஏது? காலமெல்லாம் அழுது அழுதே காலம் கழிக்க நேருமோ? நாமென்ன கிழவியா ஆசா பாசத்தை உதறிவிட? வாழ்வைக் கொடுக்க

முடியுமா ? எவளோ ஒருத்தி ஏன் என் வாழ்வில் புகவேண்டும் ! என்னிடம் என்ன குறை கண்டார் இவர் ? குழந்தை யில்லையே என்ற தாபம்தானே இவருடைய மனமாற்றத்தின் காரணம் ? அது என் குற்றமா ? நானும் ஒன்றல்ல, இரண்டல்ல; மூன்று பெற்றுக் குழியில் இட்டேன். இதுவே என் உடலையும் உள்ளத்தையும் உருக்குலைத்து விட்டது. மீண்டும் ஒரு குழந்தை உயிருடன் பிறக்காதா என்று ஏங்கிக் கொண்டிருக்கையில் இப்படி ஒரு அசம்பாவித நிகழ்ச்சியா ?''

'' என்ன இது? மரமாக நின்று விட்டாய் ? எழுதேன்.''

பைத்தியக்காரியைப் போல் அவரை வெறிக்கப் பார்த்தாள் அனுசூயா.

'' இன்றேயா ?''

'' உம்......''

'' இல்லை ! வேண்டாம். இன்று வெள்ளிக்கிழமையாக இருக்கிறது. நாளைக்கு எழுதித் தருகிறேன்.''

'' ச் ! என்ன இது பைத்தியக்காரத்தனம்?''

உற்சாகம் வடிந்த அசுவாரசியத்துடன் கேட்டார் அவர். சட்டென்று அவர் கைகளைப் பற்றி மார்புற அணைத்துக் கொண்டு நெஞ்சடைக்கச் சொன்னாள் அனுசூயா.

''இல்லை. இன்று ஒரே ஒரு நாள் என் கணவராக இருங்கள். வெள்ளிக்கிழமையும் அதுவுமாக என்னை வற்புறுத்தாதீர்கள். நாளைக்குக் கட்டாயம் நீங்கள் சொன்னபடி செய்கிறேன். தயவுசெய்து மறுக்காதீர்கள்.''

ஏனோ நந்தகுமாரால் இதை மறுக்க முடியவில்லை. 'இன்று ஒருநாள்தானே? போகட்டும்' என்று இருந்து விட்டார். பெண்ணின் கண்ணீருக்குத்தான் எத்தகைய சக்தி! லதாவின் நினைவு அவரை அலைக்கழித்தாலும் அன்று அவர் வீட்டை விட்டுச் செல்லவில்லை. எப்பொழுது பொழுது விடியும், விடுதலை கிடைக்கும் என்ற எண்ணங்களிலேயே இரவெல்லாம் புரண்டார் என்றால் மிகையில்லை.

ஆனால் அனுசூயா !....

இரவாகவே இருக்கக் கூடாதா என்று தவித்தாள். முன்னாளைய நளாயினியா? 'பொழுது விடியாதே' என்றால் புலராமல் நிற்க. பொழுது விடிந்தது. அவள் வாழ்வு ?....காப்பியைக் கொண்டுபோய்க் கணவர் அருகே வைத்த அனுசூயா அவரைக் கவனித்தாள். தம் வேலைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு அலங்கார ரூபராக நின்றிருந்தார் நந்தகுமார் அவளை எதிர்நோக்கி.

'' நான் எழுதிவிட்டேன் எல்லாம். படித்துப் பார்த்துக் கையெழுத்துப் போடு.''

அவளையோ, அவள் கொண்டுவந்த காப்பியையோகூடக் கவனியாமல் காகிதத்தையும், பேனாவையும் நீட்டினார் அவளிடம். சுப்பென்று வியர்த்தது அனுசூயாவுக்கு. கண்ணீர் பொங்க, கைநடுங்கக் கையெழுத்து இட்டவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு விம்மினாள். அவர் எதையுமே பொருட்படுத்தவில்லை. கடிதத்தை மடித்துப் பையில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார்.

'' நான் வருகிறேன். பிறகு ஆள் அனுப்புகிறேன். சாமானெல்லாம் அனுப்பிவிடு.''

சீக்கிரமே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அனுசூயா.

'' எப்போது வருவீர்கள் ?''

'' வருவதா ?''

அவள் ஏதோ சொல்லத் தகாததைச் சொல்லிவிட்டதைப் போல் ஆச்சரியத்துடன் கண்களை அகல விழித்து வினவினார் அவர்.

''ஏன் வரவே மாட்டீர்களா ?''

'' என்ன வேலை இங்கே !''

அடி உதட்டை அழுத்திக் கொண்டாள் அனுசூயா !

'' எனக்காக இல்லாவிடினும், அம்மாவுக்காகவேனும் அடிக்கடி வந்து போங்கள்.''

'' உம். பார்க்கலாம்.''

சில நாட்கள் வந்து தங்கி விட்டுப் போகும் விருந்தாளியைப் போல் விடைபெற்றுச் சென்று விட்டார். கூடவே வந்த அனுசூயாவுக்குக் கூடத்தில் மாமியாரைக் கண்டதும் ஏனோ அழுகை பொங்கி வந்தது.

* * *


லதா - நந்தகுமார் பதிவுத் திருமணம் ஆடம்பரமின்றி நடந்தது. லதாவின் இளமை எழிலில் மதிமயங்கிக் கிடந்த நந்தகுமாருக்குச் சுற்றமும் சூழ்நிலையும் மறந்து போய்விட்டதில் வியப்பென்ன இருக்கிறது? தாம், லதா, படவுலகம் இவற்றைத் தவிர மற்றெதுவும் அவர் நினைவில் இடம் பெறவில்லை. அபூர்வமாகத் தாயின் நினைவு வரும். கண நேரம் தாய்ப்பாசத்தால் தடுமாறி நிற்பார். உடனேயே சின்ன அலையை, பெரிய அலை அமுக்கிக் கொண்டு எழுவது போல் லதாவின் நினைவு, சகலத்தையும் அமுக்கி விடும்.

ஒரே ஊரில் இருந்தும் தாயும், தனயனும் இரு துருவங்களாகவே இருந்தனர். அனுசூயாவைப் பற்றிக் கவலையே படவில்லை அவர். வேண்டிய பணம் இருக்கிறது. 'துணைக்குத் தாய் இருக்கிறாள். இது போதாதா?' என்று தான் எண்ணினார். மனமறிந்து மணந்த மனைவிக்குப் புரிந்த துரோகத்தை மறந்து தான் போய் விட்டார்.

லதா நடித்த பல படங்கள் வெளிவந்தன. நல்ல பெயரும், பிரக்கியாதியும், பணமும் புகழும் அவளைத் தேடி ஓடிவந்தன. நந்தகுமாருக்குப் பிடிபடாத பெருமையாகத் தான் இருந்தது முதலில். பிறகு ஏனோ சலிப்பு ஏற்பட ஆரம்பித்து விட்டது. படம், பாஷாணம் என்று எண்ணும்படியாகி விட்டது. அவர் வாழ்க்கையை அனுபவித்து வாழ ஆசைப்பட்டார். படத்திலிருந்து மெல்ல, மெல்ல விலகிக் கொண்டு விட்டார் நந்தகுமார். ஆனால் லதா ?....

அவளுக்குச் சதா ஷூட்டிங், அது, இது என்று - படவேலை இருந்து கொண்டேயிருந்தது. நாளில் சில மணி நேரங்களுக்கு மேல் வீட்டில் தங்க முடியவில்லை. இருக்கும் கொஞ்ச நேரத்திலும், அலைச்சலின் அயர்ச்சியால் களைத்துச் சோர்ந்து படுத்துக் கிடப்பாள். நந்தகுமாருக்கோ அவளோடு உல்லாசமாகப் பொழுது போக்க உள்ளமும், உடலும் துடிக்கும். ஆனால் அதற்குச் சரியான சந்தர்ப்பமும், சூழ்நிலையும் இராது. அவள் இளமையும், தம் இன்பமும் பறி போவதைப் போல் வேதனைப்பட்டுத் தவிப்பார்.

அவர் வேலையை விட்டு விலகி ஓய்வில் இருந்தார். பொழுது போகவில்லை அவருக்கு.



"ஹலோ! ஆபீஸ் முதலாளியா பேசறது! இன்ன உபகாரம் செய்யணும்...! என் கணவர் ஆபீஸ் வேலையாக இருந்தால் தான் ஞாபகமாகச் செய்கிறார். நான்



சொன்னால் மறந்துடறார். அதனாலே அவர் ஆபீஸிலிருந்து போகும்போது ஒரு வீசை மீனகாய் வத்தல் வாங்கிக் கொண்டு போகும்படி தயவு செய்து சொல்லி விடுகிறீர்களா?"

ஆனால் அவளுக்குப் பொழுது போதவில்லையே, என்ன செய்வாள் அவள்?

''உல்லாசமாக எங்காவது போய் வரலாம். வாயேன்'' என்று அவர் ஆசையாக அழைக்கையில், அதை ஏற்க முடியாத நிலைமையில் இருப்பாள் லதா. தவிப்பாள். 'அங்கே ஷூட்டிங். இங்கே இவரைப் பார்க்க வேண்டும்' என்று அவள் கூறியதும் அவர் உற்சாகமும் 'குப்' பென்று அவிந்து விடும்.

உள்ளூற வேதனையையே அடைந்தார். கையிலே இருந்தது கனி. ஆயினும் நின்று, நிதானித்து, சுவைத்து அனுபவிக்க முடியவில்லையே. இந்த ஏக்கமே பெரிதாகி விட்டது அவருக்கு. தனிமை தீய்த்தது. லதா வீட்டில் தங்குவதே அபூர்வம். அவள் இல்லாத போது ஒரு தம்ளர் தண்ணீருக்குக்கூட மாமியாரைத் தேடவேண்டியிருந்தது. லதாவின் தாயை நெருங்கிய பந்துவாக ஏற்க மறுத்தது அவர் உள்ளம்.

அந்த அம்மாளும் அவரை யாரோ ஒரு விருந்தாளியாகக் கருதினாளே தவிர, மாப்பிள்ளையாக மதித்து நடத்தவுமில்லை, அன்பாக உபசரிக்கவுமில்லை. லதா இல்லாத போது அவ்வீட்டில் காலம் தள்ளவே வெகு சிரமப்பட்டார். சகலமும் அவர் பணமே. ஆயினும் மனம் ஒட்டவில்லை. ஏன் என்பது அவருக்கே விளங்கவில்லை. ஏன் ஓய்வு எடுத்துக் கொண்டோம் என்று தம்மையே அவர் நொந்து கொண்டார்.

லதா வெளிச் சென்ற சமயங்களில் சாப்பாட்டு நேரம் போக மீதிப் பொழுதைக் காரில் ஊரை வலம் வந்து கழித்தார். அருகே இருக்கும் கிராமங்களுக்கு எல்லாம் கூடப் போய்ச் சுற்றிப் பார்த்து வருவார். அப்படி ஒரு நாள் செல்கையில் பழைய வீட்டின் வழியே போக நேரிட்டது. அப்போது அவரையும் அறியாமல் அவர் பார்வை வீட்டை நோக்கித் தாவியது. வாசற்புறம் தோட்டக்காரனோடு பேசிக் கொண்டு நின்றிருந்த அனுசூயாவையும் அவள் உருவத்தையும் கண்டு திடுக்கிட்டு விட்டார் நந்தகுமார்.

ஒரு சில மாதங்களுக்குள் இத்தனை மாறுதலா தோற்றத்தில்? இளைத்து வெளுத்திருந்த உடலில் ஒரு தனி அழகும், கவர்ச்சியும் கலந்திருந்தன. சோகம் கவிந்த முகத்தில் தனிக் களை. கோடாரி முடிச்சும், மஞ்சள் பூச்சும், குங்குமப் பொட்டும் ஒரு தனிக் கம்பீரத்தையே அளிக்கின்றனவே! எளிமையான அலங்காரத்தில் கிருகலட்சுமியின் லட்சணம் தனிப் பெருமையுடன் பிரகாசிக்கிறதே! இது ஏன்? நான் எப்படி இத்தகைய முட்டாளானேன்? லதா மோகத்தில் எல்லாமே என் கண்களுக்கும், அறிவுக்கும் புலப்படாமல் இருந்து விட்டனவா? விதி மறைந்திருந்து சதி செய்து விட்டதா? ஒரு கணம்தான் பார்த்தார் அனுசூயாவை. இன்னதென விவரிக்க இயலாத ஓர் உணர்ச்சி அவரை ஆட்கொண்டு ஆட்டி வைத்தது. காரை வெகு வேகமாகத் திருப்பி அடுத்த தெரு வழியாக விட்டார்.

அப்போது லதாவின் காரும் வீதியில்தான் இருந்தது. ஆனால் அவளைத் திரும்பியும் பாராமல் வெகு வேகமாகக் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் புகுந்தவர், விழிகள் விரிய வியப்புடன் பார்த்த லதாவின் தாயாரைக்கூடக் கவனியாமல் மாடிப் படிகளில் தாவி ஏறித் தம்முடைய அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டார். தீயில் புரளுவதைப் போல் புரண்டு கொண்டிருந்தார் படுக்கையில் அமைதியின்றி.

'நான் முட்டாளாக எப்படி ஆனேன்? மாதம் ஒரு முறையாவது வருவதாகச் சொன்னேனே! இத்தகைய கொடூரத் தன்மை எதனால் ஏற்பட்டது எனக்கு? லதாவின் மேல் ஏற்பட்ட மோகம்தான் மூலகாரணமா? மூன்று வருடங்களாகப் பொறுத்ததைப் போல் இன்னும் சில மாதங்களாவது பொறுத்திருக்கக் கூடாதா நான்? இத்தனை வேதனையும் அவதியும் இராதே? அவளும் அல்லவா பொறுமையை இழந்து விட்டாள்?'

'நானாக வலிய ஏற்ற வாழ்வு ஏன் இன்பமளிக்கவில்லை? சதா வேலை, வேலை என்று லதா வெளியிலேயே அதிகம் பொழுதைப் போக்கி விடுவதால்தான் இந்தத் தனிமை என்னை வாட்டிப் பிழிகிறதோ? அவளையும் அழைத்துக் கொண்டு குற்றாலம், கொடைக்கானல் என்று போய் விட்டால் என்ன?'

நினைவும் தாபமுமாகக் கிடக்கையில் கதவுக்கு அப்பால் பேச்சுக் குரல் கேட்டது. லதா தான் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள்.

''அப்ப நான் வரட்டுமா, லதா! நாளை மாலை கட்டாயம் வருகிறாயா?''

''உம். பார்க்கலாம்.''

''பார்ப்பதென்ன, கட்டாயம் வந்துதான் ஆகவேண்டும். சாக்குப்போக்குச் சொல்லி நின்று விடாதே!''

''அதில்லை, குமார்! நானும் இவருமாக எங்காவது போய் வரலாம் என்பது. இவரோடு வெளிக் கிளம்பி வெகு நாளாகிறது.''

துள்ளி எழுந்து உட்கார்ந்தார் நந்தகுமார். இன்பத்தின் சிகரத்தையே எட்டிப் பிடித்து விட்டதுபோல் குதூகலித்து ஆர்ப்பரித்தது அவர் உள்ளம். லதாவின் எழிலுருவில் அனுசூயாவின் சோக உரு மறைந்தே விட்டது. ஆனால் தொடர்ந்து நடந்த சம்பாஷணையைக் கேட்டபோதோ?...

'' அவராவது, சுவராவது! பிழைக்கிற வழியை விட்டு...'' என்றாளே பார்க்கலாம் அந்தக் குமாரி என்ற தோழி.

'' அதென்ன, அப்படிச் சொல்கிறாய்?'' என்று வியப்புடன் கேட்டாள் லதா.

''அசட்டு லதா! யௌவனமும், அழகும் இருக்கும் வரைதான் ஒரு பெண்ணுக்கு மதிப்பும், கௌரவமும். இந்தக் காலத்தில் வாழ்ந்து காசு சேர்க்காமல் அலைப் பிழைப்பா பிழைப்பது? உன் வரவுக்காகப் படாதிபதி காத்துக் கொண்டிருக்கிறார். நீயானால்...''

'' சே! அது சரியா? கணவர் இருக்கும் பொழுது...''

''ஆமாம், அக்கினி சாட்சியாகத் தாலி கட்டியது பாழாகி விட்டது. போலேன். மேளமில்லே, கோலமில்லே, மாவிலைத் தோரணமில்லே, மஞ்சள் கயிறு இல்லே. என்ன கல்யாணம் இது?''

'' என்னவோ எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது!''

''குழந்தை குட்டிகளைப் பெற்றுக் குடும்பத்தில் உழலவா இத்தனை ஆட்டமும், பாட்டும் கற்றுக் கொண்டாய்!''

'' ஐயோ, குழந்தையா? கடவுளே! அந்த எண்ணமே துளிக்கூடக் கிடையாது எனக்கு.''


'' பின் ஏன் தயக்கம்? சொர்க்க வாழ்வு வாழ்வதை விட்டு ஏன் இந்தச் சிறை வாசம்? உம், நான் வரட்டுமா? நேரமாகிறது!''

இத்துடன் சம்பாஷணை நின்றது. காலடி ஓசை எழும்பி அடங்கியது. நிசப்தம் நிலவியது. நந்தகுமாருக்குச் சிரசே வெடித்துச் சிதறி விடும் போல் இருந்தது. பாலான உள்ளத்தில் நஞ்சைக் கலக்குகிறதே உலகம்! இனி லதா எப்படி இருப்பாள்? அவரை இலட்சியம் செய்வாளா?

இந்தச் சம்பாஷணைகளைக் கேட்டதுதான் காரணமோ என்னவோ வெகுநேரம்வரையில் சித்தப்பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார் நந்தகுமார்.

இரவு சாப்பாட்டுக்குப்பின் படுக்கச் செல்லாமல் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு வெளியேறும் லதாவைப் பார்த்துத் திகைத்து நின்றார் நந்தகுமார். ''கொஞ்சம் ஸ்டுடியோவரை போய் விட்டு வருகிறேன், வேலை இருக்கிறது என்று புன்னகை தவழக் கூறிவிட்டு லதா வெளியேறி விட்டாள், அவர் பதிலுக்குக் கூடக் காத்து நிற்காமல். பல்லைக் கடித்தார் நந்தகுமார். அவள் அதைப் பார்த்தால்தானே? விரைந்தோடி விட்டாள். விர்ரென்று கிளம்பிச் சென்ற கார் தமது இதயத்தின் மீதே ஓடியதைப் போல் துடி துடித்தார் நந்தகுமார்.

அன்று மட்டுமில்லை. அதற்குப் பிறகுஅநேகம் முறைகள் இவ்விதம் நடந்தேறிவிட்டன. ஒவ்வொரு நாளும் அவள் தம்மை விட்டு, விலகி விலகிச் செல்வதை உணர்ந்தார் நந்தகுமார். என்ன செய்ய முடியும் அவரால். கண்டிக்கவும் முடியவில்லை; கெஞ்சவும் ஆண்மை இடம் தரவில்லை. கொஞ்சினாலோ அவள் விழிநீரை இர்த்தும், மோகனப் புன்னகை புரிந்தும் அவரைப் பேசவிடாமல் திணற அடித்தாள். வெகு சீக்கிரத்திலேயே



அவரை அலட்சியப் பொருளை ஒதுக்கி விட்டுத் தன் பாட்டில் திரியத்தலைப் பட்டு விட்டாள் லதா. எதையும் சகிக்க முடிந்த அவரால், அவள் அலட்சியத்தைச் சகிக்க முடியவில்லை. அபிப்பிராய பேதங்கள் அதிகமாகி விட்டபின் தாம்பத்யத்திலே பிளவு ஏற்படக் கேட்கவா வேண்டும்?

''நடிப்பதையே விட்டுவிட வேண்டும்'' என்றார் அவர். மறுத்தாள் அவள். பகை மூண்டது. உள்ளூறப் புகைந்து கொண்டிருந்த பகைமைத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கி விட்டது. சட்டி விண்டால் ஒட்டுமா? அப்படித்தான், இதயம் விண்டாலும்.

புதுப் படம் இரண்டுக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளக் கிளம்புகையில், ''போதும், நடித்தது. நிறுத்தி விடு'' என்று தடுத்தார் நந்தகுமார். அவள்இசையவில்லை. அவர் சினம் மூண்டு இரைந்து பேசவும், ''உங்களைப் போல் உட்கார்ந்து சாப்பிட என்னால் முடியாது'' என்று பதிலுக்குச் சொல்லி விட்டாள்.

'' என்ன ?''

நெஞ்சடைக்கக் கூவினார் நந்தகுமார். உடலின் ஒவ்வொரு அணுவும் துடித்தது அவமானத்தால்! எத்தனை பணத்தை அவள் காலடியில் கொட்டினார். கணத்தில் உதறி எறிந்து பேசிவிட்டாளே! இவ்வதிர்ச்சி நீங்கும் முன்பே தொடர்ந்து கூறினாள் லதா.

'' உங்கள் தொல்லையே பெரிதாகி விட்டது. என்னைத் தடுப்பதற்கு ஒருவருக்கும் உரிமையில்லை.''

"நம் உறவை மறந்து பேசாதே, லதா!"

"பெரிய உறவு!"

அலட்சியமாக அவள் உதட்டைப் பிதுக்கிய போது அவர் அடைந்த ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது.

"பாவி, உனக்காக மனைவியை அழ, அழ உதறிவிட்டு ஓடி வந்தேனே."

"இதிலேயே தெரிகிறது உங்கள் நேர்மை. தாலி கட்டியவளையே கைவிட்டு விட்டீர்கள். நான் எந்த மூலைக்கு?"

"ஐயோ, லதா!"

"உஸ்! கத்த வேண்டாம். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள். உங்களைத் தடுக்க வில்லை."

"என்ன? நிஜமாகவா?"

"நம்பிக்கை யில்லையா என் பேச்சில்? இதோ எழுதி வேண்டுமானாலும் கொடுத்து விடுகிறேன். என்னை விட்டால் போதும்."

செயலற்று நின்று விட்டார் நந்தகுமார். அப்புறம் விரைந்த லதா சில நிமிடங்களுக்குப் பிறகு ஒரு காகிதத்தைக் கொண்டு வந்து சிலையாக நிற்கும் நந்தகுமாரின் காலடியில் வீசியெறிந்தாள்.

"எடுத்துச் செல்லுங்கள். உங்கள் இக்குக்கே ஒரு நமஸ்காரம்."

கழுத்தை ஒரு இருப்புத் திருப்பிக்கொண்டு சிட்டென விரைந்து விட்டாள் லதா. விழி பிதுங்க அவள் செல்வதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்த நந்தகுமாருக்கு உணர்வு வர வெகு நேரம் பிடித்தது.

தீப்பற்றி எரிந்த உல்லாச வாழ்வுக்குப் பின்னே ஓர் உருவம் அன்புடன் நோக்கி ஆதரவுடன் அழைப்பதை உணர்ந்தார். மெய் சிலிர்த்தார். கணம்கூடத் தாமதியாமல் ஓடினார், தம் பழைய இல்லத்துக்கு.

'என்ன இருந்தாலும் கட்டியவள், கட்டியவள்தான். தேவர்களைக் காட்டி வைத்துத் திருமணம் புரிவதனால்தான் அதில் தூய்மையும், உள்ளன்பும், காதலும், கடமையும் பின்னிப் பிணைந்து நிற்கின்றனவா? இது வெறும் தாள் மணம்தானே. அதனால் காற்றில் பறந்துவிடுகின்றது போலும். என்னை உதறக் கொஞ்சத்தில் அனுசூயாவுக்கு மனம் வந்ததா? என் நல்வாழ்வைப் பணயம் வைக்கவேதானே விடுதலை தர இசைந்தாள்?

'நொடியில் காகிதத்தில் எழுதி வீசி விட்டாளே லதா? எத்தனை ஆணவம்? அழகின் அகம்பாவம் நிலைக்குமா? பாவம், அனுசூயா! அன்று பார்த்தும் அவளிடம் பேசாமல் ஏனோ திரும்பி விட்டேனே?'

வீட்டை அடைவதற்குள் எத்தனையோ எண்ணங்கள் ஈக்களாக மொய்த்தன. படபடத்த நெஞ்சுடன் வீட்டுக்குள் காலடி வைத்தவரை வரவேற்க அங்கு யாருமில்லை. பூட்டிய கதவின் கீழ் உட்கார்ந்திருந்த தோட்டக்காரன் எஜமானைக் கண்டதும் பாய்ந்தோடி வந்து கூறினான்:

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லீங்க. ஆசுபத்திரியிலே இருக்காங்க."

"எந்த ஆசுபத்திரியடா?" நெஞ்சடைக்க வினவினார் நந்தகுமார்.

"லலிதா நர்சிங் ஹோமுங்க. பெரியம்மாவும் அங்கேதான் இருக்காங்க." மேலே அவன் என்ன சொன்னானோ? எதுவும் அவர் செவியில் விழவில்லை. வந்த வேகத்தைப் போல் பன்மடங்கு வேகத்துடன் வைத்திய விடுதியை நோக்கி ஓடினார். அவரைக் கண்டதும் டாக்டர் லலிதாவின் நெற்றி சுருங்கியது.

"ஓ! நீங்கள்தான் டைரக்டர் நந்தகுமாரா? உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்து பத்து நிமிடமாகிறது. ஆனால்..."

"ஆனால் என்ன டாக்டர்? குழந்தை இறந்துவிட்டதா!"

"இல்லை! குழந்தை நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் தாயின் நிலைதான் கவலைக்கு இடமளிப்பதாக இருக்கிறது."

"ஐயோ! என்ன?"

வீரிட்டுக் கூவிய நந்தகுமாரைச் சமாதானப் படுத்தி அனுசூயாவின் அருகே அழைத்துச் சென்றாள். அனுசூயாவா அது? கிழிந்த நாராகக் கட்டிலோடு கட்டிலாகக் கிடந்தது ஓர் உருவம்.

"இங்கே பார், அனுசூயா! நான் வந்து விட்டேன்."

கண் விழித்துப் பார்த்த அனுசூயாவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. "வந்து விட்டீர்களா?"

"ஆமாம், அனுசூயா! வந்து விட்டேன். அந்தப் பாதாளச் சிறையிலிருந்து விடுபட்டு வந்து சேர்ந்துவிட்டேன். இனி உன்னை விட்டுப் போகமாட்டேன். அழாதே, அனுசூயா. இதோ பார் விடுதலைப் பத்திரம். இனி உனக்கு ஒரு துன்பமுமில்லை."

அவர் கையில் படபடத்த காகிதத்தைப் பார்த்தாள் அனுசூயா. உலர்ந்த உதடுகள் இளநகைபுரியத் தன்பக்கத்தில் கிடத்தியிருந்த சிசுவையும் கணவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டுச் சொன்னாள்:

"குழந்தையைப் பார்த்தீர்களா? இம்முறை தப்பிவிட்டது. நல்ல வேளையாக வந்து விட்டீர்கள். ஒரே ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்ற ஆவல் எப்படியோ பூர்த்தியாகி விட்டது. மாதம் ஒரு முறையாவது வந்து போகும்படி கேட்டேன். ஏனோ நீங்கள் வரவேயில்லை. அந்த வெள்ளிக்கிழமை, அக்கடைசி இரவின் நினைவின்பத்திலேயே நான் வாழ்ந்து விட்டேன் இதுவரை. குழந்தையும் பிழைத்து விட்டது. நீங்களும் வந்து விட்டீர்கள் அந்த ஈசுவரி என் அந்திய கால ஆசையைப் பூர்த்தி செய்து விட்டாள். பெண்ணாகப் பிறந்தால் லதா என்று பெயர் வைக்க நினைத்தேன். ஆணாகப் பிறந்து விட்டது. சின்னக் குமார் என்று அழைக்க ஆசை. வயதான காலத்தில் தாயைத் தவிக்க விடாதீர்கள். அவ்வளவுதான்."

அதற்குமேல் பேசவில்லை. தன்கடைசி ஆசை பூர்த்தியாகி விட்ட நிறைவில் நிம்மதியாகக் கண்களை மூடிவிட்டாள் அந்த மாதரசி. அவருடைய உயிரின் உயிருக்கு, உயிரளித்த உயிர் பறந்தோடி விட்டது. உயிரின் உயிரோ விரலைச் சப்பிக் கொண்டு சிரித்தது.

"ஐயோ, அனுசூயா! நானே உனக்குக் காலனாகி விட்டேனா?" மனைவியின் சடலத்தைக் கட்டிக் கொண்டு கதறினார் நந்தகுமார். காற்றிலே பறந்த விடுதலைப் பத்திரம் அவரை நோக்கிக் கைகொட்டிச் சிரித்தது.

பாலர் மலர்

11. நீருக்குள் நெருப்பு மலை

வீராங்கன் அதிக நேரம் கடல் சிலந்தியோடு திமிங்கிலங்கள் சண்டையிடுவதைப் பார்த்துக் கொண்டு நிற்கவில்லை. 'தப்பித்தோம் பிழைத்தோ'மென்று அந்த இடத்தை விட்டுப் புறப்பட நினைத்தான். அப்பொழுதுதான் அவனுக்குக் குமரிப் பவளத்தைப் பற்றிய நினைவு வந்தது. அவன் கையில் எடுத்த அந்தப் பவளம் அப்புறம் என்ன ஆயிற்று என்றே புரியவில்லை.



வீராங்கனுக்குத் தன் மேலேயே ஆத்திரம் உண்டாயிற்று. இத்தனை சிரமப்பட்டுப் பவளத்தைக் கைப்பற்றியும் கடைசியில் அதை அஜாக்கிரதையினால் நாம் தொலைத்துவிட்டோமே என்று வருந்தினான்.

வீராங்கன் சிறிது நேரம் யோசித்தான். 'அந்தக் குமரிப் பவளம் இங்குதான் எங்கேயாவது கிடக்க வேண்டும்' என்ற ஒரு நப்பாசை அவனுக்குஏற்பட்டது.

அவன் நினைத்தது வீண் போகவில்லை. இடிந்துபோன பவளச் சுவர்களிடையே எவ்விதத் தீங்கும் நேராமல் பளிச்சென்ற ஒளியை எழுப்பிக் கொண்டு பவளம் கிடந்தது. அதை எடுத்து ஆசையோடு கண்களில் ஒற்றிக் கொண்டான். அதைக் கையில் எடுக்கும் பொழுது முன்னைக் காட்டிலும் பன்மடங்கு பரவசம் அடைந்தான். அதன் அழகும் பிரகாசமும் பருமனும் அவனுக்கு எல்லை இல்லாத இன்பத்தை அளித்தன.

பின்பு அதை இடையில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு, மறைந்து மறைந்து திமிங்கிலங்களின் கண்களில் பட்டுவிடாமல், குமரி முத்து இருக்கின்ற குகையை நோக்கி நீந்தினான்.

பல நாழிகைநேரம் நீந்திய பிறகு எதிரே தகதகவென்று நெருப்பு எரிவதுபோல் தெரிந்தது. கார்த்திகை மாதத்தில் சொக்கப்பனை கொளுத்துவார்களே, அப்படி இருந்தது அது. இராட்சத நண்டுகள் கூறியபடி இதுதான் நெருப்பு மலை என்றும் அந்த மலையில்தான் குமரிமுத்து இருக்கவேண்டுமென்றும் வீராங்கன் தீர்மானித்துக் கொண்டான்.

வீராங்கனுக்கு வியப்பும், பயமும், பீதியும் மாறிமாறி ஏற்பட்டுக்கொண்டிருந்தன! நீருக்கும் நெருப்புக்கும் நேர் விரோதம். இது உலகம் அறிந்த உண்மை. ஆனால் இங்கு அதற்கு நேர் விரோதமாக இருக்கிறது. நீருக்குள் தீ ஜுவாலைகள் எரிந்து கொண்டிருக்கின்றன. நெருப்பு அணையவில்லை. நீரும் சூடேறவில்லை. எல்லாம் விந்தையாகவே இருக்

விஜயா-

கிறது! வீராங்கன் நெருப்பு மலையை நெருங்கி, அதன்மேல் காலெடுத்து வைக்கப் போனான். ஐயோ! அவ்வளவுதான். அவன் உடல் தகிக்க ஆரம்பித்தது. கால்கள் சுட்டன. சட்டென்று மலையைவிட்டு இப்பால்வந்தான். இப்பொழுது அவன் உடல் தகிக்கவில்லை. என்ன விசித்திரம்! இந்தக் கடல் உலகின் மர்மங்களை அவனால் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் அவனுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. குமரி முத்தை எடுக்கவே முடியாதோ என்று எண்ணியபொழுது அவனுக்கு அழுகையே வந்து விட்டது.

வீராங்கனின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. தீவிரமாகச் சிந்தித்தான். அவனுடைய கூர்மையான அறிவுக்குச் சில விஷயங்கள் புரியலாயின.

இந்த நெருப்பு மலைக்குள் இருக்கும் குகையில்தான் குமரி முத்து இருக்கிறது. அந்த முத்தை ஆயிரக்கணக்கான முத்துச் சிப்பிகள் பயபக்தியோடு பன்னெடுங்காலமாகப் பாதுகாத்து வருகின்றன. முத்தின் உயர்வையும் சிறப்பையும் தெரிந்திருந்த முத்துச் சிப்பிகள் எதிரிகள் யாரும் அதைக் கைப்பற்ற வருவார்கள் என்று எண்ணியே இப்படிப்பட்ட நெருப்பு மலைக்குள் அதை வைத்திருக்கின்றன. மனித அறிவுக்கு எட்டாத முறையில் ஒருவிதத் தீயை அந்தச் சிப்பிகள் கண்டு பிடித்தன. அந்தத் தீ நீரில் அணையாது. நீர் இல்லாவிட்டால் தான் அணைந்து போகும். தன் கீழே உள்ள பொருள்களை எரிக்காது. உருக்கவும் செய்யாது. ஆனால் பக்கத்தில் வரும் மிருகங்களையோ மற்றப் பொருள்களையோ அது அழித்து விடும். அந்தத் தீயை நிறுத்துவதற்குரிய வழி மலைக்குள் இருக்கும் முத்துச் சிப்பிகளுக்கு மட்டுந்தான் தெரியும்.

மலைக்குள் இருக்கும் குகையை அடைவதற்கு மலைமேல்தான் வழி இருந்தது. தீ அணைந்தால்தான் அந்த வழி தெரியும்! ஆனால் தீயை எப்படி அணைப்பது?

வீராங்கன் வெகுநேரம் யோசித்தான். நெருப்பை அணைப்பதற்குரிய மார்க்கம் அவனுக்குப் புலப்படவில்லை. அப்பொழுது சட்டென்று கயல்கன்னி கொடுத்த சங்கு மோதிரம் அவன் நினைவுக்கு வந்தது. 'ஆபத்துச் சமயத்தில் இது பயன்படும்' என்று கயல்கன்னி கூறியதும் அவன் ஞாபகத்துக்கு வந்தது.

இப்பொழுதும் ஆபத்துச் சமயம் தானே; உடனே மோதிரத்தைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, ''மோதிரமே! இந்த நெருப்பை அணைத்துக் குகைக்குள் செல்லும் வழியைக் காண்பிக்க வேண்டும்'' என்றான். பலமுறை இப்படிக் கூறினான். ஊஹூம்! ஒரு பயனும் இல்லை. தீ அணையவே இல்லை.

மோதிரம் சக்தி அற்ற மோதிரம் என்று அவன் நினைத்தான். தான் உபயோகிக்கும் முறை தவறானது என்பது அவனுக்குத் தெரியவில்லை. அதற்கு மேலும் அந்த மோதிரத்திடம் அவன் பொறுமையைக் காட்ட முடியவில்லை. அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. சக்தி இல்லாத, ஒன்றுக்கும் பயன்படாத மோதிரம் இருப்பதும் ஒன்றுதான், இல்லாமலிருப்பதும் ஒன்றுதான் என்று எண்ணித் தன் கையிலிருந்த மோதிரத்தை எதிரே இருந்த நெருப்பு மலையில் பலம் கொண்ட மட்டும் வீசி எறிந்தான். அது மலையின் உச்சியில்போய் விழுந்தது. அப்பொழுது ஒரு அதிசயம் நடந்தது.

மோதிரம் சென்ற வழியில் மட்டும் எரிந்து கொண்டிருந்த தீ அணைந்தது. ஒரு ஆள் நடந்து போவதற்கேற்ற வழி தென்பட்டது. வீராங்கனுக்கு ஏற்பட்ட குதூகலத்துக்கு ஒரு கங்கு கரை இல்லை. ஒன்றுக்கும் பயன்படாது என்று எண்ணி வீசி எறிந்த மோதிரம் எப்பேர்ப்பட்ட மகத்தான உதவியைச் செய்தது! இதனால் அந்த மோதிரத்தின் மேலும் அதைக் கொடுத்த கயல்கன்னியின் மேலும் அவனுக்கு அளவு கடந்த அன்பும் பக்தியும் உண்டாயின.

மோதிரம் காட்டிய வழியில் சென்று மலையின் உச்சியை அடைந்தான் வீராங்கன். அங்கே ஒரு கதவு தென்பட்டது. ஆனால் அதைத் திறக்க முடியவில்லை. உடனே தன் இடையில் பத்திரப்படுத்தி வைத்திருந்த குமரிப் பவளத்தை எடுத்தான். கதவருகே கொண்டு போனான். அடுத்த கணம் கதவு தானாகவே திறந்துகொண்டது. திறந்த கதவுக்குப் பின்னால் கீழே இறங்குவதற்குரிய வழி இருப்பது தெரிந்தது. வீராங்கன் அந்த வழியில் இறங்கினான். கதவு மூடிக்கொண்டது.

அந்தப் பாதை ஒருவர் கூட நடக்க முடியாதபடி அவ்வளவு குறுகலாக இருந்தது. பாதையின் இருபுறத்திலும் இருந்த சுவர்களில் கூர்மையான சங்குகள் பதிக்கப்பட்டிருந்தன. கொஞ்சம் அசைந்தாலும் அவை வீராங்கனின் உடலைப் பதம் பார்க்கத் தயாராய் இருந்தன. வீராங்கன் வெகு சாமர்த்தியமாக நடந்தான். சுரங்கவழி ஒருவாறாக முடிவடைந்தது.

அந்த இடத்தில் ஒரு பெரிய மண்டபம் இருந்தது. அதில் பெரிய பெரிய தூண்



சேத்தூர் கூத்தன்

களும் உயரமான மாடங்களும் அகலமான உட்காரும் மேடைகளும் காணப்பட்டன. வளைவு வளைவான விதானங்களில் பொடி முத்துக்கள் ஒரு வகைக் கடல் கொடியினால் தொடுக்கப்பட்டுச் சரஞ்சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

இவற்றைக் காணக்காண வீராங்கனுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. 'மனிதர்கள் கூட இப்படிப்பட்ட அபாரத்திறமையோடு மண்டபம் கட்டி அலங்கரித்ததில்லை. அப்படி இருக்க இந்த ஆழமான குமரிக் கடலில் இத்தனை சிறப்பு வாய்ந்த அரண்மனை போன்ற மண்டபத்தை யார் கட்டி இருப்பார்கள்? கடலில் உள்ள பிராணிகளால் இவ்வளவு கலை அழகோடு கட்டி இருக்க முடியுமா?' என்று வியந்தபடியே அந்த மண்டபத்தை அடங்காத ஆவலோடு பார்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தான்.

அப்படி அவன் சுற்றிச் சுற்றி வரும் பொழுதெல்லாம் அவனுடைய வலது கை அவனுடைய உடைவாளின் மேலேயே இருந்தது. எந்த நேரத்திலும் தனக்கு ஆபத்து வரலாம் என்ற நினைப்புத்தான் அதற்குக் காரணம்.

அவன் நினைத்தது போல் எந்த ஆபத்தும் நேரவில்லை. எதிரிகள் யாரும் இருப்பதாகவும் தெரியவில்லை. அது போலவே குமரி முத்தும் அங்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை முத்துக் குகை மாறி இருக்குமோ? இருக்காது. அப்படி மாறி இருக்க நியாயமே இல்லை. ஏனென்றால் குமரிமுத்து இருக்கும் குகைக்குரிய அடையாளம் அத்தனையும் சரியாக இருந்தது. அப்படி என்றால் முத்து எங்கே போயிருக்கும்? ஒரு வேளை வீராங்கனுக்கு முன்பே யாராவது வந்து அதை எடுத்துப் போய் இருப்பார்களோ?

'ஆகா! என்ன ஏமாற்றம்! இத்தனை சிரமப்பட்டு இவ்வளவு தூரம் வந்தது யாவும் வீண்தானா?' இப்படி எண்ணிக் கொண்டே பக்கத்திலிருந்த ஒரு தூணில் சாய்ந்து கொண்டு அதிலிருந்த சங்கு ஒன்றைப் பிடித்து எரிச்சலோடு அசைத்தான். உடனே 'கிரீச்' சென்று ஒரு சத்தம் கேட்டது. வீராங்கன் அடித்துப் பிடித்துக் கொண்டு அப்பால் நகர்ந்தான். அதே சமயத்தில் அந்தப் பெரிய தூணும் நகர்ந்துபோய்ச் சிறிது தூரத்தில் நின்றது. அந்தத் தூண் முதலில் நின்ற இடத்தில் கீழ் நோக்கிச் செல்லும் ஒரு வழி தென்பட்டது. அதில் இருந்த படிக்கட்டுகள் யாவும் முத்தாலேயே இழைக்கப்பட்டிருந்தன. வீராங்கன் உண்மையிலேயே மிகுந்த அதிர்ஷ்டக்காரன்தான் போலும்!

அந்த வழியில் இறங்கிச் செல்லலாமா, வேண்டாமா என்று ஒருகணம் யோசித்தான் வீராங்கன். பிறகு கத்தியை உருவிக் கையில் பிடித்துக் கொண்டு அடிமேல் அடி வைத்து அந்த வழியில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். வீராங்கன் கீழே இறங்கிச் சென்றதும் தூண் பழைய இடத்துக்கே வந்து அந்த இடத்தை அடைத்துக் கொண்டு நின்றது.

வீராங்கன் படிகளையெல்லாம் தாண்டி முன்போலவே ஒரு விஸ்தாரமான இடத்துக்கு வந்து சேர்ந்தான். இந்த மண்டபம் முன் மண்டபத்தைவிட அளவில் கொஞ்சம் சிறியதாக இருந்தது. அதைப் போலவே அலங்கார ஆடம்பரங்களும் அவ்வளவாக இல்லை. சாதாரணக் கிளிஞ்சல்கள்தான் தூணிலும் சுவரிலும் காணப்பட்டன.

வீராங்கனுக்கு ஒரு சந்தேகம் புதிதாக முளைத்தது. 'குமரி முத்துக்குக் காவலாக இருக்கும் முத்துச் சிப்பிகள் இப்படிப்பட்ட தந்திரங்களைக் கையாண்டு ஆளைத் தீர்த்துக் கட்டப் பார்க்கின்றனவோ' என்பதுதான் அந்தப் புதிய சந்தேகம்.


வீராங்கனுக்கு இந்த மண்டபத்தில் முத்து இருக்குமென்ற நம்பிக்கை சிறிதும் இல்லை. எவ்வளவோ அழகாக விளங்கும் முதல் மண்டபத்திலேயே இல்லாத முத்து இந்த அவலட்சண மண்டபத்திலா இருக்கப் போகிறது? அவன் இப்படி நினைத்ததும் வீண் போகவில்லை. அந்த மண்டபத்தை அணுஅணுவாக ஆராய்ந்து பார்த்தும் குமரி முத்து கண்களுக்குப் புலப்படவில்லை.

வீராங்கனுக்குச் சோர்வு தட்டியது. 'இந்த மண்டபத்துக்குக் கீழே இன்னொரு மண்டபம் இருக்குமோ' என்று எண்ணியபடியே பக்கத்திலிருந்த சுவரின் மேல் சாய்ந்தான். அவன் சாய்ந்ததுதான் தாமதம், அந்தச் சுவரின் ஒரு பகுதி சரசரவென்று கீழே சென்று மறைந்தது. எதிரே ஒரு ஆள் நுழையக் கூடிய அளவுக்குப் பாதை காணப்பட்டது. அந்தப் பாதை படிப்படியாகக் கீழே சென்று மறைந்தது.

வீராங்கன் ஒரு பெருமூச்சு விட்டபடியே அந்தச் சுரங்கப் பாதையைப் பார்த்தான். அது ஒரே கும்மிருட்டாக இருந்தது. 'இந்தச் சுரங்கத்திலும் என்ன இருக்கிறது என்று பார்த்து விடுவோமே' என்று நினைத்துக் கொண்டு சுரங்கப் பாதையில் இறங்கினான்.

சிறிது தூரம் நடந்த பிறகு, "ஜல... ஜலங்..." என்ற ஒரு விசித்திர ஓசை வெகு தூரத்தில் கேட்டது.

அந்த ஓசை மகா தைரியசாலியான வீராங்களை வெகுநேரம் யோசிக்க வைத்தது. அவனுடைய ஒவ்வொரு உரோமக் கால்களும் குத்திட்டு நின்றன. உடலின் உள்பகுதியில் ஒருவிதப் படபடப்பு தோன்றியது. இருந்தும் அந்த வீரச் சிறுவன் பின்வாங்கவில்லை. அந்தப் பயங்கரப் பாதையில் கையில் பிடித்த கத்தியோடு கம்பீரமாக அவன் நடந்து கொண்டுதான் இருந்தான். (தொடரும்)



அத்தியாயம் 21

தேவையற்ற உறுப்பு

கி.ராஜேந்திரன்

மரத்தின் மறைவில் நின்று, மணியும் விமலாவும் பேசுவதைக் கேட்டு, வீட்டுக்குத் திரும்பிய நடராஜனின் உள்ளம் பலவித உணர்ச்சிகளால் கொந்தளித்துக் கொண்டிருந்தது. விமலா குற்றமற்றவள் என்பதை உணர்ந்து கொண்டான். அவளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டதற்காகத் தன்னை நொந்தான். இருப்பினும் அவள்



பொங்கிவரும் பெருநிலவு

பணிசேகரனின் காலில் விழுந்து, 'எங்களுக்குக் குறுக்கே வராதீர்கள்' என்று கெஞ்சியது அவனுக்குப் பிடிக்கவில்லை; அருவருப்பைத் தந்தது. ''அந்த அயோக்கியனுடைய காலில் இவள் எதற்காக விழுந்து கெஞ்ச வேண்டும்?'' அப்படிக் கெஞ்சும்படி வைத்துக் கொண்ட மணியின் மீது ஆத்திரம் உண்டாயிற்று நடராஜனுக்கு. கள்ளங் கபடமற்ற டெய்ஸின் மனத்தைக் கெடுக்கப் பார்க்கும் கயவன்!

மிகுந்த மன வேதனையுடன் வீட்டினுள் நுழைந்த அவனுக்கு அந்த வேதனை சற்றுக் குறையக் கூடிய சந்தர்ப்பம் அமைந்தது.

டைரக்டர் சுகுமாரன் வந்திருந்தார். அவரும் டாக்டர் ராமலிங்கமும் பேசிக்கொண்டிருந்தார்கள். ''உனக்காக அப்பா ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று. கோபித்துக்கொள்ளாதே!'' என்று கேட்டுக் கொண்டார் சுகுமாரன்.

''அதனாலென்ன? பரவாயில்லை. ஏதாவது முக்கியகாரணம் இல்லாவிட்டால் வராமலிருப்பீர்களா?''

''காரணம் இருக்கிறது. என் மகனுக்கு இரண்டுநாட்களாக வயிற்று வலி. நேற்று அது மிக அதிகமாகி விட்டது. அதனால்தான் நான் வரவில்லை. வேலை ஒன்றுமே எனக்கு ஓடவில்லை. வழக்கமான காரியங்களையெல்லாம் மணிசேகரன்தான் கவனித்துக் கொள்கிறான். சரியான ஆளாகப் பார்த்து அப்பா என்னிடம் அனுப்பி வைத்தார். ரொம்பச் சௌகரியமாய் இருக்கிறது.''

அவருடன் பேசுவதில் சற்று முன் நடந்த சம்பவங்களைச் சிறிது மறந்திருந்தான் நடராஜன். இப்போது மணியைப் பற்றியே அவர் பேசவும் அவன் முகம் விகாரமடைந்தது.

''அது போகட்டும். பையனுக்கு என்ன? அதைச் சொல்லுங்கள்.''

''நேற்றைக்கு முன்தினம் வலி ஆரம்பமாயிற்று. மலச்சிக்கல் என்று நினைத்து விளக்கெண்ணெய் கொடுத்தாள் என் மனைவி. அதில் வலி நிற்கவில்லை நேற்று மிகவும் அதிகமாகி விட்டது. இன்றும் அப்படித்தான் துடித்துக் கொண்டிருக்கிறான். உன்னை அழைத்துக் கொண்டு போய்க் காட்டலாம் என்று நினைத்துக்கொண்டுதான் வந்தேன்.''

''என்னால் முடிந்ததையெல்லாம் செய்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான் நடராஜன்.

வீட்டை அவர்கள் நெருங்கும் போதே உள்ளேயிருந்து முனகல் சத்தம் கேட்டது. கட்டிலில் ஏழு வயதுச் சிறுவன் ஒருவன் படுத்திருந்தான். அவன் அருகே கவலை தோய்ந்த முகத்

துடன் சுகுமாரனின் மனைவி சிவகாமி உட்கார்ந்திருந்தாள். தன் கணவனும் டாக்டர் நடராஜனும் வருவதைப் பார்த்ததும் சட்டென்று சிவகாமி மரியாதையாக எழுந்து நின்றாள்.

"மோகன்! டாக்டர் மாமாவை அழைத்து வந்திருக்கிறேன். எல்லாம் சீக்கிரம் சரியாகி விடும்" என்றார் சுகுமாரன். வெளிறிப் போன அந்தச் சிறுவனின் முகத்தில் வேதனையுடன் கூடிய ஒரு புன்னகை அரும்பியது.

நாடியைப் பிடித்துப் பார்த்தான் நடராஜன். அதன் வேகம் அதிகமாக இருப்பதை உணர்ந்தான். நாக்கின்மீது பழுப்பு நிறப் பாசி படர்ந்தது போல் இருப்பதைக் கவனித்தான்.

"முதலில் வலி கண்டபோது வாந்தி எடுத்தானா?"

"ஆமாம்."

"எங்கே அப்பா வலிக்கிறது?"

"முதலில் வயிறு முழுவதுமே வலித்தது. இப்போது இந்த இடத்தில் மட்டும் வலிக்கிறது" என்று சொல்லி அடி வயிற்றின் வலப் புறத்தைச் சுட்டிக் காட்டினான் மோகன்.

அவன் அப்படிக் காட்டிய இடத்தில் இலேசாக விரல்களால் அழுத்திப் பார்த்தான் நடராஜன். வலியினால் மோகன் முகத்தைச் சுளுக்கிக் கொள்வதைக் கவனித்தான். அனுபவம் மிகுந்த அவன் கைகளுக்கு இடப்புறத்தை விட வலப் புற வயிறு சற்றுக் கடினமாகவே இருப்பதாகத் தோன்றியது. தர்மாமீட்டர் 101 டிகிரி சுரம் இருப்பதைக் காட்டியது.

"நீங்கள் விளக்கெண்ணெய் கொடுத்திருக்கக் கூடாது. வயிற்று வலிக்குக் காரணம் எத்தனையோ இருக்கலாம். உடனே மலச்சிக்கல் என்று தீர்மானித்து விளக்கெண்ணெய் கொடுப்பதின் மூலம் நிலைமை மோசமாகிவிடக் கூடும். டாக்டரை வலி கண்ட உடனே அழைக்காதது தவறு. அதைவிட மிகப் பெரிய தவறு, நீங்களே டாக்டராகி வைத்தியம் செய்ய முற்பட்டது!"

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பயமாயிருக்கிறதே டாக்டர்! இவனுக்கு என்ன இப்போது?" என்றாள் சிவகாமி.

"பயப்படும்படியாக ஒன்றுமில்லை, அம்மா! நர்ஸிங் ஹோமுக்கு இப்போதே இவனை அழைத்துச் செல்கிறேன். நாளைக் காலையில் ஆப்பரேஷன் செய்யும்படி நேரலாம்."

"ஆப்பரேஷனா? வேண்டாம் டாக்டர்! தயவு செய்து வேண்டாம்! என்னுடைய ஒரே மகன்!" என்று கண்ணீர் உகுத்தாள் சிவகாமி. சுகுமாரன் அவள் அருகில் சென்று சமாதானப்படுத்தினார்.

"ஒரு காலத்தில் சஸ்திர சிகிச்சை என்றாலே குலை நடுக்கமாக இருந்தது உண்மைதான், அம்மா. ஆனால் இப்போதெல்லாம் பலவிதங்களிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். தேவையான சமயத்தில் சஸ்திர சிகிச்சை செய்யாவிட்டால் எம தூதர்களை வரவழைத்தவர்களாவோம்" என்றான் நடராஜன்.

புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் சிவகாமி.

* * *

நர்ஸிங் ஹோமில் அப்போதுதான் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் மோகனைப் பற்றி நர்ஸ் பவானிக்குக் கட்டளைகள் அளித்துக் கொண்டிருந்தான் நடராஜன். "வயிற்றுப் பாகத்தை எக்ஸ்ரே எடுக்க வேண்டும். சாய்மான நிலையில் அவனை இருக்கச் செய். படுக்க வைக்காதே. சுத்தமான வெந்நீரை ஆற வைத்துக் கொடு. வேறு ஆகாரம் ஒன்றுமே வேண்டாம். வலிக்கு இதமாக இருக்க வெந்நீர்ப்பையை வயிற்றில் வை. வலியில் தூங்காமல் கஷ்டப்பட்டால் என்னிடம் வந்து சொல்லு. வலி குறைய 'மார்பின்' ஊசி போடுகிறேன். ரத்தத்தில் உள்ள வெள்ளணுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட உடனே ஏற்பாடு செய். நாளைக் காலையில் ஆப்பரேஷன் செய்ய நேரிடலாம்." அவன் சொன்னதை யெல்லாம் குறித்துக் கொண்டாள் பவானி.

அருகே நின்று கொண்டிருந்த சுகுமாரன், "என்னவாக இருக்கும் டாக்டர்?" என்று கேட்டார்.

"அநேகமாக 'அப்பெண்டிஸைட்டிஸ்' (**Appendicitis**) தான். சிறு குடலும் பெருங் குடலும் சேரும் இடத்துக்கு அருகே இருக்கும் புழுப் போன்ற இந்த உறுப்பில் ஏதோ உணவுப் பொருள் சிக்கிக்கொண்டு விஷக்கிருமிகள் ஏராளமாக உற்பத்தியாகி, சீழ் கோத்துக் கொண்டது. அதனால் வீங்கிப்போய் வலியும் கொடுக்கிறது. எக்ஸ்ரே படத்தைப் பார்த்ததும் நிச்சயமாக என்னவென்று சொல்லி விடலாம்."

"அப்பெண்டிஸைட்டிஸ் என்று தோன்றினால் உடனே ஆப்பரேஷன் செய்து விடலாமே? ஒருவேளை வலிக்குக் காரணம் அது இல்லை என்று தோன்றினாலும் அப்பெண்டிக்ஸை எடுத்து விடலாமே? மனித உடலுக்குத் தேவைப்படாத ஒரு உறுப்புத்தானே அது?"

"வாஸ்தவம்தான், இந்த உடலின் உள்ளே இருக்கும் ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை இருக்கிறது.

ஆனால் ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் அனாவசியமாக இருக்கும் உறுப்பு இந்த அப்பெண்டிக்ஸ் ஒன்றுதான். அதை எடுத்து விடுவதால் குற்றம் ஒன்றும் இல்லை. இருந்த போதிலும் வயிற்று வலி என்றதுமே உடலைக் கிழிப்பவன் டாக்டராக இருக்கமுடியாது. கசாப்புக் கடையில் இருக்க வேண்டியவன்! வலியின் காரணத்தைச் சந்தேகமற நிச்சயம் செய்து கொண்டே சஸ்திர சிகிச்சையைத் தொடங்க வேண்டும். அவசரப்பட்டுச் செய்யக் கூடிய காரியம் அல்ல'' என்றான் நடராஜன்.

* * *

மறுநாள் காலையில் எக்ஸ்ரே படத்தைப் பார்த்ததும், ரத்தத்தில் வெள்ளணுக்களின் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதை அறிந்ததும், தான் ஊகித்தது சரிதான் என்று நிச்சயப்படுத்திக் கொண்டான் நடராஜன். அவனுக்கு உதவ வந்திருந்தார் தகப்பனார் ராமலிங்கம். மோகனை அவர் பரிசோதித்து விட்டு அப்பெண்டிக்ஸ் வெடித்து விட்டதாகத் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

அதற்குள் நிர்மலா ஆப்பரேஷன் தியேட்டரில் எல்லாம் தயாராக இருப்பதாகச் சொன்னாள். தங்கள் கரங்களைச் சுத்தமாகச் சோப்புப் போட்டுக் கழுவிக் கொண்டார்கள் தந்தையும் மகனும். கிருமிகள் அற்ற சுத்தமான உடைகளை அணிந்திருந்தார்கள். நிர்மலா நடராஜனிடம் கைகளில் அணிய ரப்பர் உறைகளை நீட்டினாள். அந்த இக்கட்டான நிலையிலும் கூட அவளது நயனங்களின் அழகை அனுபவித்து ரசிக்காமல் இருக்க முடியவில்லை நடராஜனால். அவள் விழிகளின் ஆழத்தை அளக்க முயற்சி செய்துகொண்டே அந்த ரப்பர் உறைகளைக் கைகளில் அணிந்து கொண்டான் நடராஜன். 'சதக்' என்ற ஒலியுடன் தோலோடு சேர்த்து ஒட்டியது போல் கைகளைப் பற்றிக் கொண்டன அவை. அவனுடைய முகத்தைக் கண்களுக்குக் கீழே துணியினால் மறைத்துப் பின்புறத்தில் முடிந்து விட்டாள் நிர்மலா. அந்தச் செய்கையின் மூலம் அவன் கழுத்தைத் தீண்டின, அவளுடைய மென்மையான விரல்கள். இனந்தெரியாத ஒரு இன்ப உணர்ச்சியை அப்போது அனுபவித்து மகிழ்ந்தான் நடராஜன்.



மயக்க மருந்தை மூச்சுக் காற்றுடன் உள்ளே செலுத்திக் கொண்டிருக்கிறார் டாக்டர் ராமலிங்கம். நர்ஸ் பவானி சிகிச்சைக்குத் தேவையான ஆயுதங்களைச் சீராக எடுத்துத் தயாராக வைத்துக் கொள்கிறாள். மோகனின் வயிற்றுப் பாகம் சுத்தமாகக் கழுவப்பட்டிருக்கிறது. அதன் மீது ஒரு கிருமிநாசினியைத் தடவுகிறாள் நிர்மலா.

பவானி எடுத்துக் கொடுத்த கூரிய கத்தியினால் அடிவயிற்றின் வலப்புறத்தில் சாய்ந்த நேர்கோடாக நான்கு அங்குல நீளமுள்ள ஒரு கீறலைப் போடுகிறான் நடராஜன். அந்த ஒரே கீறலின் மூலம் மேல் தோலும் அடியே இருக்கும் தசைகளும் அறுக்கப்படுகின்றன. அடுத்தாற்போல் பவானி கொடுத்த இடுக்கிகளால் வெட்டிய இடத்தை அகலப் பிரித்து வைத்துப் பொருத்துகிறான். வயிற்றில் தென்படும் திரவத்திலிருந்து ஒருவிதத் துர்நாற்றம் வருகிறது. ராமலிங்கத்தைப் பார்த்துத் தலையை ஆட்டுகிறான் நடராஜன். ''நீங்கள் சொன்னது சரிதான். அப்பெண்டிக்ஸ் வெடித்துச் சீழ் வெளிப்பட்டு விட்டது'' என்பதை அந்தச் செயலின் மூலம் தெரியப்படுத்துகிறான். மிக மோசமான நிலைதான். சிகிச்சை நடக்கும் போது அந்தச் சீழும் அதில் உள்ள விஷக் கிருமிகளும் வயிற்றின் மற்றப் பாகங்களுக்குப் பரவி விடாமல் இருக்க வேண்டியது மிக அவசியம். அதற்காக வெதுவெதுப்பான உப்பு ஜலத்தில் தோய்த்துப் பிழிந்தெடுக்கப்பட்ட துணியைச் சிகிச்சை நடக்கப் போகும் இடத்தைச் சுற்றிலும் இரண்டு மூன்று இடங்களில் வைக்கிறான்.

இப்போது அப்பெண்டிக்ஸ் தெளிவாகத் தெரிகிறது. சிறு குடலும் பெரு குடலும் இணைந்திருக்கும் பகுதிக்கு அருகாமையில் பெரு குடலிலிருந்து கிளம்புகிறது அது.

சாதாரணமாக ஒரு பென்சில் அளவு கனமுள்ளதாகவும், ஐந்து அல்லது ஆறு அங்குல நீளமுள்ளதாகவும் இருக்க வேண்டிய இந்த உறுப்பு இப்போது அதைவிடப் பெரிதாக இருக்கிறது. இதை விடப் பெரிதாக இருந்திருக்க வேண்டும் என்றும் அது வெடித்துச் சீழ் வெளிப்பட்டு விட்டதால் பருமன் ஓரளவு குறைந்திருக்கிறது என்றும் புரிந்து கொண்டான் நடராஜன்.

அப்பெண்டிக்ஸுடன் இணைந்திருக்கும் ஜவ்வு போன்ற உறுப்பைச் சாமணத்தால் நிதானமாகப் பிரித்து விடுகிறான். அப்பெண்டிக்ஸையும் அது பெருங் குடலுடன் இணைந்திருக்கும் பகுதியையும் மேலே இழுக்கிறான். உடலுக்கு வெளியே அவை வருகின்றன. இடுக்கிகளின் உதவியால் இழுத்துப் பிடித்து, அப்பெண்டிக்ஸின் அடிப்பாகத்தை ஒரு நூலினால் இறுகக் கட்டுகிறான். கங்காருவின் குடலைப் பதப்படுத்திச் செய்யப்பட்ட இந்த நூலை முடிச்சுக்கு அருகே கத்தரித்து அதிகமாக இருக்கும் நூலை எடுத்து எறிந்து விடுகிறான். பின்னர் முடிச்சுக்கு மிக அருகே ஒரு கூரிய கத்தியினால் வெட்டி அப்பெண்டிக்ஸை எடுத்து வெளியே எறிகிறான். வெட்டிய இடத்தில் சிறிது கார்பாலிக அமிலத்தைத் தடவுகிறான். முன்பு பிரித்து எடுத்த ஜவ்வு போன்ற உறுப்பை இப்போது மீண்டும் சீர் செய்து வைத்துத் தைக்கிறான். முதலில் வயிற்றினுள்ளே வைத்த துணிகளையெல்லாம் எடுத்து விடுகிறான்.

சிறிது நிமிர்ந்து நிற்கிறான் நடராஜன். அவன் நெற்றியில் இருக்கும் வியர்வைத் துளிகளை ஒரு துணியினால் மெல்லத் துடைக்கிறாள் நிர்மலா. மீண்டும் சிகிச்சையைத் தொடர்கிறான்.

ரப்பர்க் குழாயினால் மூடப்பட்டுள்ள உப்பு நீர்த் திரியின் ஒரு முனையை வயிற்றினுள் வைக்கிறான். பிறகு முதலில் போட்ட கிறலைக் கங்காருவின் குடலிலிருந்து செய்யப்பட்ட 'கேட் கட்' என்ற நூலினால் தைக்கிறான் நடராஜன். அதற்குள்ளாக ஆயுதங்களையும் துணிகளையும் எண்ணிப் பார்க்கிறாள் நிர்மலா. சிகிச்சை ஆரம்பமாவதற்கு முன்னும் இப்போதும் எண்ணிக்கை ஒரே மாதிரியாக இருக்கிறது. நோயாளியின் உடலுக்குள் தவறிப் போய் ஏதாவது மாட்டிக் கொண்டு, உயிருக்கே ஆபத்து விளைவிக்காமல் இருக்க இந்த எண்ணிக்கை!

வயிற்றில் வைக்கப்பட்டிருக்கும் அந்த ரப்பர்க் குழாய் மூலமாக உள்ளே இருக்கக் கூடிய துர் நீரெல்லாம் வெளியேறி விடும். சுமார் நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குப் பிறகு இந்தக் குழாயை அகற்றி விடலாம்.

முன்பு மயக்க மருந்தைச் செலுத்தியது போலவே இப்போது பிராண வாயுவை உள்ளே செலுத்துகிறார் ராமலிங்கம். சுவாசம் சிறிது தடைப்படுவதாகத் தோன்றவே, மூச்சு விடும் வேகத்தை அதிகப்படுத்தப் பிராணவாயுடன் சிறிது கரியமிலவாயுவும் சேர்ந்தே செல்கிறது.

சிகிச்சை ஆரம்பித்துச் சுமார் ஒரு மணி நேரம் கழித்து நடராஜன் வெளியே வந்தான். "இன்னும் இரண்டு நாட்களுக்கு மோகனுக்குச் சுத்தமான நீரில் சிறிது எலுமிச்சம் பழ ரசத்தைக் கலந்து கொடு. வேறு ஒன்றும் வேண்டாம். தினம் மூன்று பெனிஸிலின் ஊசியும் போட வேண்டும்" என்று பவானிக்குக் கட்டளை இட்டான்.

இந்தச் சமயத்தில் நிர்மலா ஒரே ஓட்டமாக ஓடி வந்தாள். பயத்தினால் உடல் பதற, "டாக்டர்! உங்கள் அப்பாவுக்கு மார்பை ரொம்ப வலிக்கின்றதாம். ஆப்பரேஷன் தியேட்டரிலேயே உட்கார்ந்து விட்டார். உங்களை உடனே வரச் சொன்னார்" என்றாள்.

அத்தியாயம் 22

சந்தேகப் பேய்

ஒரு பெரிய 'நா'வுக்குப் பக்கத்தில் 'தன்' 'ட்டிய' 'டக' என்ற எழுத்துக்களும் அதன் அருகே நிலையம் என்ற வார்த்தையும் எழுதப்பட்டு ஒரு போர்டு அந்த வீட்டின் வாசலில் தொங்கியது. 'நா'வுடன் சேர்த்து வாசித்தால் **'நாதன் நாட்டிய நாடக நிலையம்'** என்பது தெளிவாகும். அந்த வீட்டின் வாசலில் சேகரின் மோட்டார் நின்று கொண்டிருந்தது. உள்ளே நாதனிடம் தன் தர்மசங்கடமான நிலையை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தான் சேகர்.

"எப்படியாவது இந்தப் பெண்ணுக்கு நீங்கள் ஒரு 'சான்ஸ்' கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஹீரோயின் வேஷமா போடப் போகிறீர்கள்? ஏதோ அவளும் மேடைக்கு அலங்காரமாக வந்து நின்று விட்டுப் போகிறாள்."

"நேரில் பார்த்து விட்டுச் சொல்கிறேன். போகலாம், வாருங்கள்" என்று எழுந்தார் நாதன்; நாட்டிய நாடக நிலைய அதிபரான வைத்தியநாதன்.

இருவரும் வாசலில் இருந்த சேகருடைய காரில் ஏறிக்கொண்டு மல்லிகாவைக் காண்பதற்குச் சென்றார்கள்.

புத்தாடை உடுத்தி அவர்களை வரவேற்கத் தயாராக இருந்த மல்லிகாவை மேலும் கீழுமாகப் பார்த்தார் நாதன். தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவளிடம் சில கேள்விகள் கேட்டார்.

''நடித்துப் பழக்கம் உண்டா ?''

''இல்லை.''

''நாட்டியம் தெரியுமா?''

''தெரியாது.''

''பாடவாவது வருமா ?''

'' வராது ''

'' எந்த ஊர் ?''

'' செண்பகபுரம் கிராமம்.''

நாதன் முகவாயைத் தடவிக் கொண்டே உச்சி முகட்டைப் பார்த்தார். பின்னர் குனிந்து தரையை நோக்கினர். ஜன்னலுக்கு வெளியே தெரிந்த சாலையில் ஓடும் வண்டிகளைக் கண் கொட்டாமல் சிறிது நேரம் பார்த்தார். கடைசியில் சேகரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினர்.

'' அதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருந்தால் உங்களிடம் ஏன் ஸார் வருகிறோம்? நீங்கள்தான் அவனுக்கு எல்லாம் சொல்லித் தர வேண்டும். உங்களிடம் இரண்டு வாரங்கள் பழகினல் போதாதா? உணர்ச்சியற்ற மரக்கட்டையைக் கூடப் பார்ப்போர் உள்ளம் நெகிழ்ந்து உருகும்படி அபாரமாக நடிக்கச் செய்து, விடுவீர்களே ?''

அந்தப் புகழ்ச்சியில் மகிழ்ந்து புகையிலையுடன் வெற்றிலை போட்டதால் காவி படிந்த பற்கள் வெளியே தெரியும் படி அசட்டுச் சிரிப்பு சிரித்தார் நாதன்.

'' நாளைக்குக் கம்பெனிக்கு அழைத்து வாருங்கள், பார்க்கலாம். போய் வருகிறேன் '' என்று சொல்லி விட்டு எழுந்தார். எழுந்திருக்கும் போது வேண்டுமென்றே தம் கைக் குட்டையை நாற்காலிக்குஅடியில் போட்டுவிட்டு எழுந்தார். வாசலுக்குச் சென்று, நின்று கொண்டிருந்த காரில் ஏறிக்கொண்டார். சிறிது நேரத்தில் சேகர் அவருடன் வந்து சேர்ந்து கொண்டான். காரை அவன் கிளப்பியதும், '' அடடா! கைக்குட்டையை அங்கேயே போட்டு விட்டேன் போலிருக்கிறது. சற்றுஇருங்கள்.எடுத்து வந்து விடுகிறேன் '' என்ருர் நாதன்.

''ஏன்? நானே எடுத்து வருகிறேன். எங்கே வைத்திருக்கிறீர்கள் ?''

''சேச்சே! உங்களுக்கு அந்தச் சிரமம் கொடுப்பேனு, என்ன ?'' என்று சொல்லிக் கொண்டே விரைவாக நடந்தார் நாதன். சேகர் தயங்கினன்.

மல்லிகாவின் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார் வைத்தியநாதன்.

' அவர் எதற்காகத் திரும்பி வந்திருக்கிருர் ?' என்று மல்லிகா யோசிக்கையி





லேயே, "கைக்குட்டையை இங்கே போட்டு விட்டேன். இதோ நாற்காலிக்கு அடியில் இருக்கிறது" என்றார்.

கைக்குட்டையை நாற்காலிக்கு அடியிலிருந்து எடுத்துக் கொண்டே, "அடி, அசட்டுப் பெண்ணே! சேகர் உன்னை ஏமாற்றுகிறான் என்று இன்னுமா உனக்குத் தெரியவில்லை? போய்விடு! உன் கிராமத்துக்கே போய்ச் சௌக்கியமாக இரு. நகரத்திலே ஒரே பொய்யும் பித்தலாட்டமும்தான். உன் வாழ்வைப் பாழடித்துக் கொள்ளாதே!" என்றார் நாதன்.

உண்மையில் அவர் கைக்குட்டையைத் தேடி வரவில்லை என்றும், தன்னை எச்சரிக்கவே வந்தார் என்றும் மல்லிகாவுக்குத் தெரிந்து போயிற்று. அவரிடம் விவரம் கேட்டு விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளுமுன் சேகர் அறைக்குள் வந்து விட்டான். "நாம் போகலாமா? நேரமாகிறது" என்று சொல்லிக் கொண்டே நாதன் கையைப்பற்றி, இழுக்க மாட்டாத குறையாக அழைத்துச் சென்றான்.

* * *

'சேகர் என் மீது அளவற்ற அன்பு வைத்திருக்கிறார். சேகர் என்னை ஏமாற்றவே மாட்டார். அவர் என்னை எதற்காக ஏமாற்ற வேண்டும்? அதற்கு அவசியமே இல்லையே?'

இப்படி மல்லிகா தனக்குத்தானே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டாள். சமாதானமடைய முயன்றாள். ஆனால் எங்கோ ஒரு மூலையில் நாதன் போட்ட சந்தேக விதை நன்கு ஊன்றிவிட்டது. முளை விட்டுத் தளிர்த்தது.

அதற்கு உரமிட்டுத் தண்ணீர் விட்டு வளர்க்கச் சேகரின் நடத்தையும் பேச்சும் உதவின. நாதனிடம் அவளைத் தனியே பேச விடுவதில்லை. அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போதெல்லாம் பின்னோடு சேகரும் நிழல்



போல் தொடர்ந்தான். நாதன் நாட்டிய நாடகநிலையத்துக்குமல்லிகாவைஅவனே தனது காரில் அழைத்துச் செல்வான். அவனே திரும்பக் கொண்டு போயும் விடுவான். திருமணத்தைப்பற்றிப் பேச் செடுத்தால், 'அதற்கு இப்போதென்ன அவசரம்? அப்புறமாகப் பேசிக்கொள்ள லாம்' என்று தட்டிக் கழிப்பான்.

நடிப்புப் பயிற்சியும் நடனப் பயிற்சி யும் தினந்தோறும் சரிவர நடந்து வந்தன. பாட்டுப் பயிற்சியும் முதலில் அளிக்க ஏற்பாடு செய்தார்கள். பின்னர் அதைக் கைவிட்டார்கள். குரல் நன்றாக அமையவில்லை. அவசியம் ஏற்படுமானால் இரவல் குரல் இருக்கவே இருக்கிறது.

நாட்டிய நிலையத்துக்குப் பயிற்சிக் காகப் போகும்போது எப்படியாவது நாதனை இரண்டு நிமிஷங்கள் தனியாகச் சந்தித்து அன்று அவர் கூறிய மொழி களின் மர்மம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று துடி யாகத் துடித்தாள் மல்லிகா. அந்த எண்ணம் நிறைவேறாமல் கவனமாகப் பார்த்துக் கொண்டான் சேகர்.

* * *

"மல்லிகா! நீ மேடையின் மீது தோன்றப் போகிறாய்" என்று சொல் லிக் கொண்டே வந்தான் சேகர்.

அவள் தங்கியிருந்த ஹோட்டலின் கூரைமீது அமைக்கப்பட்டிருந்த தோட் டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள் மல்லிகா. "நிஜமாகவா! என்னால் நம்பவே முடியவில்லையே?"

"இந்தச் சேகரை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? நான் ஒரு காரியத்தை நினைத்து அது நடந்த தில்லை என்ற பேச்சே கிடையாது!"

"எப்படி அதைச் சாதித்தீர்கள்?"

"வைத்தியநாதன் விட்டுக் கொடுக் காமல்தான் பேசினான். 'பயிற்சி போதாது' என்றான். நான் விடாப் பிடியாக 'நீ அரங்கேற்றப் போகும் இந்தப் புதிய நாடகத்தில் அவளுக்குக் கதாநாயகி பாகத்தைக் கொடுத்தால் கொடு. இல்லாவிட்டால் நிலையத்தி லிருந்தே அவளை விலகிக் கொள்ளச் சொல்கிறேன்' என்று ஒரே போடாகப் போட்டேன். ஆசாமி பயந்து போனான். என்னதான் இருந்தாலும் உன்னைப் போன்ற அழகான பெண் நாட்டிய நிலையத்திலிருந்து பிரிய விரும்புவானா?"

மல்லிகாவின் இதயம் துரித கதியில் அடித்துக் கொண்டது. மேடையின் மீது தோன்றப் போகிறோம் என்று எண்ணி யதுமே உடல் முழுவதும் புல்லரித்தது. ஆனால் எடுத்த எடுப்பிலேயே கதாநாய கியின் பாகம் தனக்குக் கிடைக்கும் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. 'என்னைப் போன்ற அழகான பெண் ணுக்கு நாதன் வேறு எங்கே போவார்? என்னுடைய சேகரைப் போன்ற ஒரு மனிதரை வேறு எங்கே காணமுடியும்? அவருக்கு என்ன கைம்மாறு நான் செய்வேன்? என் முன்னேற்றத்திலேயே குறியாக இருக்கும் இவரைப் போய், 'உன்னை ஏமாற்றுகிறான் என்று இன் னுமா நீ உணர்ந்து கொள்ள வில்லை?' என்று கேட்டாரே நாதன். அதை இந்தப் பாவியும் நம்பினேன். இதை அறிந்தால் அவர் மனம் என்ன பாடு படும்? அவருக்குத் தெரியவே கூடாது. சொல்லவே கூடாது.'

"என்ன, மல்லிகா! திடீரென்று சிந்த னையில் ஆழ்ந்து விட்டாய்?" என்று கேட்டான் சேகர், அங்கு இருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்தபடியே.

"ஒன்றுமில்லை. இவ்வளவு பெரிய கௌரவத்துக்கு நான் அருகதை உள்ள வள்தானா என்று யோசிக்கிறேன்!"

"நன்றாயிருக்கிறது. அந்த மகானு பாவனே மனமுவந்து கொடுத்தால்கூட வேண்டாமென்று உதறி விடுவாய் போலிருக்கிறதே? இந்தத் தொழிலில் புகுந்து விட்டபின் முக்கியமாகத் தன் னம்பிக்கை வேண்டும், மல்லிகா. அது இல்லாவிட்டால் முன்னேற முடியாது."

"நம்பிக்கையையும் தைரியத்தையும் அவ்வப்போது நீங்கள்தான் எனக்கு அளிக்க வேண்டும். உங்களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்ய முடியும்?"

"இருக்கிறது மல்லிகா! நீ எனக்குச் செய்யக்கூடியஉபகாரமும் இருக்கிறது."

"என்ன அது? சொல்லுங்கள். உடனே செய்கிறேன்."

"சொல்லட்டுமா? நிச்சயமாகச் சொல்லி விடட்டுமா?"

"கண்டிப்பாகச் சொல்லுங்கள்."

"இப்படிக் குனிந்து கேள். காதோடு சொல்ல வேண்டிய விஷயம்."

மல்லிகா குனிந்தாள்.

அவள் முகம் குப்பென்று சிவந்து போயிற்று.

நாணத்தினால் அவளுடைய கொடி உடல் வளைந்து கொடுத்தது.

நீண்ட வெண்மையான அவள் விரல் களைப் பற்றித் தன் அருகே அமர்த்திக் கொண்டான் சேகர்.

"கதாநாயகியாக உன்னை அரங்கத் தில் ஏற்றி விட்டேன். உனக்காக நான் இன்னும் என்னவெல்லாம் செய்யக் காத்திருக்கிறேன், தெரியுமா? இந்த

நாடகம் நிச்சயம் வெற்றி அடையும். அதைப் பார்க்க டைரக்டர் சுகுமாரனை அழைத்து வரலாம் என்று எண்ணியிருக்கிறேன். அவர் தமது அடுத்த படத்துக்குப் புது முகம் தேடுகிறார் என்று கேள்வி. அந்தப் படத்தில் நீதான் கதாநாயகி. தமிழ் நாட்டில் நீ நடிக்கப் போகும் படம் மகத்தான வெற்றியாக இருக்கும். அப்புறம் தென்னாடு முழுவதுமே நீ பிரபலமடைவதற்கு வழி செய்யப் போகிறேன். தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பாஷைகளிலும் அதே படத்தை 'டப்' செய்யலாம். அதற்கும் அப்பால் அகில இந்திய புகழை நீ அடையப் போகிறாய். ஹிந்தியில் அபாரமாகப் பேசி நடிக்கப் போகிறாய். கடைசியாக அகில உலகப் புகழும் உன்னை நாடும். சர்வதேசப் படக் காட்சிகளில் நீ நடித்த படம் காட்டப்படும்.''

சேகர் கோட்டை கட்டிக் கொண்டே போனான். மல்லிகா அலுக்காமல் சலிக்காமல் கேட்டுக் கொண்டே இருந்தாள். மாலைப் பொழுது கழிந்தது. வானத்தின் ஒளி மங்கிக் கொண்டே வந்தது. அதைக் கவனித்த மல்லிகா, ''அடடா! மறந்தே போனேன். இன்று பௌர்ணமி தினம். கடற்கரைக்குச் செல்வோமே?'' என்றாள். தங்கை சரஸ்வதியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

தன்னுடைய ஆயிரமாயிரம் அலைக் கரங்களால் முழுமதியை எட்டிப் பிடிக்க முயன்றான் சமுத்திரராஜன். அவன் வேட்கையைத் தணிக்க விரும்பித் தன் நிலவால் அவனைத் தழுவினாள் சந்திரமதி. அவன் தாபம் தணியவில்லை. 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் மீண்டும் மீண்டும் சமுத்திர ராஜன் தாவிக் கொண்டே இருந்தான் அவளைக் கட்டிப் பிடிக்க. அந்தப் பெரு முயற்சியினால் அரும்பிய வியர்வைத் துளிகள் நாலா புறமும் பரவிச் சிதறின.

அலைகடலின் மிக அருகாமையில் அமர்ந்திருந்த மல்லிகாவின் முகத்திலும் அந்த நீர்த் திவலைகள் தெறித்தன. தன் சட்டைப்பையிலிருந்து கைக்குட்டையை எடுத்துப் பட்டுப் போன்ற அவள் கன்னங்களைத் துடைத்தான் சேகர்.

''மல்லிகா! சந்திரிகையை அடைய முடியாத குறையை, அந்தத் தாபத்தை உன் மதிமுகத்தைத் தீண்டுவதின் மூலமாகவாவது தீர்த்துக் கொள்ள விரும்புகிறான் சமுத்திரராஜன்!''

''அதிலும் நான் இரண்டாம் பட்சமாகத்தானே போய் விட்டேன்?''

''இல்லை, இல்லை! இத்தனை நாட்களாக உன்னைப் பற்றி அவனுக்குத் தெரியாது. இப்போது தெரிந்து கொண்டான். இனி எட்டாத தொலைவில் இருக்கும் வானத்துச் சந்திரிகையைப் பற்றி நினைக்கவே மாட்டான். பிறகு நான் என்ன செய்வது?''

''பயங்கர மனிதன் கடல் அரசன். அவனை நெருங்க விட மாட்டேன். சற்று ஏமாந்தால் ஆளையே விழுங்கி ஏப்பம் விட்டு விடுவான். உங்களைப் போல் என்னை வைத்துப் பாதுகாக்கும் விதம் அவனுக்குத் தெரியவே தெரியாது! சரிதானே?''

''நூற்றுக்கு நூறு உண்மை!''

''அப்படியானால்....''

''அப்படியானால்?''

''இதோ, பூர்ண சந்திரனிடமிருந்து பொங்கி வரும் பெருநிலவின் சாட்சியாக, கொந்தளிக்கும் இந்தக் கடல் உள்ளளவும், வானத்திலே சுடர் விட்டு மின்னும் நட்சத்திரங்கள் உள்ளளவும், நாம் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் இந்த வெண் மணல் பரப்பு உள்ளளவும் நீங்கள் என் மீது கொண்டிருக்கும் காதல் நீடித்து நிலைத்து நிற்கும் என்று சத்தியம் செய்து கொடுங்கள்!''

சேகரின் விரல்கள் மணலைப் பிசைந்தன. ''சத்தியம் செய்கிறேன். பூர்ண சந்திரனைப் போல் பிரகாசிக்கும் உன் முகத்தின் சாட்சியாக, இந்தக் கடலைப் போல் காதலால் கொந்தளிக்கும் உன் உள்ளத்தின் சாட்சியாக, நட்சத்திரங்களைப் போல் சுடர் விட்டு மின்னும் உன் கண்களின் சாட்சியாக, மணல் பரப்பைப் போல் வெண்மையான உன் கழுத்தின் சாட்சியாகச் சத்தியம் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால்......''.

''ஆனால்?''

''எதற்காக இந்த சத்தியம்? ஏன் இந்தத் திடீர் சந்தேகம்?''

''அன்று கைக்குட்டையைத் தேடிக் கொண்டு என் அறைக்குள் புகுந்த நாதன் ஏதோ மர்மமாகப் பேசினார். நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள், மோசம் செய்கிறீர்கள் என்றார்.''

''மல்லிகா!''

அலைகடலின் இரைச்சல் ஒன்றுமில்லாதபடி அடங்கிப் போகுமாறு உரக்க அழைத்தான் சேகர். அடுத்த கணம் அங்கிருந்து எழுந்துவிட்டான். குனிந்து கீழே இருந்த மல்லிகாவைப் பார்த்தான். ''முன்பு செண்பகபுரத்திலே ஒரு முறை என்னைப் பற்றிச் சந்தேகப்பட்டாய். அன்று பச்சாத்தாபத்துடன் அதைப் பொறுத்துக் கொண்டு உனக்கு நல்ல வார்த்தைகள் சொன்னேன். இன்றும் என் மீது சந்தேகப்படுகிறாய். இப்போதும் உன்னைப் போனால்போகிறது என்று மன்னித்து விடுகிறேன். ஆனால் மறுபடி

யும் இதே தவறைச் செய்து விடாதே. அப்புறம் உன் முகத்திலேயே விழிக்க மாட்டேன்'' என்றான் சேகர்.

திரும்பி நடந்தான் அவன். அக்காவின் மடியில் அமைதியாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்த சரஸ்வதியைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டாள் மல்லிகா. சேகரைப்பின்தொடர்ந்தாள்.

கார் கிளம்பிய வேகம், சேகருடைய கோபம் இன்னும் அடங்கவில்லை என்பதை எடுத்துக் காட்டியது. ''என்மீது கோபமா?'' என்று கேட்டாள் மல்லிகா.

''கோபப்படாமல் எப்படி இருப்பது? நான் உன்னை ஏமாற்றுகிறேன் என்று அவன் சொன்னால் அதை நீ நம்புவதா? அவன் சொன்னதை வைத்துக்கொண்டு, 'சத்தியம் செய்து கொடுங்கள்' என்று என்னைக் கேட்பதா?''

''வேண்டாம்; நீங்கள் சத்தியம் செய்யாவிட்டால் பரவாயில்லை. கோபப்படாமல் இருந்தாலே போதும்.''

முன்னே இருந்த விளக்குகள் இருளைக் கிழித்துக் கொண்டு ஒளியைப் பரப்ப, அசுர வேகத்தோடு சென்றது அந்த மோட்டார். மல்லிகாவின் மனத்தில் பீதி படர்ந்தது. சரஸ்வதி புரண்டு கொடுத்தாள். இறுக அவளை அணைத்துக் கொண்டாள் மல்லிகா.

அவள் தங்கியிருந்த விடுதியின் வாசலில் இரவின் நிசப்தத்தைக் குலைத்துக் கொண்டு பயங்கரச் சத்தமிட்டு நின்றது வண்டி. சேகர் கீழே இறங்கவில்லை. மல்லிகா இறங்கக் காத்திருந்தாள்.

''மறுபடியும் எப்போது உங்களைப் பார்ப்பது?'' என்றுகேட்டாள்மல்லிகா.

''எப்போது உன்னைத் தேடி வருகிறேனோ, அப்போது பார்க்கலாம்.''

''இந்த முறை என்னை மன்னித்து விட்டதாகத்தான் சொல்லி விட்டீர்களே? இன்னமும் ஏன் இந்தக்கோபம்?''

''கீழே இறங்கு!''

''நான் சத்தியம் செய்யும்படி கேட்டது தவறுதான். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்!''

''கீழே இறங்கு!''

''நடந்ததை மறந்து விடுங்கள். இனி உங்களைச் சந்தேகிக்கவே மாட்டேன்.''

''கீழே இறங்கு !!!''

இறங்கி விட்டாள் மல்லிகா. அதற்கு மேல் உட்கார்ந்திருந்தால் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. வேங்கைப் புலியைப் போல் உறுமிக் கொண்டே போய் விட்டது மோட்டார். அதன் பின்புறத்தில் இருந்த பயங்கரச் சிவப்புநிற விளக்குகள் இரண்டும் மல்லிகாவை எச்சரிக்கை செய்தன.

சேகருடைய கோபம் உண்மையிலேயே அவளுக்குப் புரியவில்லை. 'நாதன் தன்னிடம் கூறியதில் மர்மம் ஒன்றுமில்லையானால் அதைச் சொல்லி விட்டுப் போவதுதானே? தன்னை அவர் ஏமாற்றவில்லை என்பது நிச்சயமானால், உறுதி கூறிவிட்டுப் போவதுதானே? அவருக்கு ஏன் இந்தக் கோபம்?......'

நினைத்துப் பார்க்கப் பார்க்கச் சந்தேகம் அதிகமாக வளரத்தான் செய்ததே ஒழியக் குறையவில்லை. நாதன் அன்று சொன்னதில் ஏதோ மர்மம் இருப்பதாகவே தோன்றியது. 'அது என்ன மர்மம்?' என்று கேட்டுக்கொண்டே கதவைத் திறந்தாள் மல்லிகா.

அங்கு ஒரு நாற்காலியில் அமைதியாக உட்கார்ந்திருந்தார் வைத்திய நாதன். 'இரவு நேரத்தில் இவருக்கு இங்கே என்ன வேலை? எதற்காக வந்தார்? நல்ல வேளையாகச் சேகர் தன்னுடன் உள்ளே வரவில்லை. அப்படி வந்திருந்தால் அவர் இப்போது இருக்கும் மனநிலையில் என்னென்ன நடந்திருக்குமோ, யார் கண்டது?'

தனக்கும் சேகருக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்படுவதற்கு மூலகாரணமாயிருந்த நாதனை உடனே வெளியேற்ற எண்ணினாள் மல்லிகா. ''ஐயா! ஏற்கனவே சேகரைப் பற்றி ஏதோ மர்மமாய்ப் பேசி எங்களிடையே மனக்கசப்பை உண்டாக்கி விட்டீர்கள். அதை இப்போது மேலும் வளர்க்காதீர்கள். இங்கிருந்து போய் விடுங்கள்!''

நாதன் சிரித்தார். 'மர்மம் ஒன்றுமில்லை. அன்று உனக்கு முழு விவரத்தையும் சொல்வதற்கு முன்னால் சேகர் வந்து விட்டான். நீயாகப் புரிந்து கொள்வாய் என்று நினைத்தேன். உனக்குப் புரியவில்லை என்பது இப்போதுதான் தெரிகிறது!''

''என்ன புரியவில்லை?சொல்லுங்கள்.''

''உன் உயிருக்குயிரான காதலன் சேகருக்கு ஏற்கனவே திருமணம் ஆகி இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன என்பது உனக்குப் புரியவேயில்லை!''

ஆயிரமாயிரம் தேள்கள் ஒன்றுசேர்ந்து கொட்டியது போல் இருந்தது அவளுக்கு. அவற்றின் விஷம் உடல் முழுவதும் பரவித் தாள முடியாத எரிச்சலையும் வேதனையையும் அளித்தன. தலைக்கு விஷம் ஏறியது. மூளை குழம்பியது.

கடல் அலைகளும், வானத்து நட்சத்திரங்களும், மணல் பரப்பும், பூர்ணசந்திரனும் அவள் கண் எதிரே தோன்றின. அவை ஒன்றோடொன்று இணைந்து கோர சொரூபமுடைய பேயாக மாறின. 'ஹா ஹா ஹா' என்று கர்ண கடூரமாகச் சிரித்து அவளைப் பயமுறுத்தியது அந்தப் பேய்!

(தொடரும்)


இந்தக் கதையில் வரும் ஒரு காட்சிதான் இவ்வார அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

உங்களுக்கு அதிக சக்தி அவசியம்

நீங்கள் சரீர தளர்ச்சியினால், சோர்வுற்று இருக்கிறீர்களா ?

நீங்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்களுக்கு க்ளுகோவிடா அவசியம். க்ளுகோவிடா உங்களுக்குத் சக்தியை ஊட்டுகிறது. க்ளுகோவிடாவில், ரத்தத்துடன் சீக்கிரமே கலந்துகொள்ளும், சர்க்கரை சேர்ந்துள்ளது. இதனால் க்ளுகோவிடா, உங்கள் தேகத்திற்கு அவசியமான சக்தியை உங்களுக்குத் தேவையான சமயத்தில் அளிக்கிறது.

க்ளுகோவிடாவிலுள்ள விடமின்கள், உங்களை பலமுள்ளவர்களாக்கி, சுறுசுறுப்புடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கச்செய்கின்றன.



க்ளுகோவிடா

வெகு விரைவில் சக்தியூட்டுகிறது



கார்ன் பிராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய்-1

ஏஜெண்டுகள் : பாரி அண்ட் கம்பெனி லிமிடெட்



ஐஸ் டீ
தேநீரும்
எலுமிச்சையும்
கோடையில்
நல்ல பானமாகும்
அதைத் தயாரிப்பதும் சுலபம்!

அழகின் நினைவில்



அவன் தூக்கம் கொள்ளமாட்டாமல் புரண்டு புரண்டு படுத்தான். அன்று மாலை தனக்கு ஏற்பட்ட மகத்தான சம்பவத்தையே அவன் தன் மனத்திரையில் காட்சிகளாக ஓட விட்டான்.

அந்தக் காட்சிகளுள் அந்தச் சந்திப்புதான் சிறப்பான காட்சியாக இருந்தது.

'அவளைச் சந்தித்தது வாழ்க்கையிலேயே ஒரு முக்கியமான கட்டமல்லவா? அதுவும் தான் எப்படி ஏற்பட்டது? எதிர்பாராமல், எதிர்பாராத இடத்தில்... அவள் அழகு...! அது ஆளைக் கொல்லும் அழகு...!'' இன்ப மயக்கத்தில் அவனுக்கு அதற்குமேல் சிந்திக்கக் கூடத் தெம்பு இல்லை. இன்ப நினைவுகள் தழுவிய ஒரு வெறும் கட்டைபோலக் கிடந்தான்.

வராத தூக்கம் வந்து விட்டது! இனிமேல் கனவுகள்தாம்!

அவன் சிந்தனையை அலைக்கழித்த அழகைப் பற்றிச் சில வார்த்தைகள்: அவன் குறிப்பிட்ட அந்த அவள் வெறும் அழகியல்ல. அழகிகளுக்கெல்லாம் அழகி என்று அவளைச் சொல்ல வேண்டும். வீதியெங்கும் உல்லாசமாகச் செல்லும் வனிதைகளில் பலர் கவனத்தைக் கவரும் உருவம் படைத்தவர்களாயிருப்பார்கள். நழுவும் நினைவுகளுடன் அவர்கள் நினைவையும் நாம் நழுவ விட்டுவிடுவோம். ஆனால், நம் கண்களையும் நினைவையும் கூசச் செய்ய வைக்கும் அழகு ஒரு ரகம். அந்த ரகத்தினள் இவள்...

செந்தாமரை மடலின் நிறம் அவள் மேனி நிறம்; வெண்தாமைக் குருத்துக்களின் தோற்றம் அவள் கரங்களின், கால்களின் தோற்றம்; வட்ட முகத்தில் அந்தக் கருவிழிகள் ஜாலம் காண்பித்துக் கொண்டேயிருக்கின்றன. தோற்றத்தில் பெருகு பெற்றிருந்த கரங்கள் வீச்சிலும் சளைத்தன அல்ல; நடக்கும்போது அவைகளின் அசைவு அவளுக்கு ஒரு கம்பீரத்தைத் தந்தது. இதழ்கள் குவிந்து விரிந்து அளிக்கும் அழகை நினைவூட்டிய அதரங்களில் அவன் கண் பதிந்திருந்த போதே அந்த வாய் மலர்ந்து, ஒரு சிரிப்பு உதிர்ந்து, பற்கள் தெரிந்தன. பின்னலில் வங்கி வைத்துக் கட்ட வென்றே சேர்த்துத் தொடுத்த முல்லைச் சரம் போன்றிருந்தன அவள் கூந்தல்.

அவன் மயங்கியதில் வியப்பு என்ன? தூக்கம் பிடிக்காமல் புரண்டதில் விந்தை என்ன? அவன் சிந்தை......

அதற்கு மேல் எழுத மறுத்து விட்டது பேனா.

உதறிப் பார்த்தார் ராமையா. பேனாவில் மை இருந்தால்தானே எழுதவோ, கிறுக்கவோ செய்யும்? பேனாவில் மை நிரப்பிக் கொள்வதற்காகக் கதவைத் திறந்து கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தார் அவர். மோதிக் கொள்ளாத குறையாகத் 'தட்'டென்று நின்றாள், எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த அவர் பத்தினி.

'இந்தப் பாலை வாங்கிக் கொண்டு போய் விடுங்கள். நான் மை நிரப்பிக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிப் பேனாவை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு திரும்பினாள் அவள்.

ராமையா பாலை ஆற்றிக் குடித்து விட்டு நிமிர்ந்தபோது பேனா மை நிரப்பித் தயாராக வந்து விட்டது.

''பாலையும் குடித்தாயிற்று. தூக்கம்தான் படுவேகமாக வருகிறது. நீ பேனாவுக்கு மை போட்டுக் கொண்டு வந்து என்ன பயன், ரேவதி?'' என்றார் ராமையா.

வை. சுப்ரமணியம்

''பெங்களூருக்குப் போவதற்குள் அந்தக் கதையை முடித்து அனுப்பி விட்டுப் போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே; கதை எந்த மட்டில் இருக்கிறது? கருவிலா, கருத்திலா அல்லது எழுத்தின் வடிவிலா?''

''கொஞ்சம் எழுதினேன். அதற்குள் பேனா வறண்டு விட்டது!''

எழுதியவரையிருந்த இரண்டு காகிதங்களையும் தேடிப் பார்த்தாள் ரேவதி.

''இது என்ன அழகுப் புராணமா?''

''ஏன் புராணத்தில்தான் அழகு தலை நீட்டுமா? நவீன இலக்கியங்களுக்கு அழகு வர்ணனை பொருந்தாது போலிருக்கிறதா?''

''நான் விவாதம் பண்ணத் தயாராயில்லை. ஆனாலும் இப்படி ஒரு பெண்ணைப் பற்றி வர்ணிக்க உங்களுக்குக் கூசாதோ?''

''கூச்சம் என்ன இதிலே? கண்டதை எழுதவும், கண்டது போல் ஒன்றைக் கற்பனை பண்ணி எழுதவும் கூச்சம், அச்சம் இவையெல்லாம் தடை செய்யாது. அப்படி இதனாலெல்லாம் கற்பனை பாதிக்கப்படுகிற நிலையில் எழுத்தை மறந்து விடுவதுதான் நேர்மையான செய்கை, ரேவதி!''

ரேவதியின் முகம் அவள் எதையோ தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்ததை உணர்த்தி விட்டது எழுத்தாளருக்கு. அவர் முகத்தை ஒரு முறை நிமிர்ந்து நோக்கி விட்டு, பால் தம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு கிளம்பக் காலடி எடுத்து வைத்தாள் ரேவதி.

''ரேவதி, என்ன உன் மனத்தில்?''

''ஒன்றுமில்லை!''

''இல்லை, ஏதோ ...''

''உங்கள் எழுத்தைப் படித்தால் மனத்தில் ஏதோ ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...... இப்போது எழுத ஆரம்பித்திருக்கிறீர்களே, இந்தக் கதையில் வரும் பெண் நிஜமாகவே எங்கேயாவது இருக்கிறாளா?''

ராமையாவுக்குச் சிரிப்பு வந்தது.

''இருக்கிறாள்'' என்றார் அவர்.

''எங்கே இருக்கிறாள்?''

''இங்கே'' என்று தம் நெஞ்சைத் தொட்டுக் காண்பித்தார் அவர்.

''அங்கே இருக்கிறதுதான் தெரிகிறதே! எங்கேயிருந்தவள் இப்போது அங்கேயிருக்கிறாள்?'' என்று கேட்டாள் ரேவதி.

''அவள் எங்கேயுமில்லை, ரேவதி! நான் படைத்தவள் அவள். இந்தச் சந்தேகங்களையெல்லாம் பட்டுக் கொண்டு, என் மதிப்பில் உயர்ந்த இடம் பெற்றிருக்கிற நீ தாழப் போகாதே. கதையை முடித்தவுடன் முழுவதும் படித்துப் பார். பிறகு கேள், எதைக் கேட்க நினைத்தாலும்!'' என்றார் ராமையா, தீர்மானமாக.

ரேவதி அந்த அறையை விட்டு நகர்ந்தாள். ராமையா மேஜையின் முன் போய் உட்கார்ந்து கொண்டு இரண்டு காகிதங்களில் மட்டுமே எழுதியிருந்த கதைப் பகுதியையும், அதன் கீழ் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வெள்ளைக் காகிதங்களையும் தம் கரங்களால் துளாவினார். தம் எழுத்து மூலம் பெற்றிருந்ததைக் காட்டிலும் ரேவதியின் மதிப்பீடு மூலம் அதிக சக்தி படைத்திருந்த அந்த அழகுக் கதாநாயகி அவர் நினைவில் வந்தாள்...

மறுநாள் இரவு ராமையா சென்ட்ரல் ஸ்டேஷனில் பெங்களூர் மெயிலில் அமர்ந்திருந்தார். முதல், இரண்டாவது வகுப்புகளில் செல்வதற்குரிய அந்தஸ்து படைத்திருக்கிறோம் என்ற எண்ணம் அவருக்கு உண்டு; ஆனால் வசதி இல்லை. மூன்றாவது வகுப்பில் கிடைக்கக்கூடிய வசதியைப் பெற்றிருந்தார். மூன்று ரூபாய் அதிகம் செலுத்தி, 'தூங்கும் ஆசனம்' ஒன்றை ரிஸர்வ் செய்திருந்தார் அவர். வண்டி கிளம்பும்போது அதில் ஏறிப் படுத்துக் கொள்ளலாம் என்று கீழேயிருந்த காலி ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்தார். ரயில் நிலையத்தின் பரபரத்த சூழ்நிலையில் மனத்தை லயிக்க விட்டிருந்தார் அவர்.

ரயில் புறப்பட இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்த அளவில் ஒரு யுவதி அவர் ஏறியிருந்த கம்பார்ட்மெண்டின் புறம் வந்து பெட்டியின் முன்புறம் ஒட்டியிருந்த ரிஸர்வேஷன் சீட்டைப் படித்து விட்டு உள்ளே வந்தாள். ராமையா ரிஸர்வ் செய்திருந்த ஆசனத்துக்கு நேர் எதிரேயிருந்த ஆசனத்தில் தனது சாமான்களை வைக்கும்படி கூறினாள், பின்னாலேயே வந்த போர்ட்டரிடம். பிறகு அவளும் கீழே ஒரு ஆசனத்தில் தற்காலிகமாக உட்கார்ந்து கொண்டாள்.

குறித்த நேரத்தில் வண்டி கிளம்பியது. பேஸின்பிரிட்ஜைத் தாண்டியதும் ராமையா தமக்குரிய ஆசனத்தில் தாவி ஏறிப் படுத்துக் கொண்டார். நீண்ட பிரயாணத்துக்கென்று ஸாமர்ஸெட் மாகம் நாவல் ஒன்றை அவர் கையுடன் எடுத்து வந்திருந்தார். அதை எடுப்பதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அந்த யுவதி லாகவமாகத் தனது ஆசனத்தில் ஏறிக் கொண்டு, ஒரு தோல் பையிலிருந்து ஆங்கில 'டைஜெஸ்ட்' பத்திரிகைப் பிரதி ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டாள்.

ராமையாவுக்கு இந்த அனுபவம் மிகப் புதிய ஒன்றாக இருந்தது. ஸ்திரீகள் மேல் 'பர்த்'தில் ஏறிப் படுத்துக் கொள்கிற அளவுக்கு வந்துள்ள ரயில்வே முன்னேற்றத்தைப் பற்றி வியந்தார் அவர். முதல் இரண்டாம் வகுப்புகளில் இந்தக் காட்சி சர்வ சாதாரணமானதோ என்னவோ! அவருக்கு முதல் இரண்டாம் வகுப்புப் பிரயாண அனுபவங்கள் அதிகம் இல்லை. ஒரே ஒரு முறை கிடைத்திருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் ஏறியிருந்த முதல் வகுப்பில் ஒரு ஸ்திரீ கூட ஏறவில்லை.

எழுத்தாளர் ராமையாவுக்கு இப்போது ஒரு தர்ம சங்கடமான நிலைமையே ஏற்பட்டது. அவர் அந்தப் பெண்ணின் பார்வையில் இல்லாத முறையில் ஆசனத்தின் பின் பலகையைப் பார்த்தபடி திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டார். அவர் சிருஷ்டித்த எத்தனையோ கதைகளில் கதாநாயகனையும் கதாநாயகியையும் சந்திக்க வைக்க மிக இயல்பான பல கட்டங்களைக் கற்பனை செய்து தீட்டியிருக்கிறார். ஆனால் இப்போது வெறும் பிரயாணிகளாகத் தானும் அந்த யுவதியும் சந்திக்கிற கட்டம் இத்தனை தர்மசங்கடத்தை உண்டாக்குகிறதே என்று வியந்தார் அவர்.

வண்டி நாலு ஸ்டேஷன்கள் தாண்டியிருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக வேகம் எடுக்கிற நிலை போலும், வண்டி சற்று ஆட்டம் கண்டது; அந்த அதிர்ச்சியில் அவள் கையிலிருந்த பத்திரிகை கீழே விழுந்து விட்டது. கிணற்றுக்குள் பாத்திரத்தைப் போட்டுவிட்டு விழிக்கும் குழந்தையைப் போல் அவள் 'திரு திரு' வென்று விழித்தாள்.

சத்தம் கேட்டுத் திரும்பிய ராமையா அதை எடுப்பதற்காகக் கீழே இறங்கினார்.

"பரவாயில்லை; காலையில் எடுத்துக் கொண்டால் போகிறது. அநேகமாக அதில் எல்லாவற்றையும் வீட்டிலேயே படித்து முடித்து விட்டேன்" என்றாள் அவள். அது என்ன குரலா, அல்லது யாழ் இசைத்ததா எங்கேனும்? ரயிலில் ஏது யாழும் இசையும்?

பத்திரிகையைக் கொடுத்த போதுதான் ராமையா அவளை நேர்ப் பார்வையில் பார்த்தார். எழுத்தில் அழகை வடிக்கும் பிரும்மாவின் கற்பனைக்கு உரமிட இந்த மாதிரியான தத்ரூபக் காட்சிகளின் தரிசனம் இன்றியமையாதது. இந்த மாதிரி காட்சிகள் வளர்ந்து, படர்ந்துதான் பிரும்மாவின் மனத்தை நெகிழச் செய்கின்றன. அந்த நெகிழ்ச்சி பல கற்பனைச் சிருஷ்டிகளை யெல்லாம் முழுமையாக்கி வைக்கின்றன.

ராமையா அயர்ந்து போய்விட்டார். அவர் கண்கள் கூசின. நேற்று எழுதிய கதையில் அவர் வர்ணனை செய்திருந்த அழகுப் படலம் அவர் மனத்தில் விரிந்தது.

'எழுத்துக்கு எழுத்து எத்தனை உண்மை! இது என்ன சக்தி!'

உண்மைதான்; எத்தனையோ காட்சிகளைக் கண்டு அவைகளை வரிகளின் வடிவங்களில் அடக்கியிருக்கிறார். ஆனால் அந்த வரிகள் சேர்ந்து எழுந்து ஒரு காட்சியாக மாறியிருக்கிற சக்தியை—புதுமையை — இப்போதுதான் கண்டு வியக்கிறார் அவர்.

"நீங்கள் படிப்பீர்களா இப்போது?" என்று பனிச்சென்று கேட்டு ராமையாவின் நினைவைக் கிழிக்கிறாள் அவள்.

"இல்லை; தூக்கம் வருகிறது."

"அப்படியானால் அந்த விளக்கை அணைத்து விட்டு 'நைட் லாம்'பைப் போடுவீர்களா?"

அடுத்த நிமிஷம் அந்தப் பெட்டி நீல ஒளியில் குளித்துக் கொண்டிருந்தது. பெட்டியிலிருந்தவர்களில் அநேகமாக எல்லாருமே தூங்கிக் கொண்டிருந்தார்கள். ராமையாவுக்குத் தூக்கம் வரவில்லை. 'அவன் தூக்கம் கொள்ள மாட்டாமல் புரண்டு படுத்தான்' என்று நேற்று அவர் தம் கதையை ஆரம்பித்தது எத்தனை பொருத்தமான விஷயம்!

தூங்கி வழிந்து கொண்டிருந்தவர்களைச் சுமந்து சென்ற ரயில் அவர்களைக் கேலி செய்வதுபோல் ஒரு சத்தத்தை ஒலித்துச் சென்று கொண்டிருந்தது. தாம் தூங்கவில்லை யென்பதை உணர்ந்த முற்பட்ட ராமையா, மெள்ள எழுந்து கீழே இறங்கி ஜன்னல் ஓரமாக இருந்த ஒற்றை ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். எதிரே இன்னொரு காலி ஆசனம் இருந்தது!


அவர் மனத்தில் இப்போது புதுவிதமான ஒரு வேதனை வந்து கவிந்து கொண்டிருந்தது. நேற்று தம் கற்பனையில் இயற்கையாய் எழுந்த அழகு வர்ணனையை மனதார அள்ளி வீசியிருந்தார் ஏட்டிலே. அந்த அழகுணர்ச்சி கதாநாயகன் மனத்திலே வளர்ச்சி செய்ய வேண்டும், எதிரொலி செய்ய வேண்டும் என்பது அவர் லட்சியம். ஆனால், அந்த லட்சியம் இன்னும் பல படிகள் முன்னேறி விட்டது. அழகு வர்ணனை ஒரு உயிருள்ள உருவமாக அவர் முன் தோன்றி, அவர் மனத்தையும் துளைத்துக் கொண்டு போய் அங்கே தங்கி ஆட்சி செலுத்த ஆரம்பித்து விட்டது.

'ஆம்; அதே அழகிதான் இவள்!' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார் ராமையா.

இந்த உருவம் அவர் மனத்தில் பதிந்து, சிந்தையையும் பற்றிக் கொண்டு விட்டது என்பதுதான் அவருடைய பிரச்னை.

'இந்த உணர்ச்சிக்கு என்ன பெயர்?'

அவர் கல்யாணம், காதல் கல்யாணமாக நிறைவேறவில்லை. சாதாரண மணம்தான். கல்யாணத்துக்குக்குப் பிறகும் கூடத் தங்கள் வாழ்க்கையில் காதல் ஏற்பட்டிருக்கிறதா என்பதை அவர் நினைத்துக் கொண்டு பார்த்ததுண்டு. ஆனால், அது ஒரு பெரிய-நீண்ட -ஆராய்ச்சி போலப் படும் அவருக்கு. எழுத்தில் காதலை வாரி இறைத்திருக்கும் அவர்



வாழ்க்கையில் இன்று ஏற்பட்டிருக்கும் ஒரு மோதலுக்கு என்ன பெயர் என்றும், அது ஏன் நேர்ந்தது என்றும் அவருக்குப் புரியவில்லை.

ரயில் ஜோலார்ப்பேட்டை ஜங்ஷனில் வந்து நின்றது.

"இது என்ன, பெரிய ஸ்டேஷனு?" என்று கேட்டாள் அந்த யுவதி. திரும்பிப் பார்த்தார் ராமையா. தம்மைத்தான் கேட்கிறாள் என்று தீர்மானித்துக் கொண்ட பிறகு, "ஆமாம்; கொஞ்சம் ... பெரிசுதான் ..." என்று கூறினார்.

"நல்ல காப்பி கிடைக்குமா?"

"கிடைக்கும்."

"தயவுசெய்து கொஞ்சம் காப்பிக்காரனைக் கூப்பிடுவீர்களா?......நானே அங்கே வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே மறு நிமிஷம் கீழ் இறங்கி, ராமையாவின் எதிரில் இருந்த காலி ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டாள் அவள்.

இருவரும் காப்பி சாப்பிட்டனர். சற்றைக் கெல்லாம் வண்டி கிளம்பியது.

"நீங்கள் தூங்கவேயில்லை போலிருக்கிறதே!" என்றாள் அவள்.

"இல்லை......ஏதோ சிந்தனை. என் பிழைப்புக்குத் தூங்கும் நேரமெல்லாம் நஷ்டத்தைத் தரும். அதுவும் இந்த 'இரி ரயில் பிரயாணங் களில் விழித்திருந்தே பழகி யிருக்கிறேன்."

"உங்களுக்கு என்ன வேலை அப்படி?"

"எழுத்து வேலை. கற்பனைகள் செய்து வாழ்க்கையும் கற்பனையாக அமைந்து விட்டதோ என்று பிரமை கொண்டிருக்கிறேன் இப்போது."

"பங்களூரில் நீங்கள் யாரைப் பார்க்கப் போகிறீர்கள்?"

"பெங்களூரையேதான் பார்க்கப் போகிறேன். சும்மாஒரு மன இடமாற்றத்துக்காக."

"குடும்பத்துடன் பெங்களூருக்கு வருகிறது தானே? இந்த வெய்யில் நாளைக்குப் பெங்களூர் வாசம் மிகவும் இனிக்கும்......"

இதற்கு என்ன அபிப்பிராயம் கூறுவது என்று சிறிது யோசித்தார் எழுத்தாளர். இரண்டுவிதமான ஆசைகள் அவர் மனத்தை ஆண்டு கொண்டிருந்தன. அவள் அழகு அவர் மனத்தில் ஒரு புறம் ஏதோ ஒரு வடிவத்தைச் சிருஷ்டி செய்து கொண்டிருந்தது. இன்னொரு புறம் அவள் நடவடிக்கைகள் அவருடைய கதையைத் தொடர உதவும் கருவூலங்களாகத் தோன்றின. முடியுமானால் அவளிடம் நெருங்கிப் பழகி ஒரு நெடுங் கதையையே சிருஷ்டி செய்ய வேண்டும் என்றும் அவர் எண்ணினார். ஆகவே அவர் துணிந்து கூறினார்:

"என்னுடைய குடும்பம் என்பது நான் ஒருவன்தான்!" என்றார் அவளிடம் வெளிப் படையாக.

"இன்னும்......"

"ஆமாம்; கல்யாணத்தைப் பற்றி நான் யோசிக்கவில்லை......"

தம் வயதையும் தோற்றத்தையும் அவள் அளவிடுவதுபோல் ராமையாவுக்குத் தோன்றியது. அவருக்கு முப்பத்தைந்து வயது இருக்கும். கற்பனையும் சிந்தனையும் அவரைப் பீடமாகக் கொண்டு ஆண்டு கொண்டிருந்த காரணத்தால் நாற்பது நாற்பத்தைந்து

என்றுகூட யாரும் மதிப்பிடும் நிலைக்கு மாறி யிருந்தது உரு.

''நீங்கள் பெங்களூரில் எங்கே தங்கப் போகி றீர்கள் ?'' என்று கேட்டாள் அவள்.

''இனிமேல்தான் யோசிக்க வேண்டும். அங்கே போய்த்தான்...''

''நீங்கள் முதலில் ஒன்றிரு நாட்கள் ஹோட்டலில் தங்குங்கள். பிறகு நான் வேறு இடம் ஏற்பாடு செய்கிறேன். எங்கள் வீடு பெரிய சத்திரம். வருவோரும் போவோரும்......''

''நீங்கள்...''

''நான் மைசூர் சர்க்கார் செக்ரடேரியட் டில்வேலை பார்க்கிறேன். எங்கள் காரியால யம் 'விதான் சௌதா' என்ற புதிய கட்ட டத்துக்கு மாறியிருக்கிறது. நீங்கள் என்னைத் தாராளமாக எப்போது எங்கே வேண்டு மானாலும் சந்திக்கலாம். காரியாலயத்துக்கு வந்தால் 'கங்கா' என்று கேளுங்கள். நான் ஒரு கங்காதான் அங்கே......எனக்கு இலக்கி யத்தில் ஈடுபாடு அதிகம் உண்டு. அதையெல் லாம் பற்றி அப்புறம் பேசலாம்.....பெங்க ளூரை நானே உங்களுக்குச் சுற்றிக் காண்பிக் கிறேன்'' என்று ஒரே மூச்சில் பேசிக்கொண்டு போனாள் கங்கா.

அந்தப் பெயரை மனத்துக்குள்ளே பல முறை உச்சரித்துப் பார்த்தார் ராமையா. அவள் அவர் இதயத்துள் பதிந்து விட்டாள்!

பெங்களூரில் ஹோட்டல் மைலக்ஸில் தங்கினார் ராமையா. அவரைத் தினசரி மாலை வேளைகளில் வந்து சந்தித்தாள் கங்கா. தாகத் தையும் தணித்து, மனத்தையும் குளிர்விக்கும் தண்ணீர் போல் பெங்களூர் சீதோஷ்ணநிலை இருந்தது. நகரின் புதுமைகளைக் கங்காவின் உதவியினால் கண்டு ரசித்தார் ராமையா.

ஒரு நாள் லால்பாக் பூங்காவுக்கு அவரை அழைத்துச் சென்றாள் கங்கா. இயற்கைத் தேவி கோயில் கொண்டுள்ள இடம் அந்த லால்பாக் என்று ஒரே வார்த்தையில் சொல்லி விடலாம். மரங்களும், செடிகொடிகளும், பல வண்ண மலர்களும், மலர்களின் மணச் சேர்க்கையும் அவரைப் பிரமிப்பில் ஆழ்த்தின.

அன்று அவர்கள் சம்பாஷணையில் அழகைப் பற்றிய சர்ச்சை எழுந்தது. ராமையா தமது கற்பனையையும், தம் முன் தத்ரூபமாகத் தோன்றிக் கொண்டிருந்த கங்காவையும் இணைத்து, ஆனால், மறைமுகமாக அவளிடம் பேச்சு கொடுத்தார். அந்த விஷயத்தை மறு நாள் விவாதிக்கலாம் என்றும் அதே நேரத் துக்குத் தன்னை அதே இடத்தில் சந்திக்கும் படியும் கூறினாள் கங்கா.

''உங்களுக்கு வீணாகச் சிரமம். எனக்காக நீங்கள் தினசரி உங்கள் வேலைகளை விட்டு விட்டு... '' என்றார் ராமையா.

''அதெல்லாம் ஒன்றுமில்லை.''

''உங்கள் வீட்டில் ஒருவரும் ஒன்றும்...''

''யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். நானே சொல்லி விடுகிறேன், ஒரு இலக்கியா சிரியருடன் சிறிது பொழுது பேசி, ஊரைச் சுற்றிக் காண்பிக்கிறேனென்று...''

''உங்கள் வீட்டில் என்று நான் சொன் னது...'' என்று இழுத்தார் ராமையா.



கணவர்:— தினமும் ஆபீஸ் போவது சோம்பத் தொல்லையாக இருக்கிறது! ஓய்வு எடுத்துக்கொண்டு விடலாம் என்று பார்க்கிறேன்!

மனைவி: பார்ப்பீங்க! பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேணும், கடனெல்லாம் அடைக்கவேணும், அப்புறம் குடித்தனம் எப்படி நடத்தறதாம்...?

கணவர்:—அசடே! இன்றைக்கு ஒரு நாளைக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளப் போறேன். அதுக்குள்ளே...!

"புரிகிறது. எங்கள் வீட்டில் என் பெற்றோர்தான் இப்போது. எனக்கு இன்னும் திருமணமாக வில்லை..." கங்கா இதைச் சொன்னபோது அவள் கன்னங்கள் சிவந்தன.

இருவரும் பிரிந்தனர். டாக்ஸியில் செல்லும் போது தன் கையிலிருப்பதைக் கவனித்தாள் கங்கா. தான் கொணர்ந்திருந்த புத்தகத்துக்குப் பதில் ராமையாவின் டயரி இருந்தது. பேச்சு வாக்கில் அவை மாறிவிட்டன! சற்றைக்கெல்லாம் காற்றில் அந்த டயரியின் ஏடுகள் புரண்டன. அவள் கண்களில் இந்தக் குறிப்பு வலியத் தெரிந்தது:

'ரேவதி மனைவி என்ற கடமையில் தவறாமல் பெங்களூர் போகுமுன் கதையை முடிக்க வேண்டியதை ஞாபக மூட்டினள்.'

மறுநாள் ராமையா லால்பாக் பூங்காவில் வெகுநேரம் காத்திருந்தார்; கங்கா வரவில்லை. திடீரென்று அவர் கவனத்தைக் கவர்ந்தது ஒரு டயரி.

"ஓ! சற்று முன்னாலேயே வந்து திரும்பியும் விட்டாள் போலிருக்கிறதே!' என்று எண்ணிக் கொண்டே ஹோட்டலுக்குத் திரும்பினார் அவர்.

அந்த டயரியைப் பிரித்துப் பார்க்க வேண்டும் போலிருந்தது அவருக்கு. வெகு நேரம் யோசித்து விட்டுப் பார்த்தார்; அன்றையத் தேதியில் எழுதியிருந்த குறிப்பு:

'மணமாகவில்லை என்றால் எளிதில் நம்பி விடுகின்றனர் புருஷர்கள். எழுத்தாளர் ராமையாவிடம் அப்படிப் பொய் சொன்ன போதுகூட அவர் முகத்தில் ஏற்பட்ட திருப்தி உணர்ச்சியைப் பார்க்க முடிந்தது. என் கணவருடன்கூட இன்றைக்கு ஓயிட்பீல்ட் வருவதாகச் சொன்னதை யெல்லாம் மறந்து எழுத்தாளரையும் சந்திக்கிறேன் என்று சொல்லி விட்டேனே......"

ராமையாவின் மனத்திலிருந்து பெரும் பாரம் இறங்கிய மாதிரி இருந்தது. அவள் ஏன் அப்படிப் பொய் சொன்னாள் என்று அவர் ஆராய்ச்சி செய்யவில்லை. ஏனெனில், அவர் கூறியிருப்பது என்னவென்பது அவருக்குத் தெரியுமல்லவா?

சென்னைக்கு வண்டி ஏறப் பெங்களூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார் ராமையா. எதிர்பாராதவிதமாக அங்கே கங்காவைக் கண்டார். ஆனால், வண்டியில் இரண்டாவது வகுப்பில் அமர்ந்திருந்தாள் அவள்.

சற்று நேரம் நின்று பேசுவோம் என்று நின்றுகொண் டிருந்தார்.

"சென்னைக்கா?"

"ஆமாம், ஸார்! ஒரு மாதம் லீவில் போகிறேன்!"

"இந்தச் சமயத்தில் சென்னையிலிருந்து எல்லாரும் இங்கே வருவார்கள்......"

"ஆமாம்; ஆனால், நான் போகத்தான் வேண்டி யிருக்கிறது. பத்திரிகை அனுப்புகிறேன்; கட்டாயம்......"

"என்ன இது!......" என்று இழுத்தார் ராமையா. பிறகு அவள் டயரியை எடுத்து அவளிடம் நீட்டி, "உங்கள் டயரி அன்று லால்பாக் பார்க்கில்......" என்றார்.

"இதோ உங்கள் டயரி. நான் தவறி எடுத்துச் சென்று விட்டேன்."

"அதனால் என்ன?" என்று நகர்ந்தார் அவர்.

வண்டியில் தம் இடத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டதும் முதல் காரியமாக டயரியைப் பிரித்தார் ராமையா. அதில் கங்கா எழுதியிருந்தாள்.


'அழகைப் பற்றிய விவாதத்துக்கு மறுநாள் பதில் சொல்வதாகக் கூறினேன். வாயால் சொல்ல வேண்டிய பதிலை நடைமுறையிலேயே சொல்லும்படியாயிற்று. அழகைக் காணுந்தோறும் 'கல்யாணம்' என்ற பதத்தையும் நினைவுபடுத்திக் கொண்டால் மனவிகாரத்தையே அது குறிக்கிறது. தவறிப் போய்க் காதல் என்று அதை எண்ணிவிடாதீர்கள். இதை விளக்கவே நான் என் டயரியில் ஒரு பொய்க் குறிப்பு எழுதினேன். பத்திரிகை அனுப்புவேன். கட்டாயம் என் கல்யாணத்துக்கு வாருங்கள்—ஆமாம்; குடும்பத்துடன்தான்.'

ராமையா தம் மனைவியை நினைத்துக் கொண்டார்.

'இந்தக் கதையில் வரும் பெண் நிஜமாகவே எங்கேயாவது இருக்கிறாளா?' என்று ரேவதி கேட்டாளே! எத்தனை ஆதங்கம் அவளுக்கு! கதையில் வரவேண்டிய பெண் நிஜமாகவே இருந்தால் எத்தனை தொல்லை ஏற்படும் என்பதை அநுபவத்தில் கண்டாயிற்று' என்று எண்ணினார் ராமையா. வண்டி புறப்பட்டது...

"**ரா**த்திரி பூராவும் மேஜைமேல் கவிந்து படுத்தே தூங்கிவிட்டீர்கள்? கதையை இன்னும் நீங்கள் முடிக்கவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே ராமையாவை எழுப்பினாள் ரேவதி.

சிலிர்த்துக்கொண்டு எழுந்தார் அவர். ஆம்; கதை இன்னும் விட்ட இடத்தில் தானிருந்தது. ஆனால் கனவென்னவோ முடிந்து விட்டது!


COLGATE
TOOTH POWDER





இலவச புத்தகம்: ஜான்ஸனின் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு தபால் செலவிற்காக 25 நயா பைசா ஸ்டாம்பு வைத்து எழுதுங்கள். பெற்றோர்களுக்கு உபயோகமான அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்கிலீஷ் அல்லது ஹிந்தி பிரதிகளில் எது வேண்டுமென்று குறிப்பிடவும்!

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன் ஆப்
இந்தியா பிரைவேட் லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் 1976
டிபார்ட்மெண்ட் 64-G
பம்பாய்



62. "நகத்தால் கிள்ளுவதை..." (?)

"அரைப்பணம் கொடுத்து
ஆடச் சொன்னாலும்
ஒருபணம் கொடுத்து
ஓயச் சொன்னாலும்"

என்று தமிழில் ஒரு பழமொழி. நிறுத்தினால் போதும் இந்த ஆடல்பாடல்களை என்றாகிவிடும். இதை நானே பல தரம் அனுபவித்திருக்கிறேன்.

சங்கீதக் கச்சேரி. வித்வான் ராகத்தை ஆலாபனை செய்வார், செய்வார், செய்வார்; இன்னுஞ் செய்வார். நமக்குப் போதுமென்றாகி விடும். அலுத்துக் கொண்டு எழுந்து விடுவோமா என்றிருக்கும் தருணம் ஒருமாதிரி முடிப்பார். "அப்பா!" என்று வெளியே கேட்காத முறையில் ஒரு பெருமூச்சு விட்டு, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உட்காருவோம். ஆனால் இந்த நிம்மதி ஒரு நிமிஷந்தான். அதற்குள் பக்க வாத்தியக்காரர் தமது கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்து விடுவார். அவர் ஒருமாதிரி ஓயும்போது மறுபடியும் வாய்ப்பாட்டுக்காரர் பாடுவதற்குத் தொடங்கி விடுவார்.

இப்படியாகச் சிலமுறை நமது பொறுமையை எல்லை கடந்து சோதித்தபிறகு-ஒரு மாதிரியாகக் கீர்த்தனத்தை ஆரம்பிப்பார். அதில் ஓரிடத்தில் நிரவல்; பிறகு ஸ்வரம். இந்தமாதிரி 45 நிமிஷ ரோதனையை நாம் பொறுத்தாக வேணும். இதில் 25 நிமிஷம் ராக ஆலாபனை, 2 நிமிஷம் கீர்த்தனை, 18 நிமிஷம் ஸ்வரம் என்ற கணக்கில் பாட்டு.

ஒவ்வொரு ராகத்துக்கும் ஒரு அதிதேவதையுண்டு. அந்தத் தேவதையின் ஸ்வரூப அலங்கார வர்ணனைதான் ராகாலாபனை. இதைப் பாடி அந்தத் தேவதையின் ஸாந்நித்யம் ஸித்தித்த பின் துதி பாடிக் களிப்பித்தல், நமக்கு வேண்டிய வரன்களைக் கோருதல். இது தான் கீர்த்தனம். அந்தத் தேவதைக்கு அர்ச்சனாதி உபசாரம்தான் ஸ்வரம் பாடுவது. இரு கரங்களையும் கூப்பித் தலைவணங்கி நமஸ்கரித்து மனத்தால் தன் ஆன்மபரத்தை அத் தெய்வத்தினிடம் ஒப்படைத்தல்தான் நைவேத்யம். இச் சடங்குகளின் முக்கியத்தைத் தெரிந்தவர் ஒவ்வொன்றும் எத்தனை மட்டும் செய்யத் தக்கது என்ற அளவை ஒரு போதும் மீறமாட்டார். ஒரு கீர்த்தனத்தைப் பாடும் முன் அக் கீர்த்தனையில் எத்தனை மட்டும் ராகத்தின் ஸஞ்சாரப் போக்கு உண்டோ, அவ்வளவோடு கீர்த்தனத்துக்கு முன் பாடும் ராகாலாபனையை நிறுத்திக் கொள்ள வேணும். அப்போதுதான் கீர்த்தனம் அங்கியாகவும்—ராகாலாபனையும் ஸ்வரமும் அங்கங்களாகவும் ஏற்படும். இல்லாவிட்டால் ரசிகருக்கு அலுப்புத் தட்டாமல் இராது.

இருமல், ஈளை, இரைப்புகளுக்குச் சிகிச்சையைத் தெரிவிக்க வந்த நேரத்தில் 30, 40 என்று மருந்துகளை எழுதிக் கொண்டு போனால் — கச்சேரி கேட்க வந்தவருக்கு ஏற்பட்ட அனுபவந்தான் வாசகர்களுக்கும் ஏற்படும். ஏன்? நான் கண்ட அலுப்பை நேயர்களும் காணட்டும் என்ற விசால மனத்துடன் மற்றும் சில மருந்துகளையும் தெரிவித்து விடுகிறேன்.

29. கரிசலாங்கண்ணியில் மஞ்சள் பூ உள்ளதொரு வகை. இதை மஞ்சள் கரிசாலை என்றும் பொற்றலைக் கையாந்தகரை என்றும் அழைப்பர். இதன் சாறு அரைப்படி, நல்லெண்ணெய் அரைப்படி இவற்றைக் கூட்டிக் காய்ச்சி இறக்கிய தைலத்தில் ஒரு துட்டு எடை காலைமாலை சாப்பிட்டு வர இருமல், இரைப்பு, ஈளை நோய்கள் தீரும்.

30. கற்பூரவள்ளியின் சாற்றுடன் கற்கண்டும் சேர்த்துக் குழைத்துக் கொடுக்கக் குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல், கபக்கட்டு ஆகியவை போகும். ஒவ்வொரு வீட்டிலும் இந்தச்

செடி கொல்லைப்புறத்தில் அவசியம் இருத்தல் வேண்டும்.

காசம் இருமல்
கதித்த மசூரியையம்
பேசபுற நீர்சுகோவை
பெருங்காண் — வீசுகரங்
கற்பாறை யொத்து நெஞ்சிற்
கட்டு கபம் வாதமும் போங்
கற்பூர வள்ளிதனைக்
கண்டு...

என்று அகத்தியனும்,

கற்பூரவள்ளியின் கழறிலையைத்தின
நற்பாலர் நோயெலா நாசமா
யகலுமே...

என்று தேரையனும் சொல்வதிலிருந்து, துளசியைப் போலவே கற்பூரவள்ளியையும் ஒவ்வொரு வீட்டின் கொல்லைப்புறத்திலும் பயிராக்கி வைத்துக் கொள்ளுதல் அவசியம் என்று சொல்லத் துணிந்தேன்.

31. கர்க்கடகசிங்கி [கற்கடகசிங்கி] என்ற கடைச் சரக்கு ஒன்று. இதில் சிறியதொரு துண்டை வாயில் அடக்கிக் கொண்டு ஊறுஞ் ஜலத்தை விழுங்கி வர இருமல், குத்திருமல், வறட்டிருமல் இவை போகும்.

32. கற்கடகசிங்கி, மருதம்பட்டை, திப்பிலி இவற்றைத் தனித்தனியாகப் பொடித்து ஓர் எடையில் கூட்டிக் கொண்டு அரை முதல் ஒரு வராகன் எடை வரையில் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை தேனில் குழைத்து நக்கி வர இருமல் தீரும்.

33. கிச்சிலிக்கிழங்கு என்னும் ஒரு கடைச் சரக்கு. இதைப் பூலாங்கிழங்கு என்றும் சிலர் அழைப்பர். இத்துடன் திப்பிலி, இலவங்கம், அதிமதுரம் ஆகியவற்றையும் ஓர் எடையாகச் சேர்த்துக் காய்ச்சிய குடி நீரில் சிறிது கற்கண்டும் சேர்த்துக் குடித்து வர, இருமல் தணியும். அதிகமான கபம் துப்பும் இருமலில் இக் குடி நீரில் சிறிது தேன் கூட்டிக் குடிப்பது நல்லது.

34. பிரமதண்டு என்றும் பிரமதண்டி என்றும் சொல்லும் ஒரு வகை குத்துச் செடி குப்பை மேடுகளில் தானே பயிராவது. சாம்பல் நிறமாக இருக்கும். இந்தச் செடியின் இலைமேலெல்லாம் முள் இருக்கும். இதன் விதை கடுகைப் போல இருக்கும். இவ்விதையையும்,—

35. விதையிலிருந்து கிடைக்கும் எண்ணெயையும் — இருமல், ஈளை, இரைப்புகளில் உபயோகிக்கும் முறையைத் தமிழ்ச் சித்தர் எழுதியுள்ளார். ஆனால் இவற்றை வைத்தியனின் மேற்பார்வையில் இல்லாது உபயோகித்தல் விரும்பத் தக்கதல்ல.

36. பச்சைக்குன்றிமணி வேர், வெண்டைக்காய் இவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்து நன்றாய் நசுக்கி அரைப்படி கொதிக்கும் நீரில் இட்டு மூடி வைத்து அரைமணி நேரத்துக்குப்பின் மருந்துகளை நீக்கிக் கஷாயத்தை வடிகட்டி, சர்க்கரை 8 பலம், அல்லது சீனி கற்கண்டு அல்லது தேன் — இவற்றில் ஒன்றைக் கூட்டிச் சிறு தீயில் காய்ச்சித் தேன்பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். இதை ஒரு டீஸ்பூன் அளவில் மார்சளியுடன் ஜுரமும் உள்ள நிலையில் குழந்தைகளுக்குத் தினம் 3—4 தரம் புகட்டவும். பெரியவர்களுக்கு 1—2 அவுன்ஸ் வீதம் தினம் 4—5 தரம் கொடுக்க பிராநிச்யாயிக ஜுரம் குணமாகிவிடும்.

(37) நன்றாய்ச் சுத்தம் செய்தெடுத்த ஜீரகம் 5 பலம். இதை இஞ்சிச் சாற்றில் ஊற வைத்துக் காய்ந்தபின் முசுமுசுக்கைச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்துக் காய்ந்தபின் எடுத்து, அத்துடன் ஏலம், சுக்கு, திப்பிலி, மிளகு, கோட்டம், நெல்லிமுள்ளி நெற்பொரி, வில்வப் பழத்தின் ஓடு இவைகளின் பொடி வகைக்கு 2 வராகன் எடையாக எடுத்துச் சேர்த்து, மொத்தத்துக்கும் சமன் எடை வெள்ளைச் சர்க்கரையும், கூட்டிக் கலந்த சூர்ணத்தில், 1 முதல் 2 வராகன் எடை வீதம் தினம் காலை மாலை வெந்நீரில் கொடுக்க, ஜீர்ணக் கோளாறுகளுடன் கூடிய இரைப்பு—ஈளை இருமல் இவை போகும்.

(39) கூஷ்மாண்ட ரஸாயனம் என்னும் மருந்துடன் அனுபான பானமாகத் தசமூலாரிஷ்டத்தைச் சேர்த்துக் கொடுத்து வருவது-நாட்பட்ட இருமல் முதலியவற்றுக்கு நல்லது.

(40) கனகாஸவம் என்றொரு மருந்து. ஊமத்தையின் வேர்தான் இதில் முக்கிய சரக்கு. இதை 1—2 டீஸ்பூனளவில் 1 அவுன்ஸ் ஜலத்துடன் கொடுத்து வரக் காலக்கிரமத்தில் ஆஸ்த்மா வேரற்றுப் போகும்.

(41) தஞ்சை அரண்மனைப் புத்தகாலய ஏடுகளிலிருந்து கண்டெடுத்த முறைப்படி தயாரித்த அச்வகந்தா லேஹியம் என்ற மருந்து — 'ஈஸினோபைல்' அதிகமுள்ள நிலையில் ஏற்படும் ஈளை இரைப்பு உள்பட சகல ரோகங்களுக்கும் கைகண்ட மருந்து. இதையும், கூஷ்மாண்ட ரஸாயனத்தையும் செய்யும் முறைகளை முன்பே எழுதியுள்ளேன்



பொய்ச்சாட்சி சொன்னேன்...!

ஸ்ரீரங்கம் நரஸிம்மன்

"முரளி வந்தானா?" என்று கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தேன். "இல்லையே!" என்று பதில் வந்தது. 'இந்தப் பயல் எங்கே போயிருப்பான்?' என்று யோசித்தவாறு என் அறையில் போய் உட்கார்ந்து ஏதோ ஒரு புஸ்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தேன். வாஸ்தவத்தில் ஏடுகளைத் தான் தள்ளிக் கொண்டிருந்தேனே தவிர, ஒரு வரி கூடப் படிக்கவில்லை. 'அவனைக் காணவில்லையே! ... சாப்பிட்டானோ, இல்லையோ? இந்த ஊரை விட்டே போயிருப்பானோ?' என்றவாறு என் சிந்தனை முரளியைப் பற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. முரளி யார்?

அவனுக்குச் சுமார் பதின்மூன்று வயது இருக்கும். தாய் தந்தையற்ற ஒரு அநாதை. எனக்கும் அவனுக்கும் எந்தவித உறவும் கிடையாது. களங்கமற்ற அவன் குழந்தை வதனமும், புத்திசாலித்தனமும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன. எல்லாவற்றையும் விட அவன் பெருந்தன்மை! குழாய் ஜலத்தைக் குடித்துக் கொண்டு பட்டினி கிடப்பானே தவிர, 'பசிக்கிறது' என்று சொல்ல மாட்டான்! நாலு நாட்களாக அவனைக் காணவேயில்லை.

"எங்கே போயிருப்பான்? வயிற்றுக்கு இல்லாமல் பசிக்குப் பலியாயிருப்பானோ?... சே! உலகம் இன்னும் அவ்வளவு மோசமடைந்து விடவில்லை" என்றவாறு ஏதோ என்னுள் தோன்றிக்கொண்டேயிருந்தது.

"ஸார்!" என்றொரு குரல் கேட்டது.

"யாரது?" என்றேன்.

"நான்தான் ஸார், கணபதி!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தார் அச்சப்போர் கணபதி. இந்த அடைமொழி அவருக்கு நான் சூட்டியது அல்ல; வெகு நாட்களாகவே வழக்கத்தில் இருந்து வருகிறது. ஊரில் நடக்கும் நல்லது, கெட்டது எல்லாவற்றிலும் அவர் விஷமம் இல்லாமல் இருக்காது! அவரைப் பார்த்ததுமே எனக்கு என்னவோ போலிருந்தது. 'இந்த மனுஷன் எங்கேடா வந்தான்?' என்று நினைத்தபடி, "வாருங்கள்!" என்றேன். அறைக்குள் வந்து நாற்காலியில் கால்மேல் கால் போட்டபடி உட்கார்ந்து கொண்டு ஒரு புன்முறுவல் பூத்தார்.

"என்ன விசேஷம்?" என்றேன்.

"விஷயம் தெரியுமோன்னோ?"

"என்ன விஷயம்?" என்று ஒன்றும் புரியாமல் கேட்டேன்.

"அதுதான் ஸார், ஒரு பயலை இழுத்துக் கொண்டு அலைந்தீர்களே?" என்றார் அவர் குரலில் ஒருவித அலட்சியத்துடன்.

"யார், முரளியையா சொல்லுகிறீர்கள்?"

"ஆமாமாம்!" என்றார் வெறுப்பும் அருவருப்பும் கலந்தவாறு.

என் வயிற்றை ஏதோ சங்கடப் படுத்தியது. என் சந்தேகம் சரியாகி விட்டதா?

"முரளிக்கு என்ன?" என்றேன் மிகுந்த ஆதுரத்துடன். இலேசாகச் சிரித்துக் கொண்டார். 'வெற்றிப் புன்னகை' என்கிறோமே, அதைப் போலிருந்தது, அப்பொழுது அவர் சிரித்த சிரிப்பு. ஒன்றும் புரியாத வகையில் அவர் திருமுகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

"நான் அப்பொழுதே சொன்னேன்; என் வார்த்தையை லட்சியம் செய்தீர்களா?" என்றார். எனக்கு ஒரே எரிச்சலாக வந்தது. என்றாலும் எதையும் காட்டிக் கொள்ளாமல், "என்ன விஷயம்?" என்றேன் சாந்தமாக.

"பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும், ஸார்! பாம்புக்குப் பால் வார்த்தால்?" என்று கேட்டுவிட்டு என் முகத்தில் எதையோ தேடினார். இருந்த பொறுமையை யெல்லாம் வரவழைத்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தேன். "பயல் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிறான்!" என்றார்.

"யார் முரளியா?"

"எல்லாம் அந்தக் கழுதையைப் பற்றித் தான் சொல்லுகிறேன்!..." என்றார் கணபதி சிறித கோபத்துடன்.

"எதற்காக?"

"வேறு எதற்காக? திருடியதற்காக!" என்றதும் என்னைத் தூக்கிவாரிப் போட்டது. உடல் முழுவதும் மின்சாரம் போன்ற ஒரு சக்தி பாய்ந்தோடியது. ஒரு கணம் என் செவிகளையே என்னால் நம்ப முடியவில்லை.

முரளி திருடினானா? இது என்ன வேடிக்கைக் கூத்து! பழி ஓரிடம், பாவம் ஓரிடமா? ஒரு கணம் அவனுடைய நிஷ்களங்கமான பால் வடியும் வதனம் என் கண்முன் தோன்றியது. கண்களில் நீர் வழிய, 'ஸார்! நான் திருடவேயில்லை, ஸார்! எனக்கு யாருமில்லையென்று எல்லோரும் இப்படிச் செய்கிறார்கள், ஸார்!

எப்படியாவது என்னை விடுவித்து விடுங்கள், ஸார்!...' என்று கெஞ்சுவது போலிருந்தது. கணபதியைப் பார்த்து, "நீர் சொல்லுவது வாஸ்தவம்தானே?" என்றேன்.

"இன்னுமா உங்களுக்குச் சந்தேகம்? போலீஸ் ஸ்டேஷனில் போய்ப் பார்த்தீர்களானால் தெரிகிறது! அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறான், ஸார்!..." என்றார் ஏளனமாக. 'அட, இரக்கமற்ற ஜன்மமே!' என்று நினைத்துக் கொண்டேனே தவிர அவரிடம் மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. சட்டென்று எழுந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன்.

'என் பிள்ளையை நீங்கள் கூடக் கைவிட்டு விட்டீர்களே? சாகும்பொழுது அவ்வளவு தூரம் சொன்னேனே!' என்று முரளியின் தந்தை துரைசாமி கேட்பது போலிருந்தது.

துரைசாமி இறந்து ஒரு மாதம் இருக்கும். அவருடைய அந்திம காலத்தில் நான் ஒருவன் தான் அவர் பக்கத்தில் இருந்தேன். தெருக்காரர்கள் கட்சி கட்டிக் கொண்டு அவரைத் திரும்பிப் பார்க்காமலே இருந்தார்கள். அவ்வளவு தூரத்துக்கு ஜனங்களின் பிரியத்தைச் சம்பாதித்திருந்தார் துரைசாமி!

பொய், பித்தலாட்டத்தைத் தவிர மனுஷனுக்கு வேறு எதுவும் தெரியாது. அவர் பல உத்தியோகங்களைப் பார்த்து விட்டார். எங்கும் கையாடல்!

கணபதி மட்டும் இளைக்கப் பட்டவரல்ல. துரைசாமியைத் தூக்கியடிக்கக் கூடியவர் தான். இருவரும் ஒரு காலத்தில் ஒன்றாய் இழைந்தவர்கள். ஒரே இடத்தில் வேலை பார்த்து வந்தார்கள். ஒன்றாகவே திட்டமிட்டு ஒரு தொகையை ஏப்பமிட்டனர். தக்க ருசு இல்லாததால் சிறைவாசத்திலிருந்து தப்பினார்களே தவிர, இருவரும் ஏககாலத்தில் வேலையை இழக்க நேரிட்டது. துரைசாமி, கணபதியைக் குறை கூறினார்; கணபதி, துரைசாமியை வசை பாடினார். இருவரும் சுயமாக ஏதேதோ வியாபாரம் செய்து கொண்டிருந்தனர்.

துரைசாமிக்கும் கணபதிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. துரைசாமி யாரையும் லட்சியம் செய்ய மாட்டார். தெருவில் யாருடனும் பேச மாட்டார். எங்கேயோ போவார், வருவார்; எப்பொழுதும் ஒரு அவசரத் தோற்றத்திலேயே காணப்படுவார். கணபதி அப்படியல்ல. தெருவிலுள்ள ஒவ்வொருவருடனும் குழைந்து குழைந்து பேசுவார். உலகத்து அக்கிரமங்களையெல்லாம் எடுத்துச் சொல்லுவார். துரைசாமியின் போக்குக்காக முதலைக் கண்ணீர் வடிப்பார். ஆனால் இருவரிடத்திலும் தெருவாசிகளுக்கு உள்ளூறப் பயம். எனக்குக் கணபதியிடம் மட்டுந்தான் பயம்.

நான்கு வருஷங்களுக்கு முன்பு துரைசாமியின் மனைவி இறந்து விட்டாள் என்று காலமாகிவிட்டாள். அப்பொழுது முரளிக்குச் சுமார் ஏழு வயது இருக்கும். அது முதல் அவனை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தார் துரைசாமி. முரளியும் ரொம்பக் கெட்டிக்காரன். தன் நிலையறிந்து, தகப்பனாரின் சுபாவமறிந்து அதற்கேற்றாற் போல நடந்து கொண்டான். துரைசாமி இறக்கும் பொழுது அவன் நான்காம் படிவத்தில் படித்துக்கொண்டிருந்தான். படிப்பில் மிகவும் சூடிகையான பையன்; ஒவ்வொரு பாடத்திலும் எழுபதுக்குக் குறையாமல் மார்க்குகள் வாங்கக் கூடியவன்.

ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு நாள் இரவு, "ஸார்!" என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தான். அப்பொழுது ஒரு வார காலமாகவே துரைசாமி உடல்நலமின்றிப் படுத்துக் கொண்டிருந்தார். "என்ன, முரளி? ஏதாவது விசேஷமுண்டா?" என்றேன்.

"அப்பா உங்களைக் கூப்பிட்டுக் கொண்டு வரச் சொன்னார்..." என்றான் முரளி.

"அதுசரி; ஏண்டா அழுகிறே?" என்றேன்.

"அப்பாவைப் பார்த்தால் பயமாயிருக்கு, ஸார்!..." என்று கண்ணைக் கசக்கினான்.

உண்மையில் நான் சென்று பார்க்கும் பொழுது துரைசாமியின் நிலைமை மிகவும் மோசமாகத்தான் இருந்தது. ரொம்பவும் சிரமப்பட்டு, "வாருங்கள்" என்றார்.

"எப்படி இருக்கு?" என்றேன்.

"எல்லாம் ஆச்சு! யமன் எருமையில் ஏறி உட்கார்ந்து விட்டான். இன்னும் சற்றைக்



கெல்லாம் இங்கு வந்து விடுவான். அதற்குள் உங்களைப் பார்க்க வேண்டுமென்று... எனக்காக ஒரு உபகாரம் செய்வீர்களா? எப்படியாவது இந்த முரளியை ஏதாவது அநாதை ஆசிரமத்தில் சேர்த்து விடுவீர்களா? இன்னும் இரண்டு வருஷங்கள் எப்படியாவது படித்து விட்டானானால்..." என்றார். மேற்கொண்டு பேச முடியாமல் அவர் மூச்சு வாங்கியது.

"என்னால் முடிந்ததை அவனுக்குச் செய்கிறேன்..." என்றேன்.

"அப்படிச் சொல்லக் கூடாது. எப்படியாவது ஒரு அநாதைப் பள்ளிக்கூடத்தில் அவனைச் சேர்த்துவிட வேண்டும். அவன் தெருவில் நிற்கக்கூடாது!..." என்றார் கெஞ்சாக் குறையாக. நானும் "சரி!" என்றேன். அந்தத் திருப்தியுடன் அன்றே கண்ணை மூடினார் துரைசாமி.

பிறகு ஒரு வாரம் வரையில் முரளியை என் வீட்டிலேயே வைத்திருந்தேன். யார் யாரிட

உபாத்தியாயர் (போர்டு எழுதியவரைப் பார்த்து):—பள்ளிக்கூடம் என்று எழுதச்



சொன்னால் பள்ளிகூடம் என்று எழுதி யிருக்கிறீரே. 'க்' எங்கே? உம். நீட்டு கையை......!

மெல்லாமோ சிபாரிசுக் கடிதம் பெற்றுக் கொண்டு இரண்டு மூன்று அநாதைப் பையன்கள் பள்ளிக் கூடங்களுக்கு அழைத்துச் சென்று அவனைச் சேர்க்க முயன்றேன். எல்லா இடங்களிலும் ஏற்கனவே நிரம்பி விட்ட தாகவும், முடிந்தால், அடுத்த வருஷம் பார்க்கலாமென்றும் சொன்னார்கள். அப்புறம் அசலூர்களிலும் சில இடங்களில் முயன்று பார்த்தேன். ஒன்றும் பயனில்லை. 'இவனை என்ன செய்வது?' என்ற பிரச்னையே எனக்குப் பெரிதாகி விட்டது.

''உங்களுக்கு ஏன் ஸார், தலையெழுத்து?... அவனவன் விதிப்படி நடக்கிறது! அப்படியே சிரமப்பட்டு எங்கேயாவது சேர்த்தாலும் இது மாதிரி பசங்கள் ஒழுங்காயிருக்கும் என்கிறீர்களா?....அங்கே எதையாவது திருடி விட்டு உங்களுக்குக் கெட்ட பெயர் கொண்டு வந்து விடுவான்! ஏதாவது ஹோட்டலில் வேலை செய்யட்டுமே. வேளா வேளைக்குச் சாப்பாடாவது கிடைக்கும்!'' என்று இரண்டு மூன்று தடவைகள் எனக்கு உபதேசித்தார் கணபதி.

''எனக்கு வேலை வேண்டாம், ஸார்! எப்படியாவது இன்னும் இரண்டு வருஷங்கள் நான் படித்துவிடுகிறேன், ஸார்!'' என்றான் முரளி. ''பார்க்கலாம்டா!'' என்று சொல்லி விட்டு இன்னும் யார் யாரிடமெல்லாமோ யோசனை கேட்டுக் கொண்டிருந்தேன்.

தகப்பனார் இறந்த பிறகு சுமார் பத்து தினங்கள்தான் என் வீட்டில் அவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப்புறம் தினம் ஒருமுறை வருவான். எங்கே சாப்பிடுவான், எங்கே படுத்துக் கொள்வான் என்பதே தெரியாது. சில நாட்களில் அவனைப் பார்த்தால் மிகவும் பரிதாபமா யிருக்கும். ''சாப்பிடு கிறாயாடா?'' என்றால், மிகுந்த சங்கோசத்துடன் தலையை ஆட்டுவான். என்னைக் கடவுள் நல்ல நிலையில் வைத்திருக்க வில்லை. எங்கள் வீட்டிலுள்ளவர்களின் அரைவயிற்றை நிரப்புவதே எனக்குத் திண்டாட்டமா யிருக்கும்போது முரளிக்கு என்றால் எப்படிப் படிப்புக்கு உதவி செய்ய முடியும்?

நாலைந்து நாட்களாக அவனை இந்தப் பக்கமே காணவில்லை. அவனைப் பற்றியே நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் கணபதி இந்தத் தகவலைக் கொடுத்தார்!

'முரளியும் இப்படிச் செய்வானா?' என்று நினைத்தவாறு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றேன். இன்ஸ்பெக்டர் எனக்குப் பரிச்சயமானவர். முரளியைப் பற்றி நான் பேச ஆரம்பிக்கும்பொழுதே ''லாக்-அப்பில் இருக்கிறானே! போய்ப் பாருங்கள்'' என்றார்.

என் வரவை எதிர்பார்த்தவன் போல் கம்பிகளைப் பிடித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் முரளி. என்னைக் கண்டதும் அவன் கண்கள் கலங்கி விட்டன. ''எப்படியடா இங்கு வந்து சிக்கிக் கொண்டாய்?'' என்றேன்.

''திருடினேன் ஸார்!'' என்றான்.

''ஏண்டா திருடினாய்? பசித்தால் என்னிடம் வரக் கூடாதாடா?''

''பசித்ததால் திருடவில்லை ஸார்!''

''பின்னே?''

முரளி சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். பிறகு மெதுவான குரலில் ''அன்று இன்ஸ்பெக்டர் உங்களிடம் சொன்னாரே? அதற்காகத்தான் திருடினேன். அதுவும் மாட்டிக் கொள்ளும்படியான வகையில் நான் திருடினேன்!'' என்றான்.

ஒரு வாரத்துக்கு முன்பு இன்ஸ்பெக்டரிடம் பேசிக் கொண்டிருக்கையில், முரளியைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கான சீர்திருத்தப் பள்ளியில் அவனை எப்படியாவது சேர்த்துவிட முடியுமாவென்று அவரிடம் கேட்டேன்.

''குற்றம் புரிந்தவர்களைத்தான் ஸார், அங்கு அனுப்ப முடியும். மற்றவர்களை அங்கே சேர்க்க முடியாதே!'' என்று கூறினார் இன்ஸ்பெக்டர். இதற்கு என் மனம் துளியும் சம்மதிக்கவில்லை. அவனை அழைத்துக் கொண்டு திரும்பி விட்டேன்.

''இதற்காகத்தான் ஸார், திருடினேன்! எப்படியாவது படிக்க வேண்டும் என்ற ஆசையினால்தான் ஸார் திருடினேன்!'' என்றான்.

''பையன் என்ன சொல்லுகிறான்? தான் திருடவே யில்லையென்று சாதிக்கிறானா?'' என்று கேட்டவாறு இன்ஸ்பெக்டர் அங்கு வந்தார். நான் பதில் சொல்லும் நிலையில் இல்லை. அவரே தொடர்ந்து, ''நீங்கள் ஒரு உபகாரம் செய்யணுமே! பையன் திருடியதைப் பலர் பார்த்திருக்கிறார்கள். ஆனால் ஒருவராவது சாட்சி சொல்ல முன் வரவில்லை. தயவுசெய்து நீங்கள்தான் வந்து இந்தக் கேஸில் சாட்சி சொல்லவேண்டும்!'' என்றார்.

நான் முரளியைப் பார்த்தேன். ''தயவு செய்து ஒப்புக் கொள்ளுங்கள், ஸார்!'' என்று அவன் கண்கள் கெஞ்சின. இன்ஸ்பெக்டரிடம் ''ஆகட்டும்!'' என்றேன்.

'எவ்வளவு பெரிய பழியை அவன் தலையில் சுமத்தினால் என்ன? முரளியின்மீது குற்றம் கூறி என்ன பயன்? இந்தப் பாழும் சமூகம் அநாதரவான பிள்ளை முரளிக்குக் கல்வி வசதியளிக்க முன் வரவில்லையே? அவனுக்குப் படிப்பின்மீதுள்ள ஆசை எத்தகைய பயங்கர முடிவுக்கு அவனை வரத் தூண்டி விட்டது?' என்று எண்ணிப் பச்சாத்தாபப்பட்டேன். ஆனால் முரளி மகிழ்ச்சியோடு எனக்கு விடை கொடுத்தனுப்பினான். என் கண்கள் கலங்கின.

அந்நியச் செலாவணி பெற அருமையான வழி!



விளையாட்டு மன்னர்கள் (14)

டென்னிஸ் ஆடும் உதயகுமார்

பள்ளிக்கூட மாணவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் எதிர்காலக் கனவுகளைப் பகிர்ந்து கொள்வதுண்டு. 'நான் இன்ஜினீயராக வேண்டும், நான் டாக்டராக வேண்டும்' என்று கனவு காண்பார்கள். டென்னிஸ் விளையாட்டுக் கலையிலே தேர்ந்த மாணவனாக இருந்து, 'நான் அகில இந்திய டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்று, விம்பிள்டன் போட்டியில் கலந்து கொள்வேன்' என்று கனவு கண்டால் அதில் வியப்பில்லை.

டென்னிஸ் விளையாட்டுக்காரர்கள் ஒவ்வொருவருக்குமே இந்த ஆசை உண்டு. அப்படி விம்பிள்டனில் போய் விளையாடினால் ஜென்ம சாபல்யமே அடைந்து விட்டதாக டென்னிஸ் கலைஞர்கள் கருதுவதுண்டு.

இங்கிலாந்திலுள்ள விம்பிள்டன், டென்னிஸ் விளையாட்டுக்காரர்களுக்கு மகம்மதியர்களின் புண்ணிய க்ஷேத்திரமான மெக்காவைப் போல் விளங்குகிறது. 1868ம் ஆண்டில் விட்மோர் ஜோன்ஸ், ஹென்றி ஜோன்ஸ் இவர்களால் துவங்கப்பட்ட விளையாட்டுச் சங்கம், 'அகில இங்கிலாந்து டென்னிஸ் கிளப்பாக' உருவாகி, இன்று அகில உலகிலும் பிரசித்தி பெற்றுத் திகழ்கிறது. அமெரிக்காவில் பாரஸ்ட்ஹில்ஸ் எப்படி டென்னிஸுக்குப் பிரசித்தமாக விளங்குகிறதோ, அதைப் போல் இங்கிலாந்திலுள்ள விம்பிள்டனும் அகில உலக டென்னிஸ் விளையாட்டுக்காரர்களைக் கவர்ந்துள்ளது.

இவ்வருஷம் விம்பிள்டனில் நடக்கும் போட்டியைக் காணச் செல்லவிருப்பவர்களில் 16,000பேர்கள் இடம் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள் என்றால் இந்தவிளையாட்டைக்காண வேண்டும் என்பதில் ஆங்கிலேயர்களுக்குள்ள ஆர்வத்தையும் இந்த விம்பிள்டனின் மகத்துவத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

விம்பிள்டனில் நடக்கும் டென்னிஸ் பந்தயத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியாவிலிருந்து சென்ற டென்னிஸ் விளையாட்டுக்காரர்களில் திரு ஏ. ஜே. உதயகுமாரும் ஒருவர். இவர் மே மாதம் பதினைந்தாம் தேதி இங்கிலாந்துக்குப் பயணமானார்.

கடல் கடந்து இந்தியாவின் பெருமையை நிலைநாட்டச் சென்றுள்ள திரு ஏ. ஜே. உதயகுமார் பங்களூரைச் சேர்ந்தவர். இருபத்தியேழு வயது இளைஞரான இவர் பிரஸிடென்ஸி காலேஜில் கல்வி கற்று பி. எஸ்ஸி. பட்டம் பெற்றிருக்கிறார். இவர் தற்பொழுது ஹிந்துஸ்தான் மோட்டார் கம்பெனியில் பணியாற்றி வருகிறார்.

திரு உதயகுமார் இளைஞராக இருந்தாலும் அருமையான விளையாட்டுக்காரர். இந்தியாவில் இவருக்கு டென்னிஸ் ஆட்டத்தில் நான்காவது ஸ்தானம் கிடைத்திருக்கிறது. இவர் பம்பாய், டில்லி, பங்களூர்முதலிய இடங்களில் நடந்த டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுத் தம் பெயரை டென்னிஸ் உலகில் நிலைநிறுத்தியிருக்கிறார்.

விம்பிள்டனில் கலந்து கொள்வதற்கு முன்னால் இங்கிலாந்திலுள்ள பல இடங்களில் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும். இதில் தேர்ந்தவர்களே பிறகு விம்பிள்டன் வெற்றிப் பந்தயத்தில் கலந்து கொள்வார்கள். திரு உதயகுமார் லோதர் டென்னிஸ் ஆட்டப் போட்டியில் குமாரி எச். கிளார்க்கோடு சேர்ந்து ஆடிப் புகழ்மாலை சூடிக் கொண்டிருக்கிறார்.


டென்னிஸ் கலைஞர் திரு உதயகுமாரின் ஆட்டம் இன்று சோபையுடன் திகழுவதற்கு உதவியவர்கள் திரு வி. மோகன், திரு சேஷாத்ரி, திரு எம். வி. அப்பாராவ் ஆகியவர்களே. அவர்களை இவர் மிகுந்த நன்றியுடன் என்றும் நினைவுபடுத்தி வருகிறார்.

விம்பிள்டன் போட்டியில் இந்தியாவின் சார்பாக, இந்திய டென்னிஸ் முதல்தர ஆட்டக்காரர் திரு கிருஷ்ணன், திரு நரேஷ்குமார், திரு அக்தர் அலி, திரு உதயகுமார், இந்திய இளைஞர் வெற்றி வீரர் பிரேம்ஜித்லால் முதலியவர்கள் கலந்து கொள்ளச் சென்றிருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். பிரபல ஆசிரியர் திரு கிப்ளிங் விளையாட்டுக் கலைஞர்களுக்கு இருக்க வேண்டிய பண்பை விளக்கியிருப்பதை நினைவுபடுத்துகிறோம். 'நீங்கள் வெற்றியோ, தோல்வியோ எதுஅடைந்தாலும் இரண்டையும் சம நோக்குடன் பார்க்கும் சித்தம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்' என்றுகூறியிருக்கிறார்.

இந்தப் பண்புடன் நம் இந்திய டென்னிஸ் விளையாட்டுக் கலைஞர்கள் திகழ்ந்தால் அவர்களுக்கு வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

—குண்டுமணி



திரு ஏ. ஜே. உதயகுமார்





கல்யாண காலத்தில் மணப் பெண்ணிற்கும் தோழிகளுக்கும், ஏனைய குடும்பத்தினருக்கும் கொடுப்பதற்கு ஏற்றதான பட்டுப் புடவைகள் எடுப்பது சிரமமான காரியந்தான்.

ஆனால், நாட்டின் பல பாகங்களிலிருந்து மிக நேர்த்தியானதாகவும் நியாய விலையுள்ளதாகவும், எங்களிடமிருக்கும் கும்பகோணம், காஞ்சீபுரம், ஆரணி, பனாஸ், காஷ்மீர் பட்டுப் புடவைகளிலிருந்து உங்களுடைய தேவைகளை சுலபமாக பூர்த்தி செய்துகொள்ளலாம்

ஹாண்ட்லூம் ஹவுஸ்

9, ரட்டன் பஜார், சென்னை-3

சட்டநாதரின் சந்தேகம்

எஸ். வைத்தியநாதன்

ஆதவன் கீழ்த்திசையில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். ரயில் வண்டி கோவிந்தபுரம் ஸ்டேஷனை அடைந்து நின்றது. ஸ்டேஷனில் ஏற்பட்ட சந்தடியால் கண் விழித்துக் கொண்ட வக்கீல் சட்டநாதன் எழுந்து படுக்கையைச் சுருட்டிக் கட்டினார், அவசரமாக. அதை ஒரு கையிலும், பெட்டியை மற்றொரு கையிலுமாக எடுத்துக் கொண்டு விரைவாக இறங்கினார்.

"ஸார், கூலி ஸார்! நான் எடுத்துக்கிட்டு வரேன் ஸார்!"

அந்தக் குரலைக் கேட்டதும் அதிர்ச்சியுற்று அந்தக் கூலிக்காரச் சிறுவனின் முகத்தை உற்று நோக்கினார் சட்டநாதன், அவர் நெற்றி நரம்புகள் புடைத்தன. கண்கள் சிவந்தன. கோபம் தாங்காமல் அவர் சரீரமே ஆடியது! "பயலே! என்ன துணிச்சல் உனக்கு! என்னிடமே வந்து 'கூலி வேணுமா?' என்கிறாயா?" என்று கத்தினார்.

சிறுவன் கந்தனும் அவரைப் புரிந்து கொண்டான். என்றாலும் அதிர்ச்சியடையவில்லை.

"ஸார்! கோவிச்சுக்காதீங்க! வந்து, நான்" என்று வினயமாக ஆரம்பித்த அவனை இடைமறித்த சட்டநாதன், "பேசாதேடா. என்னிடமே உன் கை வரிசையைக் காட்டினவன் அல்லவா நீ? உன்னைத் தீவாந்தரத்துக்கு அனுப்ப வேணும்டா! தூக்கில் போடணும்டா. என் கண் முன்னால் நிற்காதேடா!" என்று சீறிவிட்டு நடக்கலானார்.

"ஸார், ஸார்!" என்று தீனமாக விளித்தவாறு அவரைப் பின் தொடர முயற்சி செய்தான் கந்தன்.

"ஏலே! மறுபடியும் ஏதாவது தேட்டை போடலாம் என்று பார்க்கிறாயா? என் முகத்தில் விழிக்காமல் போகிறாயா, போலீஸில் பிடித்துக் கொடுக்கட்டுமா?" என்று கர்ஜித்தார் சட்டநாதன். போலீஸ் என்ற சொல்லைக் கேட்டதும் சிறுவன் நடுநடுங்கி நின்று விட்டான். அவனை வெறுப்புடன் நோக்கிவிட்டு விர்ரென்று போய்விட்டார் சட்டநாதன்.

* * *

சட்டநாதன் ராமபுரம் நகரில் பிரசித்தி பெற்ற கிரிமினல் வக்கீல். ஒருநாள் மாலை, ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட்டிலிருந்து குதிரைவண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த அவர் கடைத்தெரு முனையில் ஒரு சிறு கும்பல் சேர்ந்திருப்பதைக் கண்டார். "ஐயோ! அடிக்காதீங்க. ஸார்!" என்று பரிதாபமாக அலறும் சிறுவனின் குரல் ஒன்றும் அவர் காதில் விழவே வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கினார். கும்பலை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தார். கந்தல் ஆடையும், பரட்டைத் தலையும், பலமற்ற சரீரமுமாகக் காட்சியளித்த பதினைந்து வயதுச் சிறுவன் ஒருவன், ஓர் போலீஸ்காரரின் பிடியில் அகப்பட்டுக் கொண்டு உதை தின்று ஓலமிட்டுக் கொண்டிருந்தான்.

"என்ன அப்பா, கான்ஸ்டபிள்! எதற்காக அவனை அடிக்கிறாய்?" என்றார் சட்டநாதன் கம்பீரமாக.

அவரைக் கண்டதும் கான்ஸ்டபிள் அடிப்பதை நிறுத்திவிட்டு, அருகிலிருந்த ஒருவரைச் சுட்டிக்காட்டி "இவரைப் பிக்-பாக்கெட் அடிச்சுட்டான் இந்தப் பயல்!" என்றார்.

"அதனால் நீ எதற்காக அவனை அடித்துக் கொல்கிறாய்?"

"திருட்டு நாய்களுக்கெல்லாம் புத்தி கற்பிக்க வேணாமா?"

"நீ எதற்காக அப்பா அவனுக்குப் புத்தி கற்பிக்கிறது? உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது அதற்கு? சின்னஞ் சிறு பையனைப் பேய் அறைகிற மாதிரி அறைகிறாயே!"

போலீஸ்காரர் பதில் சொல்ல முடியாமல் திகைத்துத் திணறினார்.

சட்டநாதன் சிறுவன் பக்கம் திரும்பினார். "ஏண்டா, தம்பி! திருடினாயா, இவர் பர்ஸை?" என்று கேட்டார்.

"ஆமாம், ஸார்!"

உண்மையை மறைக்காமல் கூறி விட்ட அவன் குணம் அவரைக் கவர்ந்தது. "திருடலாமாடா? திருடுவது பிசகு என்பது உனக்குத் தெரியாதா?" என்றார், அவன் பரம்பரைத் திருடன் இல்லை என்ற நிச்சயத்துடன்.

"தெரியுங்க. இது வரையில் நான் திருடினதே இல்லீங்க! இன்னைக்கு வேறு வழியில்லாமல் அப்படிச் செய்து விட்டேன்."

"வேறுவழியில்லாமல் செய்துவிட்டாயா?"

"ஆமாங்க. என் தாயார் சீக்காளி. அவர்களுக்கு என்னைத் தவிர வேறு நாதி கிடையாது! நாட்டு வைத்தியர் பால்தான் ஆகாரம் கொடுக்கணும்னு பத்தியம் வைச்சுட்டாரு. ரெண்டு மூணு நாளா எனக்குக் கூலி வேலை கூடக் கிடைக்கல்லே. நான் பட்டினி கிடந்தாலும் தாயாரையாவது காப்பாற்றி விடணும்னு பிச்சை எடுக்கக் கூடத் துணிந்தேனுங்க. ஆனால் எல்லாரும் திட்டி விரட்டறாங்க. காலணாகூடப் பிச்சை கிடைக்கவில்லை. அம்மாவின் நிலைமையை நினைச்சா துக்கமா வந்தது. திருடியாவது அவங்களைக் காப்பாத்திவிடணும்னு தீர்மானிச்சுத்தான் இவர் பையிலிருந்து பர்ஸை எடுத்து இப்படி மாட்டிக்கிட்டேனுங்க!" என்று அழுதான்.

பையனின் கதை சட்டநாதனுடைய உள்ளத்தை உருக்கி விட்டது. கான்ஸ்டபிளை நோக்கி, "கேட்டாயா, அப்பா! எவ்வளவு பரிதாபத்துக்குரியவன் இவன்? சந்தர்ப்பத்தின் காரணமாகத்தான் இந்தத் திருட்டைச் செய்திருக்கிறான்! எச்சரித்து விட்டு விடலாம்!" என்றார்.

கைக்கெட்டிய இரையைப் பருந்துவிடுமா? அதோடு அந்தக் கேஸில் சட்டநாதன் குறுக்

கிட்டுத் தம்மைக் கண்டிக்கும் தோரணையில் பேசியது அவருக்கு அவர் மேல் எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது. எனவே, ''எப்படிங்க விட முடியும்? எனக்கு அதிகாரமில்லே!'' என்றார் போலீஸ்காரர் கேலியாக.

''அடிக்கும் அதிகாரத்தை நீயாக எடுத்துக் கொண்டது போல், அவனை விடுவிக்கும் அதிகாரத்தையும் எடுத்துக் கொள்ளேன்!''


'' ஒருதரம்தான் பிசகு செய்து விட்டேன். அதே பிசகை மறுபடியும் செய்யலாமா? வாடா, போலீஸ் ஸ்டேஷனுக்கு!'' என்று கான்ஸ்டபிள் சிறுவன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு கிளம்பினார்.

அனுதாபத்தின் அளவுக்கு வீம்பும் ஏற்பட்டு விட்டது சட்டநாதனுக்கு. கான்ஸ்டபிளை விறைப்பாகப் பார்த்துவிட்டு,போய்விட்டார்.

சட்டநாதன், சப்-ஜெயிலில் ரிமாண்ட் செய்யப்பட்டு விட்ட அச்சிறுவன் கந்தனுக்காகத் தாமே ஜாமீன்தாராகவும், வக்கீலாகவும் ஆகத் தீர்மானித்தார். ஜாமீன் மனுக் கொடுத்து மறுநாள் முற்பகலிலேயே அவனை ஜாமீனில் விடுதலையாக்கினார். அவன் கையில் நாலு ரூபாய் பணமும் கொடுத்து வீட்டுக்குப் போய்த் தாயாரைக் கவனிக்கும்படி சொல்லி அனுப்பினார்.

அடுத்த வாரம் அச்சிறுவனுடைய கேஸ் விசாரணைக்கு வந்தது. குற்றத்தை ஒப்புக் கொள்ளும்படி அவர் சொல்லியிருந்தாரானபடியால், கந்தன் கோர்ட்டில் தான் குற்றவாளி என்பதை ஒப்புக் கொண்டான். அவனுக்காக ஆஜரான சட்டநாதன் பிரமாதமாக வாதம் பண்ணினார். சட்டப்படி அந்தப் பையன் புரிந்தது குற்றந்தான் எனினும் அவன் குற்றம் புரிந்த சூழ்நிலையையும், சந்தர்ப்பத்தையும் வைத்துக் கொண்டு பார்த்தால், 'அவன் நிரபராதி, சமூகம்தான் கூண்டிலேற்றப்பட வேண்டியது' என்று சக்கைப் போடு போட்டார்.

'அவன் பாச உணர்ச்சியின் உத்வேகத்தினால் செய்த அந்தச் செயல் திருட்டே அல்ல. அப்படித் திருட்டுத்தான் என்று நீதிபதி கருதும் பட்சத்தில், அவனைக் கருணை உள்ளத்துடன் மன்னித்து விடுதலை செய்ய வேண்டும்' என்று விநயமாகக் கூறி வேண்டிக் கொண்டார். முதல் தடவையாகச் செய்யப்படும் குற்றத்தை மன்னித்து விடுதலை செய்யச் சட்டமும் இடம் கொடுக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டினார்.



சட்டநாதனின் அபாரமான பேச்சுத் திறன் நீதிபதியின் இயல்பான கருணை உள்ளத்தை வெகுவாக நெகிழச் செய்துவிட்டது. எனவே, அந்தச் சிறுவன் கந்தனை யாதொரு நிபந்தனையுமின்றி விடுதலை செய்து விட்டார்.

கந்தன் வக்கீலிடம் பாய்ந்தோடி வந்து நன்றிப் பெருக்குடன் விம்மினான். சட்டநாதன் அவனைப் பரிவுடன் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறி வீட்டுக்குப் போகும்படி சொல்லி விட்டு வேறு கோர்ட்டு ஒன்றில் வேலை இருந்தபடியால் அங்கே கிளம்பினார்.


அவர் உள்ளம் குதூகலத்தால் நிரம்பியிருந்தது. எவ்வளவோ கேஸில் அவர் வெற்றி பெற்றிருந்தார் என்றாலும் அந்த ஏழைச் சிறுவனுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்ததில் ஏற்பட்ட மகிழ்ச்சி வேறு எதிலும் அவருக்கு உண்டானதில்லை.

கோர்ட்டுக் காம்பவுண்டுக்கு வெளியில் வந்த அவர் பஸ்ஸுக்காக அருகிலிருந்த பஸ் நிற்குமிடத்தில் போய் நின்றார். அங்கே ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் வந்து, 'சாமி! தருமம்!' என்று இரந்தான். அவனுக்கு ஏதாவது தருமம் போடலாமென்று கோட்டுப் பையில் கையை விட்டார் அவர். அவர் கையில் தேள் கொட்டினாற் போலிருந்தது! மணிபர்ஸ் பையில் இல்லை!

பர்ஸ் எப்படி மாயமாய் மறைந்திருக்கும்? திகைப்புடன் யோசனைசெய்தார். சட்டென்று அவருக்கு ஒரு விடை கிடைத்தது. அந்தப் பையன் கந்தன் தம் அருகில் வந்து நன்றியுடன் விம்முவதுபோல் நடித்து, தாம் அவனைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கையில் பர்ஸைத் தேட்டை போட்டிருக்கிறான் என்ற முடிவுக்கு வந்தார். அங்குமிங்கும் பரபரப்புடன் அப்பையனைத் தேடினார். அவனை எங்கும் காணோம்!

அவர் உள்ளத்தில் கசப்பும் அவமானமும் மாறி மாறித் தோன்றிக் கொந்தளித்தன. அந்தப் பையன் யோக்கியமானவன் தான், சந்தர்ப்பவசத்தால் திருடி விட்டான் என்று தாம் கருதியது தவறு. அவன் பழக்கப்பட்ட, கைதேர்ந்த திருடன்தான். அவன் புளுகிலும், நடிப்பிலும் தாம் ஏமாந்து விட்டோம் என்பதை நினைக்க நினைக்க அவருக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அவன் திருடனாகவே இருந்தாலும், விடுதலை வாங்கிக் கொடுத்த தம்மிடமே தன்னுடைய கை வரிசையைக் காட்டி விட்டானே என்பதை எண்ண எண்ண அவருக்குச் சிறிதும் மனம் ஆறவே இல்லை. ஆத்திரமே அதிகரித்தது.

ஒன்பது மாதங்கள் கழித்து ஒரு கேஸின் நிமித்தம் சட்டநாதன் கோவிந்தபுரம் கோர்ட்டுக்குப் போக நேர்ந்தது. அந்தப் பையனைப் பற்றி அநேகமாக அவனை மறந்து விட்ட நிலையில் அவன் திடீரென்று அவர் முன் தோன்றி, 'கூலி வேணுமா?' என்று வேறு துணிச்சலுடன் கேட்டால் அவருக்கு எப்படியிருக்கும்?



தூரத்திலுள்ள நக்ஷத்திர மண்டலம்

அமெரிக்காவிலுள்ள, நியூயார்க் நகரத்தில் குவிந்த கூரையையுடைய ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறது. அதுதான் புகழ்பெற்ற ஹேய்டின் நக்ஷத்திர ஆராய்ச்சிசாலை. ஆகாயத்திலுள்ள அநேக கிரகங்களின் தோற்றத்தை அந்த இருட்டான அரை வட்டமான கூரையில் விழும்படி செய்யலாம்.

அண்டவெளிக்கு செல்லும் விமானத்தின் உட்புறத்தை இந்த மண்டபத்தில் விழும்படி செய்யும்போது, நீங்கள் இந்த பூமியை விட்டு நக்ஷத்திர மண்டலத்தை நோக்கி செல்வதுபோல தோன்றும். வெளிக்கதவுகளை மூடியவுடன் ராக்கெட் என்ஜின்கள் காதை துளைக்கும் சப்தத்துடன் கிளம்புகிறது. அது பூமியை விட்டு செல்ல செல்ல பூமி சிறியதாகிக் கொண்டு வருகிறது. அண்டவெளிக்கு செல்லும் பாதையில் அநேக கஷ்டங்கள் இருக்கின்றன. வேகமாக ஊளையுடன் செல்லும் எரி நக்ஷத்திரங்கள் விமானத்தில் சிறிதளவு மோதினாலும், இந்த விமானம் தூள்தூளாகிவிடும்.

இன்னும் இதுவரையில் இவைகளெல்லாம் சம்பந்தமற்ற கற்பனைகளாக இருக்கின்றன. ஒருக்கால் இம்மாதிரியான முயற்சி சீக்கிரமாக கைகூடும் என்று நம்பப்படுகிறது.

அதிசயமாக மாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகில் கூட, அன்றாட வாழ்க்கைக்கு ஒரு முக்கியமான உற்சாகத்தை அளிக்கும் பொருள்கள் உள்ளன- உதாரணமாக வில்ஸ் நேவிகட் சிகரெட்டுகள்-உயர்தர ரசிகர்களின் உற்றதுணை, என்றென்றும்......




வில்ஸ் எப்பொழுதும் உயர்ந்தவை

50 சிகரெட் கொண்ட டின் ரூ. 2-55   10 சிகரெட் கொண்ட பாக்கெட் 50 ந. பை.

(உள்ளூர் வரி தனி)

Issued by The Imperial Tobacco Company of India Limited

அன்று மாலை ஐந்து மணி ரயிலில் சட்டநாதன் ஊருக்குக் கிளம்பினார். ஸ்டேஷனுக்குள் அவர் நுழைந்தபோது கந்தன் எங்கிருந்தோ தோன்றி அவரை நெருங்கினான். "மத்தியானம் புடிச்சு உங்களை எதிர்பார்த்துக் கிட்டிருக்கேன் சார்! இந்தாங்க" என்று ஒரு மணிபர்ஸை நீட்டினான்.



அவர், "ஏய்! அயோக்கிய சிகாமணி! மறுபடியும்" என்று வாக்கியத்தை முடிக்க முடியாமல் திணறினார்.

"கோவிச்சுக்காதீங்க சார்! கொஞ்சம் பொறுமையா கேளுங்க. உங்க மணிபர்ஸை எப்படியும் உங்களிடம் சேர்த்துடணும்னு ஜாக்கிரதையாக் காப்பாற்றி வைச்சிருக்கேன். அதிலிருந்த பணத்தைச் செலவழிச்சுட்டதினால் அந்தத் தொகையைச் சேர்த்துக்கிட்டு உங்களிடம் வரலாம்னு இருந்தேனுங்க! அதிலிருந்தது இருபத்தெட்டு ரூபாய். இருபத்தஞ்சு ரூபாய் சேர்த்து விட்டேனுங்க. அது இந்தப் பர்ஸிலே இருக்குது. மீதி மூணு ரூபாயையும், இன்னும் கொஞ்ச நாளில் சேர்த்து உங்களிடம் கொண்டு வந்து கொடுக்கிறேனுங்க! இந்தாங்க" என்று பர்ஸை நீட்டினான் சிறுவன்.

அவர் திகைப்புடன் குழம்பியவாறு, "எதுக்காகடா பர்ஸைத் திருடிவிட்டு அப்புறம் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வருகிறாய்?" என்று ஆரம்பித்ததும் அவன் இடைமறித்தான் :—" ஸார்! நான் திருடலீங்க! என்னை ஜெயிலிலிருந்து தப்பிக்க வைச்சவராகிய உங்களிடம் நான் திருடுவேனுங்களா? எனக்கு ஜாமீன் கொடுத்து நாலு ரூபாய் இனாம் வேறு கொடுத்த தர்மப் பிரபுவாகிய உங்களிடமா நான் திருடுவேன்!......"

"திருடவில்லையா! இந்தப் பர்ஸ் பின்னே எப்படி உன்னிடம் வந்தது?"

"என்னைக் கோர்ட்டார் விடுதலை செய்த அன்றைக்கு, என் தாயாருக்கு உடம்பு சாஸ்தியா ஆயிட்டுதுங்க! அன்றைக்குக் காலையிலேயே வைத்தியர், அம்மாவைப் பட்டணம் ஆஸ்பத்திரிக்கு அழைச்சுக்கிட்டுப் போனால், ஒருவேளை பிழைச்சாலும் பிழைப்பாங்க, நம்ப ஊரிலே அவுங்களுக்கு வேறே வைத்தியம் கிடையாதுன்னு சொல்லிட்டாரு! எனக்கு ரொம்பத் துக்கமாயிருந்தது. அதே கவலையுடன் கோர்ட்டை விட்டு மெதுவாக வெளியே வந்தேனுங்க. கோர்ட்டுக்கு வெளியே ஒரு வேப்பமரம் இருக்குதுங்களே, அதற்குக் கீழே இந்தப் பர்ஸ் கிடந்ததுங்க! எடுத்துப் பிரிச்சுப் பார்த்தேன். இருபத்தெட்டு ரூபாய் இருந்தது. கடவுளே மனசு இரங்கி அந்தப் பணத்தை எனக்குக் கொடுத்தாரென்று சந்தோஷத்துடன் வீட்டுக்கு ஓடினேன். அன்றைக்குச் சாயங்காலம் ரயிலிலேயே அம்மாவைப் பட்டணத்துக்கு இட்டுக்கிட்டுப் போனேன். பட்டணம் பெரிய ஆஸ்பத்திரியிலே கொண்டு சேர்த்த மூணாவது நாளே அம்மா செத்து விட்டாங்க! அழுதுகிட்டே ஊருக்குத் திரும்பினேனுங்க.

"ஊருக்கு வந்தால் அக்கம்பக்கத்து வீட்டுக்காரங்களெல்லாம் 'ஏண்டா! உன்னை ஜெயிலிலிருந்து தப்ப வெச்ச வக்கீலின் மணிபர்ஸையே தேட்டை போட்டு விட்டாயாமே, துரோகி!' என்று ஏசினாங்க. அப்புறம் தான் அது உங்க பர்ஸுன்னு எனக்குத் தெரிஞ்சுது. அம்மா செத்ததற்கு நான் அழுததைவிட இந்தக் காரியம் செய்து விட்டதற்குத் தான் நான் சாஸ்தியாய் அழுதேனுங்க. தெரியாமெ செய்து விட்டாலும், உங்களுக்குப் பெரிய துரோகம் செய்து விட்டோமென்று ரொம்ப ரொம்ப வேதனைப் பட்டேனுங்க! உங்ககிட்டே வந்து நான் உண்மையைச் சொன்னாலும் நம்ப மாட்டீங்க. எம்மேலே இருக்கிற கோபத்திலே என்னைப் போலீஸில் பிடிச்சுக் கொடுத்து விடுவீங்கன்னு பயமா இருந்தது. உங்கள் பணத்தை எப்படியாவது சேர்த்துக்கிட்டு அப்புறம் உங்களை வந்து பார்த்து மன்னிப்புக் கேட்டுக்கலாம்னு தீர்மானிச்சு ஊரைவிட்டே கிளம்பி விட்டேனுங்க!

"இந்த ஊருக்கு வந்து கூலித் தொழில் செய்துக்கிட்டிருக்கேன். ஆண்டவன் புண்ணியத்திலே நெதம் பத்தணா, பன்னிரண்டணா கிடைக்குது. அதிலே இரண்டணா, மூன்றணா மிச்சப்படுத்தி இதுவரை இருபத்தைஞ்சு ரூபா சேர்த்து விட்டேனுங்க. இன்னும் மூணு ரூபாய் சேர்த்தப்புறம் ஊருக்கு வரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளார உங்களை எதிர்பாராதவிதமா இங்கே சந்திக்கும்படியா விடுச்சு. நான் அறியாமல் செஞ்ச தப்பை மன்னிச்சு விடுங்க. இந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளுங்க!" என்றான் பையன். அவன் கள்ளமற்ற உள்ளத்தை அவன் ஜ்வலிக்கும் விழிகள் பறைசாற்றிக் கொண்டிருந்தன.

பிரமித்து நின்ற சட்டநாதனுக்குத் திடீரென்று, அந்தப் பையன் விடுதலையான அன்று, தாம் கோர்ட் காம்பவுண்டைத் தாண்டும்போது காலில் கல் ஒன்று தடுக்கி விழப் போனதும், விழாமல் சமாளித்துக் கொண்டதும் ஞாபகம் வந்தது! அந்த நர்த்தனத்தின் போது தான் தம் மணிபர்ஸ் நழுவி விழுந்திருக்க வேணும் என்பதை உணர்ந்தார்! அவர் உள்ளம் உவகையால் நிரம்பியது. அந்தப் பையன் திருடவில்லை! அவனுக்காக அவர் பட்டபாடு வீண் போகவில்லை!

"டேய், பணத்தை நீயே வைத்துக்கொள். நீ யோக்கியன் என்று நான் தெரிந்து கொண்டது லட்ச ரூபாய்க்குச் சமானம்! என்னோடு ஊருக்கு வந்துவிடு! நம் வீட்டுக்கு வேலைக்காரப் பையன் ஒருவன் வேணும்!" என்றார் சட்டநாதன்! அவர் உள்ளம் தற்போது மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs
Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor : T. Sadasivam

H-114

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

